72

# ஜகன்மோகினி

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி அம்மாள்

OCT 1940
MADRAS

## ஆத்ம சக்தி

பொன்விழா நாவல் — இரண்டாம் பதிப்பு



விலை ரூ. 1/4/- (தபாற் செலவுப்பட)

ஏப்ரல்
1940

உணர்ச்சி வெள்ளம்
[தொடர்ச்சி]

அணா
2

மஹத்தான ஆரம்ப விழா

கெயிட்டியில்

•

சிறு பெண்கள் நடித்த

# விமோசனம்

ஓர்

உயர்தர தமிழ் பேசும் படம்

•

**30-3-40 முதல்**

**தினசரி 3 காட்சிகள்**

பகல் 3 மணி

மாலை 6-15 „

இரவு 9-30 „

---

ஜயா—ஹிந்துஸ்தான் பிலிம்ஸாரின் தயாரிப்பு

“ விமோசனம் “ பாடல்களை ஓடியன்

— ரிகார்டுகளில் கேளுங்கள் —

ஸ்ரீராமஜெயம்.

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

2-OCT 1940 MADRAS



| மலர் 17 | பிரமாதி ஸூ பங்குனி மீ ஏப்ரல் 1940 | இதழ் 4 |
|---|---|---|



## கடவுள் வணக்கம்

பல்லவி

சுஞ்ஞான ஒளி தருவாய் நெஞ்சில்
தூய்மை நிலைக்க அருள்வாய் உன்னைத் துதிக்க (சு)

அநுபல்லவி

அஞ்ஞானக் கடலினில் அலைந்து உன்னைமறந்து
அகங்கார மமகார அல்லல் பட்டுழலாமல் (சு)

சரணம்

ஓயாக் கவலைகொண்டு உழைத்துச் சம்சாரபந்த
நோயால் உளுத்துடலம் நொந்ததையய்யனே
வாயாரப் பஜிக்கவும் மனதாரத் துதிக்கவும்
தூயா ! ஸ்ரீ கோதாத்ம நேயா ! சித்தமிரங்கி. (சு)

ஷை கீர்த்தனை ஆத்மசக்தி பக்கம் 219-ல் வெளியாகி உள்ளது.
இதனுடைய ஸ்வரத்திற்கு உள்ளே 7-வது பக்கம் பார்க்கவும்

## முக்கிய அறிவிப்பு

1. ஏற்கெனவே வெளிவந்ததோ, ஒருவருடைய காப்பிரைட்டை பாதிக்கக்கூடியதோ, தனித்த நபர்களை பாதிக்கக் கூடியதோ, அல்லது ஆக்ஷேபகரமான விஷயங்களோ முதலியன இல்லாது சுத்தமான கற்பனையில், சிறந்த கருத்துக்களைக்கொண்ட சிறுகதை, கட்டுரைகள் முதலியன நம் சந்தாநேயர்கள் அனுப்பினால், திருப்திகரமாக விருப்பதைப் பிரசுரிக்க ஆக்ஷேபனையே யில்லை.

2. ஷை அறிவிப்புக்கு முரணாக யாரேனும் பிறர் எழுதியுள்ளதை மொழிபெயர்த்தோ, தழுவியோ, அல்லது காபிரைட்டை பாதித்தோ நமக்கு எழுதியனுப்பி நாம் அதை யறியாது பிரசுரித்தால், எழுத்தாளரின் ஷை குறைகளுக்கோ, குற்றங்களுக்கோ, நாம் ஜவாப்தாரியல்ல.

—பத்திராதிபர்.

1—4—40.

# 1940-வது வருஷத்திய கீதை

பாரதயுத்தத்தில் பார்த்தனுக்குப் பரமாத்மா பகவத்கீதை உபதேசஞ் செய்த மகிமையை நாம் படித்து இன்புற்று அதை நமது வாழ்க்கைத் துணையாகவும், பிறவிப்பிணியை நீக்கும் சார்த்தக மருந்தாகவும், மதத்தின் சாரமாகவும் பகவான் அன்புருவாயுகந்தளித்த பரமப்ரஸாதமாகவும் போற்றிப் பணிந்து அனுஷ்டித்து வருகிறோம். பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்ததெல்லாம் “பார்த்தா ! நீ உன் கடமையைச்செய். உனது தருமத்தைத் தவறாது, உன் தொழிலைக் கைவிடாது செய். என்னை பூர்ண மனத்துடன் நம்பி என்னை வழிபட்டு நான் சொல்கிறபடியே செய்தால் உன் காரியம்சித்தி பெற்று உன் கடமையில் வெற்றி பெறுவாய்” என்று வற்புறுத்தி ஒவ்வொரு அத்யாயத்திலும் சொல்வதைவிட 12-வது அத்யாயமாகிய பக்தியோகத்தில் பின்னும் பின்னும் வற்புறுத்திக் கடமையை விவரித்துக் காட்டுகிறார்.

அந்த பாகத்தைப் படித்துள்ள ஒவ்வொருவரின் இதயத்திலும், சமீபத்தில் ராம்கார் காங்கிரஸ் மகா சபையில் உலகம் போற்றும் உத்தம த்யாக மூர்த்தியாகிய மகாத்மா காந்தியடிகள் செய்த அதியற்புதமான ப்ரஸங்கம் ஊடுருவிப்பாய்ந்தது. இது 1940-வது வருஷத்திய கலியுக பகவத்கீதை என்று தோன்றாமலிருக்காது. மகாத்மாவின் மணிவாக்கிலிருந்து, “என்னை பரிபூர்ணமாக நம்பி என்னை வழி படுங்கள்.” என்ற வாச்யத்தைக் கேட்கும் போது சாக்ஷாத் பகவத்கீதாவாக்யமாகவே தோன்றியது.

எந்த ஒரு வித்தைக்கும் ஒரு அருமையான சத்குரு இல்லாது நம் பாரத நாட்டில் எக்காரியமும் நடந்ததில்லை. நாம் செய்தத் தவப்பயனால் நமக்கு அரும்பெருந் தலைவரான மகாத்மா காந்தியடிகளைக் கடவுள் அளித்திருக்கிறார். இந்த அத்யாவச்யமான சமயத்தில் மகாத்மாவைவிடச் சிறந்த சாத்வீக குருமணி, அஹிம்சா தர்மத்தைத் தன்னுயிரினும் மேலாகக்கொண்டுள்ள சத்யமான குருதேவர் நமக்குக் கிடைக்கவேமாட்டார் என்பது முக்காலும் நிச்சயம். அநாவச்யமாய் ஆத்திரங்கொண்டும் வகுப்புத்வேஷத்தீயை வளர்த்தியும், விரோதப்புகையைக் கிளப்பியும் பிரிவினைகளை உண்டாக்கி வீணான கலாட்டா செய்யாமல் நம் குருவின் சாந்தமான அஹிம்சா தர்ம உபதேசத்தின்படியே எல்லா பாரத மக்களும் ஐக்ய—பாவத்துடன் ஒற்றுமைக்கும் பெரிய சக்தியை அளிக்கும்படி பகவானை வேண்டுகிறோம். அர்த்தமற்ற ஆத்திரம் பலனைக்கொடுக்காது. ஆத்திரம் வீண் க்ஷாத்திரத்தில்தான் புகுத்தும். சாந்தமும் பொறுமையுந்தான் என்றும் மக்களுக்காக்கும் ஆதாரமாகும். ஆதலால் பகவானை நம்பி, பகவத் தூதராய் வந்துள்ள மகாத்மாவையும் நம்பி சாந்தத்துடன் அவரது அஹிம்ஸா உபதேசத்தைப் பின்பற்றுவோமாக.

01008

# க்ஷேம லாபங்கள்

புதிய வருஷம் (விக்ரம) நம் எல்லோருக்கும் அமோகமான சந்தோஷத்தையும், நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும் தீர்க்காயுளையும், சௌபாக்கியங்களையும் கொடுத்து ரக்ஷிக்கவேண்டுமாய் சர்வலோக சரண்யனின் திருவடி பணிந்து வேண்டுகின்றேன்.

மோகினியின் அன்பர்களுக்கு முக்யமான சந்தோஷச் செய்திகளைச் சொல்லும் பாக்கியம் கிடைத்திருப்பதுபற்றி நான் அளப்பரிய ஆனந்தமடைகிறேன். எம்பெருமானின் கருணா கடாக்ஷத்தினாலும், உங்களுடைய பரிபூர்ண ஆதரவினாலும், ஏஜெண்டுகளின் முயற்சியினாலும் நமது பொன் விழா நாவலாகிய ஆத்மசக்தி முதற் பதிப்பு செலவாகி, இரண்டாம் பதிப்பு அச்சாகிக்கொண்டிருக்கிறது. தமிழ் வருஷப்பிறப்பன்று வெளிவரும். இது வரையில் வாங்காத நேயர்கள், மோகினிபாலன்புகொண்டு பொன்விழா நாவலை சீக்கிரம் வாங்கி இவ்விரண்டாம் பதிப்புக்கும் பேராதரவு கொடுக்க வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

நிற்க, சென்ற வருஷம் அதாவது மோகினியின் 16-வது ஆண்டின் 1939 முதல் சஞ்சிகையாகிய கஸ்தூரி திலகம் என்ற நாவல் முதல்மாதமாகிய ஜனவரி மாதத்திலேயே இரண்டாம் பதிப்பு தயாரான சந்தோஷத்தை அப்போதே நாம் தெரிவித்திருந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இவ்வருடம் (17 வருடம்) உணர்ச்சிவெள்ளம் முதல் சஞ்சிகையை சென்ற ஆண்டைவிட அதிகம் பிரதிகள் முதலிலேயே அச்சிட்டோம். பகவானின் திருவருளாலும் உங்களுடைய ஆதரவாலும் அந்தப் பிரதிகள் பூராவும் செலவாகி அதுவும் இரண்டாம் பதிப்பு தயாராகிவிட்டது.

1929-ல் நான் எழுதிய 8-வது நாவலாகிய மாதவமணி அச்சாகிய சில மாதங்களுள் எல்லா பிரதிகளும் செலவாகி, நமது 'ஆபீஸ் காபி' கூட கைவசமில்லாததால் அதன் மறுபதிப்பு இத்தனை வருடங்களாக வெளிவர இயலாதிருந்தது. அதற்குப் பின் வெளியான பல புத்தகங்கள் அனேக பதிப்புகள் வெளியாயிருக்கையில் இது மாத்திரம் கிடைக்காதிருந்தது பல நேயர்களுக்குக் குறையாயிருந்ததை நமக்கு நேரிலும், கடித மூலமாகவும் தெரிவித்தார்கள். பழைய சந்தாநேயர் ஒருவரிடமிருந்து பிரதி இப்போது தான் கிடைத்தது. ஏற்கெனவே மிகவும் சிறியதாகவிருந்த கதையை (24 பக்கங்கள்: அணா 3.) இப்போது முற்றிலும் புதியதாக மாற்றி எழுதியிருக்கிறேன். முதல் பதிப்பைப் படித்தவர்களுக்கு இது மிகவும் புதிதாகவிருக்கும். (64 பக்கங்கள். அணா 4.) தபாற்செலவு $\frac{3}{4}$ அணா. $4\frac{3}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். தற்பாதுள்ள விலைவாசிகளின் உயர்வால் நமக்கு அடக்கமே அசாத்யமாக ஆவதை நேயர்களை கவனிக்கக்கோருகிறேன்.

நமது பொன்விழா நாவலைப் படித்த பல அன்பர்கள் வாழ்த்துக் கடிதங்கள் அனுப்புவதைப் பார்க்க என் உள்ளம் பூரித்து இன்பமடைகின்றது. ஒரு அன்பர் எழுதியிருக்கிறார்.

> "உங்கள் பொன்விழா நாவலைப் படிக்கப்படிக்க அதன் மதிப்பு பொன்போலவே தோன்றுகிறது. நானோ ஏழை. ஒரு கம்பெனியில் சொல்ப சம்பளத்திற்கு வேலை செய்யும் ஊழியன். மக்களுக்கு அறிவும், பக்தியும், அனுபவ ஞானமும் உண்டாக்கும் முறையில் 50 நாவல்களை எழுதிய உங்களுக்கு—பொன்விழா நாவலெழுதிய உங்களுக்கு-ஒரு பொன் பதக்கம் செய்து அளிக்க மனம் ஆசைக்கொண்டலைகிறது...ஏழை...என் செய்வேன்? என் பரிபூரணமான இதய உணர்ச்சியைத் தெரிவித்து உங்களுக்குச் சகல மங்களத்தையும் கொடுக்க பகவானை வேண்டுகிறேன்."

மற்ருெருவர்,

"அம்மணீ!...நான் ஜாதியில் தங்கத்திலேயே அளையும் ஆசாரிதான். ஆனுல் என் வாழ்க்கையில் நான் வயிறு வளர்க்க இத்தனை தூரம் கப்பலேறி வந்துள்ள ஏழை......பொன்னே போன்ற பொன்விழா நாவலை எமக்களித்த உமக்கு பகவான் பொன்மலரால் அருள்புரியவேண்டும்."

இன்னெருரு பெரியம்மாள் எழுதுவதாவது.

"குழந்தாய்!...நான் இப்பிடி எழுதுரேனென்னு நெனேக்காதே...ஒன் புகைப்படத்தெ பாத்தேன். என்னெவிட பாதி வயசு கொறஞ்சவளாயிருப்பேன்னு தெரியறது. அதுனுலே ஒங்கபாட்டியெபோல இதெ எழுதுறேன்...அந்த லோகநாயகியெ பொன்விழா நாவல்லே எப்படிதான் சிருஷ்டிச்சியோ! என் குழந்தெகளெ காப்பாத்தரத்துக்காக நான்கூட அப்பளாம் இட்டேன். எலேதெச்சேன். சொந்தக்காரா வீட்டுலே சமயல் செய்தேன்...உன் பொன்விழா நாவலேப்படிக்கறப்போ நான் அடைஞ்ச சந்தோஷம், எழுதரப்ப நீ கூட அடஞ்சிருக்கமாட்டே. அந்த அச்சுதனெப்போலயே என் பிள்ளே இந்த ஊர்லே பெரிய வேலேலேயிருக்கான். என் சிருமெ எல்லாம் இப்போ பெருமையாயிருக்கு. மனுஷ வாழ்க்கையெ அப்படியே எழுதியிருக்கற ஆச்சரியம் என்னுலே சொல்லவேமுடியலே...பொன்விழா நாவலுக்கும் ஒனக்கும் பொன்னுக்கிருக்கிற மதிப்புபோலே என்னிக்கும் மதிப்பு இருக்கணும்னு சர்வேசனே வேண்டறேன்."

இதுபோல் இன்னும் எத்தனையோ கடிதங்கள் வந்திருக்கின்றன. தங்களது அபாரமான அன்பின் மேலீட்டால் சிலர் 'ஜகன் மாதா! லோக மாதா!' வென்றும், சிலர் 'வாணியின் அம்சமான தாயே!' என்றும், 'எங்களுக்கு கதையின் வாயிலா உபதேசம் செய்யும் குருவே' என்றும் எழுதியிருக்கிருர்கள். இந்த புகழ் வாக்கியங்கள் எனக்கு உண்மையில் அச்சத்தையும் பயத்தையுங் கொடுக்கின்றன. பரந்தாமனின் படைப்பில் தோன்றியுள்ள கோடிக்கணக்கான மக்களில் நானும் ஒருத்தியே யாவேன். உங்கள் புகழுரைமுற்றும் அப் பரந்தாமனுக்கே அர்ப்பணமாகுக. சடிதம் எழுதிய அன்பர்கள் அனைவருக்கும் என் இதய பூர்வமான நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். பொன்னுக்கும் பொருளுக்கும் ஒரு மதிப்பு உண்டு. வரம்பும் உண்டு. மதிப்பிலா மாணிக்கம் போன்றது உங்களுடைய அன்பும், ஆசியும், பேராதரவுமே ஆகும். அது என்றென்றும் நமது மோகினிக்கும் எனக்கும் மற்ற புத்தகங்களுக்கும் கிடைத்துக்கொண்டிருக்கும்படியான கருணையை பகவான் புரிந்தால்போதும். ஏதோ கடவுள் கொடுத்த பிச்சையால் எழுதும் எனது புத்தகங்களால் நீங்கள் அடையும் இன்பமே எனக்கு விலையிலா வைரப் பதக்கம் போன்றதென்பதே எனது பரிபூர்ணமான திருப்தியும் நம்பிக்கையுமாகும்.

வை. மு. கோ.

## லெட்டர் பேபர் பாட்

காகிதமும் அட்டையும் மிகவும் அதிகமாக விலையேறிவிட்டதால் இந்த ஆண்டில் லெட்டர்பேபர் பாட் அனுப்ப இயலாததால் ஷை பரிசுக்குரியவர் தமக்கு வேண்டிய 8 அணு விலையுள்ள நாவலைத் தெரிவித்தால் அனுப்புகிரும்.

சிறு கதை

# அழகும் அகந்தையும்

ஸ்ரீமதி. ஸி. ஆர். ஸரோஜா, ஆலந்தூர்

விதவிதமான வர்ணங்கள். ஒருபுறம் செக்கச்செவேலென்ற சிவப்பு வர்ணம், மற்றொருபுறம் ஆழ்ந்த நீலம், பச்சை, ஊதா, மஞ்சள். அப்பப்பா! சொல்லிமுடியாது. இவையெல்லாம் நில வொளியில் மினுமினு என்று பீங்கான் கிண்ணங்களில் மின்னிக்கொண்டிருந்தன. எதிரில் ஒரு திரை. அதில் ஒரு யுவதி ஒய்யாரமாய் நாட்டியமாடுகிறாள். வெண்ணெயைத் திரட்டினதுபோல் கை கால்கள். எடுத்த நாசி. பவளம் போன்ற உதடுகளின் நடுவில் அதென்ன? முத்துக் கோர்த்ததுபோல் தெரிகிறதே. ஓஹோ! பற்களா! ரோஜாவைவிட சிவந்த கன்னங்கள், எல்லாவற்றையும் ஒரே வாக்கியத்தில் முடிக்கவேண்டுமானால், அந்த சித்திரம் மனிதனால் எழுதக்கூடியதல்ல என்று கூறிவிடலாம். ஆனால், அந்த முகம்மாத்திரம் சோபையிழந்து நின்றது. முகத்துக்கு நடுநாயகமாய் அமையவேண்டிய கண்கள்? அதான் இல்லை. அதற்காகத்தான் இத்தனை சிரமமும். சைத்திரீகன் வஸந்தன் அந்தத் திரையை உற்று நோக்குவதும், மாடியிலிருந்து தெருவைப் பார்ப்பதுமாக அலைந்துகொண்டிருந்தான். கொஞ்சந் தொலைவில் ஆற்றங்கரை ஜலம் மெதுவாக அரித்துப் போய்க்கொண்டிருந்தது. எங்கிருந்தோ பாணம் ஒன்று கிளம்பி ஆகாயத்தில் சென்று 'பட்'டென்று வெடித்தது. வஸந்தன் முகத்தில் இளமுறுவல் அரும்பிற்று.

"இன்னும் அரைமணியில் வந்துவிடும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

கல்யாணி ராகம் காற்றில் தவழ்ந்து வந்து வஸந்தனை திக்குமுக்காடச் செய்தது. கொஞ்சங் கொஞ்சமாக நாயனம் அருகில் கேட்டது. வரவா, ஆற்றங்கரை ஓரத்தில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. நிலவொளியோடு, விளக்கு வெளிச்சமும் சேர்ந்து ஸ்வாமி நெற்றியில் இட்டிருந்த வைர நாமம் பளபளவென்று மின்னிற்று. இடுப்பில் வெண் பட்டாடை, தூக்கமுடியாத மல்லிகை மாலை. இரண்டு புறத்திலும் தேவிகள் அடடா! அவருக்குத்தான் அவர்களிடம் என்ன பிரேமை?

வஸந்தனின் உள்ளம் ஆனந்தத்தில் மிதந்தது...ஸ்வாமி இன்னும் கொஞ்ச நேரத்தில் ஊறல் உற்சவத்திற்காக ஆற்றில் இறங்கிவிடுவார். பிறகுதான் அவள் காலைப் பிடித்துக் கெஞ்சியாவது தன் வேலையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்கிற ஒரே எண்ணந்தான் அவனுக்கு.

கால்களில் 'கல்கல்' லென்று சலங்கை ஒலிக்க ஒரு யுவதி ஒய்யாரமாய் வந்துகொண்டிருந்தாள். அவளுக்கு முன்னே, எல்லோருடைய கண்களும் அவளைத்தான் நோக்கின. வஸந்தனும் அவளை ஆவலோடு பார்த்தான். மற்றொரு முறை தன் சித்திரத்தைப் பார்த்தான். ஒரே அச்சு. சர்வமும் அவள் மாதிரியே யிருந்தது. ஆனால், அவள் ஆடும்போது அந்தக் கண்கள் கடைசீவரையில் சென்று வெட்டு வெட்டுகிறதே, அதைத்தான் அவனால் சித்திரிக்கமுடியவில்லை. அதற்காகவேதான் சென்ற சித்ரா பௌர்ணமியிலிருந்து ஒவ்வொரு மாதமாய் அந்த மொட்டை மாடியில் காத்துக்கொண்டிருந்தான். "இவ்வளவு அழகுடன் எல்லாம் அமைந்தபொழுது கண்கள் மாத்திரந்தானா வராமல் போகிறது?" என்று சொல்லிக்கொண்டான்.

இரவு ஒரு மணி வரை ஆட்டமும், கோஷமுமாயிருந்தன. அப்புறம் ஸ்வாமியும், அவர் பரிவாரங்களும் ஓய்வு எடுத்துக்கொண்டார்கள்.

வஸந்தன் தன்னந்தனியாய் அங்கு ஒரு இடம் விடாமல் தேடினன். எதிரில் வந்துகொண்டிருந்த பெரியவரைப்பார்த்து, "ஸ்வாமிகளே! தாசி அபரஞ்சி எங்கே யிருக்கிறள்?" என்றன்.

அவர் அவனைப் பார்த்துப் பரிகாசமாக, "ஓய்! உம்மைப் பார்த்தால் பக்கிரிமாதிரி இருக்கிறது. அபரஞ்சியைத் தேடிக் கொண்டா வந்திருக்கிறீர்? போம் போம் பைத்யமா உமக்கு?" என்றர்.

"இல்லை, தயவு செய்து கொஞ்சம் சொல்லுங்கோ" என்றன்.

"இதென்னடா தொந்தரவு, அதோ பாரும் சத்திரம். அங்கு இருப்பா. பெரிய பணமுடிப்பு இருந்தா போம்" என்று கூறிவிட்டுப்போனர்.

சத்திரத்தில் அபரஞ்சியும், அவள் அம்மாவும் பேசிக்கொண்டிருந்தார்கள்

"அம்மா! கொஞ்சம் என் பின்னல் வரமுடியுமா?" என்றன் வஸந்தன்.

"யாரையா நீ?" என்று எழுந்தாள் கிழவி.

"உங்கள் பெண்ணை கொஞ்சம் என்னேடு அனுப்புங்கள்"

"என்ன அப்படி தலை போகிற அவசரம்?" என்றள் கிழவி.

"நான் ஒரு சித்திரக்காரன். உங்கள் பெண்ணைப்போல்எழுதவேண்டும். எல்லாம் எழுதியும்விட்டேன். ஆனல் கண்மாத்திரம் சரியாயமையவில்லை.

"அதற்காக இப்போ என்ன?"

"ஐந்து நிமிடம் ஆடினல் போதும்" என்றன் அவன்.

"அதற்குப் பணம் எவ்வளவு கொடுக்கமுடியும்?"

"அம்மா! நான் ஏழை. அந்தச் சித்திரத்தைத் தவிர என்னிடம் ஒன்றும் கிடையாது" என்றன்.

"அதைப் பரிசாகத் தரமுடியுமா?" என்றள் இத்தனை நேரம் பேசா திருந்த அபரஞ்சி.

வஸந்தன் ஹிருதயம் துடித்தது. அவள் தாசியாகையால் அவள் வீட்டில் தனது சித்திரம் இருந்தால் பல கனவான்கள் வந்து பார்க்கும் சந்தர்ப்பம் உண்டாகும்; தன் திறமையும் பிரகாசிக்கும் என்கிற ஒரு சிறிய ஆசையும் உதயமாகியது. ஆனல், தான் எடுத்த வேலையை முடிக்காமல் இருப்பது நல்லதல்ல. கடமையை உத்தேசித்துத் தலை ஆட்டினன்.

ஐந்துநிமிடம் கேட்டானே தவிர ஒரு நிமிடத்தில் கண்கள் அபூர்வ ஒளியுடன் பிரகாசித்தன.

அவளுக்கு "நாம் அவ்வளவு அழகாகவா இருக்கிறேம்?" என்று நினைத்தபொழுது கர்வமாயிருந்தது.

பேசாமல் சித்திரத்தைச் சுருட்டி அவள் கையில் கொடுத்தான். கண்களிலிருந்து நீர் உருண்டு வழிந்தது. குழந்தையைப் பறி கொடுப்பதுபோலிருந்தது அவன் முகம்.

அபரஞ்சியோ, அவள் அம்மாவோ அதை சட்டைபண்ணதாகத்தெரியவில்லை. சித்திரம் அகன்ற மாடி சோபையிழந்துவாடி நின்றது.

வஸந்தன் தன் சித்திரத்தைப்பற்றி நினைத்துக்கொண்டால் விம்மி விம்மி அழுவான். இந்த ஜன்மத்தில் அவன் சித்திரந்தான் உற்ற நண்பன் அதைப் பிரிந்து அவனல் இருக்கமுடியவில்லை.

அது அவனை விட்டுப் பிரிந்து ஒரு வருஷம்போல் ஆகிவிட்டது. நாளுக்கு நாள் அவன் மனம் கரை கடந்து தவிக்கவே ஊருக்குள் சென்று அதை எப்படியாவது பார்க்கவேண்டுமென்று கிளம்பினன். அபரஞ்சியின் வீடு பெரிய மாளிகை. அதன் மாடியில் தன் கடின உழைப்பால் கிடைத்த சித்திரம், வெயிலிலும், மழையிலும் கேட்பாரற்றுத் தொங்கிக்கொண்

டிருந்தது. பவளம்போன்ற உதடுகளிலிருந்து சிவப்புச்சாயம் கழுத்தில் இறங்கியும், ரோஜாவைப்போலிருந்த கன்னங்கள் வெளுத்தும், கூந்தலிலிருந்து கருப்புச்சாயம் புடவையில் இறங்கியும் அந்த சித்திரம் பார்ப்பதற்கு வெகு கோரமாயிருந்தது. ஆனால் கண்கள்? அவற்றில்தானே தன் முழுத்திறமையும் காட்டினது. அவை மாத்திரம் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. தன்னுயிருக்கு உயிரான சித்திரத்தை அடியோடு குலைத்துவிட்டால் தன்னுயிரும் போய்விடும் என்றதையறிந்த கடவுள், தான் இரவுபகல் அக் கண்களுக்காக ஏங்கிக் காத்திருந்து சிருஷ்டித்த கண்களைமட்டும் கலக்காது தன் தியாகத்திற்குப் பரிசாக வைத்திருந்தார்போலும்'' என்று நினைக்கையில் வஸந்தனின் ஆச்சரியமும் ஆனந்தமும் கரைபுரண்ட வெள்ளம் போல் பொங்கி ஒரு சிறிது ஆறுதலையளித்தது. அக் கண்களைப் பார்க்கப் பார்க்க வஸந்தனின் கண்களில் நீர் அருவிபோல் ஓடியது.

தன் ஒப்பற்ற அழகுத்திமிரால் அந்த ஒப்பற்றச் சித்திரத்தை விளம்பரமாக நினைத்துக்கொண்டிருந்தாள் அந்தக் கர்வி.

சைத்திரீகனின் உள்ளமோ, 'கடவுளே! இத்தனை அழகை உண்டாக்கிய இடத்தில் அகந்தையை ஏன் சிருஷ்டித்தாய்?' என்று கேட்டுக்கொண்டிருந்தது. முள்ளோடு ரோஜாவை உண்டாக்கவில்லையா? சிருஷ்டியின் ரகசியம் அதுதான்.



# வாணியின் பிரசாதம்

ஸாஹித்தியகர்த்தா : வை. மு. கோதைநாயகி.

**28-வது மேளகர்த்தா** ஹரிகாம்போஜி.

ஜன்ய ராகம் : கேதார கௌளை.

[ஸாஹித்தியத்திற்கு முதல் பக்கம் பார்க்கவும்.]

ஸ்வரப்படுத்தியர் : ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி.

ஆரோஹணம்—ஷாடவம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஸ | ரி | ம | ப | நி | ஸ் |
| | சதுர் | சுத்த | | கை | |

அவரோஹணம்—ஸம்பூர்ணம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸ் | நி | த | ப | ம | க | ரி | ஸ |
| | கை | சதுர் | | சுத்த | அம்த | சதுர் | |

இராகம் : கேதார கௌளை | சதுரஸ்ர-ஜாதி-த்ரிபுடை.

## பல்லவி

| | | |
|---|---|---|
| ஸ்ா ஸ்ா - ; ஸ்ா - நிதபம - பாநீ | ஸ்ா ; - ; ; | ; ; - பா நீ |
| சுஞ் ஞா ன ஒ ளி த ரு | வாய் | நெஞ் சில் |
| ஸநிரிஸ - நிதபா-மகரீ - மக கரி | ஸா ; - நிதபா | நீஸா - ரிமபநி |
| தூய் மை நி லைக்க அ ருள் | வாய் உன்னை | துதிக் க |

## அநுபல்லவி

| | | |
|---|---|---|
| நி ஸ ரீ - ; ரீ - ரீரீ - ரீ ரீ | ரி ரீ ம-கரிஸா | ரிஸநித - பநிஸா |
| அ ஞ் ஞா ன கட லினில் | அ லைந் து ன்னை | ம றந் து |
| ப ரீ ஸ - ; ஸா - நிதாப - ; பா | ம கா ரி-; ரீ | மபாநி - ; ஸரி |
| அ கங்கா ர மமகா ர | அல் லல் பட் | டுழலா மல் |

## சரணம்

| | | |
|---|---|---|
| ரிமபா - ; பா - பாபா - பா ; | ப ஸா நி-தா பா | தபமக - ரீ ரீ |
| ஓ யா க வ லை கொண் | டு ழைத்து ஸம் | ஸார பந் த |
| ரிப மக- ; கரி - ஸ ஸா - நிதபா | நி ஸ ரிம-; மக | ரிமபம - பா ; |
| நோயால் உ ளுத்து ட லம் | நொந் த தை | ய் ய னே |
| நிஸரீ - ; ரீ - ரீ ரீ - ரீ ரீ | ரி ரி ம க- கரிஸா | ரிஸ நித-பநிஸா |
| வாயா ர ப ஜிக் க வும் | பனதா ர | து திக் க வும் |
| பரிஸா - ; ஸா - நித பா - ; பா | மகரீ - ; ரீ | மாபா - நீ ஸரி |
| தூ யா ஸ்ரீ கோ தாத் ம | நேயா சித் | த மி ரங் கி |

## முக்தாயிஸ்வரம்

| | | |
|---|---|---|
| ஸா , ரிஸநிதப - தபாமகரி - ஸநி | ஸா , - நிதப-நிஸ | ரிமகரீ - மபநி |
| ஸரிஸாநிதபம - பதபா - மகரிஸ | ரிமபதபா - மக | ரிமப - மபா ; |
| மகரி - பாம - நீதபா - ஸநிதபம | பநிஸரீ - ஸநித | மபநிநி - ஸா ; |
| பநிஸரீ - நிஸரி - மகரி - மாகரிஸ | நிஸரி - ஸாநிதப | மகாரீ - மபநி |




## விமோசனம்

விமோசனம் என்கிற பெயரைக் கேட்கும்போதே, "எதற்கு விமோசனம்? சினிமாப் படத்திற்கா? அல்லது தேசத்திற்கா?" என்கிற பிரச்சனையே முதலில் தோன்றியது. படத்தைப் பார்க்கையில் விமோசனத்தின் சக்தி நன்கு புலப்பட்டது. பல பட முதலாளிகளின் மனோபாவமே ஒரு தனித்ததாகும். உபயோகமற்ற கதை, உதவாக்கரை விஷயம், ஆபாஸ ஸீன்கள், அவலக்ஷணப் பேச்சுக்கள், முதலியவைகளைச் சேர்த்துப் பிடிக்கும் கத்தரிக்கோல் கதம்பப் படமெடுத்துவிட்டால் தம் படத்தொழிலுக்கே விமோசனம் பிறந்துவிட்டதாக எண்ணிவிடுகிறார்கள். அதற்கு நேர்மாறாக இந்தப் படத்தில் காலத்தை யனுசரித்த விஷயங்களை எடுத்துக்கொண்டு அவைகளைச் சிறுமிகளையே கொண்டு நடிக்கச் செய்திருப்பதானது ஒரு புதிய முறையை நம்பிக்கையுடன் தைரியமாகக் கையாண்டிருப்பது நன்கு புலப்படுகிறது. நக்ஷத்திரமென்றும், பிரமாதமான ராணி, ராஜா என்றும் பெயர் வைத்துக்கொண்டு சில ஆத்மாக்கள் நடிக்கும் படத்தைவிட விமோசனம், சிறுமிகளின் உன்னத நடிப்பால் பதினாயிரம் மடங்கு சிறப்புற்று விளங்குகிறது. குடிகாரனின் மனைவியாக நடிக்கும் பெண்ணிடம் தற்போதுள்ள சில நக்ஷத்திர நடிகைகள் கர்வமின்றி கற்றுக்கொண்டால் நன்றாக நடிக்கலாம். மொத்தத்தில் பல அம்சங்களிலும் விமோசனம் சிறந்த படம் என்பதில் சந்தேகமே இல்லை. இத்தனை நன்றாயிருக்கும் படத்தில் பாட்டுக்களின் வர்ணமெட்டுக்கள் அத்தனை விசேஷமாக அமையாதது சிறு குறையாகவே இருக்கிறது. இப் படத்தைப் பலரும் பார்த்து ஆனந்திக்கவேண்டுவது அத்தியாவசியமாகும்.

## விபரீதம்

"பக்தி! பக்தி!" என்று எங்குப் பார்த்தாலும் ஒட்டியிருந்ததைக் கண்டதும், இனி நாஸ்திக நாற்றம் அடியோடு ஒழிந்து ஆஸ்திகம் ஊற்றெடுத்து மக்களைப் பரிசுத்தமாக்கிவிடும் என்று ஆவலாய் எதிர்பார்த்ததற்கு அந்தோ! பரிதாபம்! எல்லைமீறிய ஏமாற்றம் முதல் ஸீனைப் பார்க்கும் போதே உண்டாயிற்று. பிறகு என்ன இருக்கிறது? அம்பரீஷனாகவும் அவர் தம்பியாகவும் நடித்த ஸ்வரூபங்களைப் பார்த்தவுடனே தூக்கிவாரிப்போட்டது. மனிதர்கள்தானா! அல்லது...என்ற சந்தேகம் பலமாக எழுந்தது. அதே சமயம் அருகிலிருந்த ஒரு குழந்தை கண்ணைப் பொத்திக்கொண்டு தன் தாயாரின் மடியில் படுத்து விட்டதைப் பார்த்ததும் அடங்காத சிரிப்பு வந்துவிட்டது. அக் குழந்தையின் தாயாருக்கு, இனி குழந்தையின் பிடிவாத சமயங்களிலும், அழுகை சமயங்களிலும் சமாதானம் செய்ய ஓர் நல்ல மார்க்கம் கிடைத்துவிட்டது என்று நிச்சயமாகத் தெரிந்தது. காலத்திற்கொவ்வாத நாமங்களும், வீணைகப் பிராம்மண துவேஷத்தைக் கிளறுவதற்காக கோயில் ஸீன்களும் அடியோடு வெறுக்கத்தக்கன. இவற்றால் கதையின் உயர்வுக்கே பங்கம் நேருகிறது. விபரீதக் காக்ஷிகள், ஒவ்வாத விஷயங்கள், பயங்கர ஸ்வரூபங்கள் இவைதான் "பக்தி"யின் முக்தி சாதனமாய் விளங்குகின்றன.

# வனிதா மண்டலம்

வை. மு. கோ.

**கல்யாணி,**—மங்களம்! நேற்று முற்றும் உன்னை நினைத்துக்கொண்டே இருந்தேன். உனக்கு எத்தனைதரம் பொரை ஏறியதோ !

**மங்களம்** :—என்ன விசேஷம் கல்யாணி என்னை நினைப்பதற்கு ?

**கல்** :—நேற்று முன்தினம் என்னுடைய நாத்தனார் பெண்ணுக்குக் கல்யாணம். அதற்குப் போயிருந்தேனேல்லியோ ! அங்கு நலங்கிடும்போது கல்யாணப் பெண்தான் பாட வேண்டுமென்று எல்லோரும் வற்புறுத்தினார்கள். அதன் தகப்பனார் ஆனந்தத்துடன் பெண்ணைத் தட்டிக்கொடுத்துப் பாடச்சொன்னார். உடனே பெண் குஷியாகப் பெரிய தொண்டையில் "ஹீனஜென்மம் எடுத்தேனே ஐயனே" என்ற சினிமாப் பாட்டைப் பாடியவாறு நலங்கிடப் பிள்ளையின் காலை இழுத்தது.

**மங்** :—அடராமா ! இந்த பாட்டா நலங்கு பாட்டு !...அப்பறம்...

**கல்** :—அப்பறமாவது, சப்ரம். கல்யாணப்பிள்ளைக்கு பலே கோபம் வந்துவிட்டது. அவன் சற்றும் பயப்படாமல் "அட க்ரகசாரமே !...இந்த மாதிரி தேவடியாள்பெண் நீ என்பது தெரிந்திருந்தால் நான் கல்யாணமே செய்துகொண்டிருக்கமாட்டேனே. காண்பவரெல்லாம்சண்ஜாடைகாட்டும் கட்டழகியா நீ...சீச்சீ! நலங்குமாச்சு குட்டிச்சுவருமாச்சு" என்று கோபித்தபடியே நலங்குசாமான்களை உதைத்துத் தள்ளி எழுந்தே போய்விட்டான்.

**மங்** :—அடாடா ! கல்யாணமாப்பிள்ளை சற்று ரஸிகன் என்று தெரிகிறது. சமயா சமயமின்றி இப்படிக் கூடப்பாடுவார்களோ ! கல்யாணத்தில் பிலாக்கணம் பாடினால் யாராவது சும்மா இருப்பார்களா ! அதுபோலத் தானே இதுவும். பாழாப்போன சினிமாப்பாட்டுக்கள் வந்தாலும் வந்தது, வேளையா ! சமயமா ! நாகரீகமா ! சம்பிரதாயமா ! எல்லாம்போய்விட்டன. பிறகு கல்யாணப் பிள்ளையின் கோபம் தணிந்ததா இல்லையா !

**கல்** :—தணிவதாவது ? பிள்ளையின் சகோதரியும் தாயாரும் ராக்ஷஸிகள்போல் ஆரம்பித்துவிட்டார்கள். "பெண்ணுக்கு இம்மாதிரியான பாட்டுக்களை சொல்லிவைக்காவிட்டால் யாரடித்தார்கள் ? நலங்கு பத்யம், ஊஞ்சல், முதலிய சம்பிரதாயப் பாடல்கள்கூடத் தெரியாமல் இம்மாதிரியா குதிரையைப்போல் வளர்த்துவைப்பது ? நல்ல வேளையாக ஒப்பாரி சொல்லிக்கொடுக்காதிருந்தீர்களே ! அதுவே சமத்துத்தான்" என்றெல்லாம் சரமாரியாகப் பொழிந்து பெண்ணின் தாயாரை அலசி விட்டார்கள். என்ன செய்வாள் பாவம்.

**மங்** :—செய்வதென்ன கல்யாணீ ! பெண்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொடுக்கும் பொருப்பு பெண்ணின் தாயாருக்குத்தானே இருக்கவேண்டும். தெருக்கூத்துப்பாட்டும், சினிமாப் பாட்டும் ஏதோ அந்தந்த சயயத்திற்கு பொருத்தமானது. பொழுது போக்கிற்காகக் கேட்டு மகிழலாம். அதையே பெண்களுக்குக் கல்யாணப்பாட்டாகவா சொல்லி வைப்பார்கள் ? இதோ பாரு கல்யாணீ ! எங்கெந்த சமயத்திற்கு எங்கெந்தப் பாட்டு பாடவேண்டுமோ, அதைப் பாடினால்தான் நன்றாயிருக்கிறது. ஒரேயடியாகக் கச்சேரிப்பாட்டு மட்டுந்தான் தெரியுமென்றால் அதில் உபயோகமே இல்லை. சந்தர்ப்பப் பாடல்களின் ருசியும் அழகும் ஒருதனித்தது தான். குழந்தையைத் தொட்டிலில் விட்டுத் தாலாட்டுப் பாடாமல் சந்திரமதி பாட்டும், உத்தராராமாயணமும் பாடலாமா ?

கல்;—வாஸ்தவந்தான் மங்களம்! காலம் போகும்போக்கில் நல்லது பொல்லாது கூட மறந்துவிடுகிறது. எங்க நாத்தனுர் பாவம், மனம் நொந்து கண்ணீர்விடுகிருள். ஏதோ பயித்தியக்காரத்தனமாபோய்விட்டது.

மங் :—இதெல்லாம் பெரியவர்கள் முதலிலிருந்தே பழக்கவேண்டும். தினம் காலையில் எழுந்தவுடனே கடவுளை நமஸ்கரிக்கப் பழக்கி அப்போது ஒரு பாடலோ, ச்லோகமோ பாடச்சொல்லிக்கொடுத்திருந்தால் பகவானை வேண்டும்போதெல்லாம் இம்மாதிரிதான் பாடவேண்டும் என்கிற லக்ஷ்ய ஞானம் குழந்தைகளுக்கு உண்டாகிவிடும். அதேபோல்தான் பகவானைத் துதித்து பூஜை செய்யும்போது குழந்தைகளை பக்கத்திலே வைத்துக் கொண்டு பழக்கினல் பக்தி குழந்தைகளுக்குத் தானகவே ரத்தத்துடன் கலந்து பழக்கத்தில் வந்துவிடும். பெரியவர்களை எத்தனை மரியாதையாக வரவேற்றுப் பழகுகிருேமோ அதைப் பார்க்கும் குழந்தைகளுக்கும் அப் பழக்கமே ஏற்பட்டு வெகு மேன்மையைக் கொடுக்கும். பள்ளிக்கூடத்துப் படிப்பைவிட வீட்டிலுள்ள அனுபவப் படிப்பைப்போல் நல்ல முறையும் மார்க்கமும் வேறுண்டா! தாயார் இம்மாதிரிப் பழக்காதிருந்தால்—அதிலும் கல்யாண காலத்தில் பாடும்படிக் கூருதிருந்தால்—பெண் பாடுமா!

இச்சமயம் எதிர்வீட்டு அத்தை வந்தாள். "என்ன மங்களம்! என்ன பாட்டு, யார் பாடினுள்? எனக்குச் சொல்லக்கூடாதா! இப்ப எந்த ஓரக் கூத்தம்மா வந்தாள்?" என்ருள்.

மங் :—(சிரித்துக்கொண்டே) அத்தே...நீங்கள் அந்த ஓரக்கூத்தம் மாவை விடவேமாட்டீர்கள்போலிருக்கிறதே...இப்போது அதைப்பற்றிப் பேசவில்லை. கல்யாணப் பேச்சு.

அத்தை :—அது கிடக்கட்டும். இங்கேவா மங்களம்! எங்க பக்கத்து வீட்டுப் பெண் அப்போதுமுதல் பாடுகிறது. பாட்டுகூட எனக்குப் புரிய வில்லை. சற்று, கேளேன்...அதென்ன பாட்டு!

மங் :—வீதியில் வந்து பாட்டைக்கேட்டு, கடகடவென்று நகைத்த படி, அத்தே!..."வினதாஸுதா" என்கிற பாட்டுதான் இது, அதன் சரணத்தைப் பாடுகிருள்...பேஷ். வெகு ஜோராயிருக்கிறது.

கல்:—இதென்ன சரணமடியம்மா...சாவு சவம்...ஏதேதோ வரதே...

மங் :—சாவுமில்லை. சவமுமில்லை. சரியான பதத்தைக்கேளுங்க சொல்கிறேன்......"நோவைசாகோத்ஸவமுன தசதின" என்பதுதான் சுத்தமான சாஹித்யம். அதைப்பாடும் அலங்கோலத்தில் அடேயப்பா அனர்த்தம் விபரீதமாயிருக்கிறது. நாவை...சாக...சவமுன...தசதின. 'வைசாகோத்ஸவமுன' என்பதைக் கொலைசெய்தால் வை சாக...சவமுன. என்று வெகு தெளிவான மாறுபட்ட அர்த்தமுண்டாகிறது. நரஜென்ம மெடுத்தவர்களுக்குச் சாவும், அடுத்தது சவமும், அதற்கடுத்தது தசதினம் பத்து நாளைய கர்மாதியும் என்கிற அபூர்வ அர்த்தம் த்வனித்துவிட்டது. அடாடா! கொலைபாதகமே!...

கல்யாணியும் அத்தையும் விழுந்துவிழுந்து சிரித்தவாறே, "க்ரக சாரமடியம்மா! இம்மாதிரியான பாட்டைக் கேட்பதைவிட காதில் பஞ்சை யடைத்துக்கொள்ளலாம். கல்யாணத்தில் ஒரு பாட்டினுல் கலாட்டா ஏற் பட்டது போதும். இந்தமாதிரி பாடல்களை நீக்கி சமயத்திற்கேற்ற பாட்டைச் சொல்லிக்கொடுப்பதும் அதைச் சுத்தமாகப்பாடப் பழக்கு வதுந்தான் முக்யம். மங்களம்! சமீபத்தில் ஒன்றும் கச்சேரி யில்லையா!

மங் :—அடுத்த ஞாயிற்றுக்கிழமை இருக்கிறது. அப்போது சொல்லி யனுப்புகிறேன்.

# நித்தியானந்தரின் ரேடியோ டயரி



[ வை. மு. ஸ்ரீநிவாஸன், M. A., B. L. ]

லாவண்ய சர்மா:—நமஸ்காரம் மிஸ்டர் ஆனந்தம்! கூண்டிலடைப் பட்ட கிளி பொம்மையை உமது ரேடியோவின்மீது வைத்திருக்கிறீரே, அதன் தாத்பர்யமென்ன? அழகுக்கு அழகு செய்வதென்ற எண்ணமோ? அல்லது, கிளி கொஞ்சுவதைப்போல பாட்டு இனிமையாக ரேடியோ வின் வாயிலாக வருகிறது, என்பதற்காகவா?

நி:—அதுமாத்திரமில்லை. கிளியின் மற்றொரு விசேஷ அம்சத்தை உத்தேசித்துத்தான்.

லா:—ரேடியோவுக்கும் கிளியின் விசேஷ அம்சத்திற்கும் என்ன சம்பந்தம்?

நி:—சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளையென்று நீர் கேள்விப் பட்டதில்லையா?

லா:—ஆமாம்! அதற்கென்ன இப்போது?

நி:—அதேமாதிரி இந்த ரேடியோ கிளி ஒரே பாட்டை அடிக்கடியும், ஒரே ராக ஆலாபனை, ஒரே செய்தி முதலியவற்றை ஒரு நாளைக்குப் பல தரமும் நமக்கு ஒலிக்கின்றதல்லவா?

லா:—பேஷ்! சரியான உபமான உபமேயந்தான்!...இன்று நான் சற்று சீக்கிரம் போகவேண்டும். வழக்கம்போல மணிக் கணக்கில் தங்க இயலாது. உமது ரேடியோ புராணத்தைக் கேட்டு வெகுநாளாயிற்றே. ஆரம்பியும் சீக்கிரம்.

நி:—அப்படியானல் டயரியைப் பார்க்க நேரமில்லையா?...சரி! சென்றதரம் உம்மைச் சந்தித்தபிறகு இன்றுவரை (23-2-40—27-3-40) நான் கேட்டுள்ள நிகழ்ச்சிகளைப்பற்றிச் சுருக்கமாக வாராந்திர குறிப்புகள் சொல்கிறேன் கேளும்.

குறிப்பு:—தி=திருச்சி. ம=மதராஸ்.

<u>முதல்வாரம்</u> (23-2-40 முதல் 29-2-40 வரையில்)

1. வாய்ப்பாட்டுக் கச்சேரிகளில் மிகச் சிறந்து விளங்கியவை மூன்றுதான் செம்பை (தி) சிறந்த பக்கவாத்தியங்களுடன் முதல்தரமான கச்சேரி செய்தார். மஹாராஜபுரம் (ம) இதுவரை ரேடியோவில் செய்த கச்சேரிகளுள் இந்த முறைதான் தன் முழு சாமர்த்தியத்தையும் வெளிப்படுத்தி மிகவும் திருப்திகரமாகப் பாடினார். எம். எஸ். சுப்புலக்ஷ்மி (ம) மிக இனிமையாயும் வித்வத் ததும்பவும் பாடினார். அடுத்தபடியாக மதுரை மணி (ம), டி. கே. ரங்காச்சாரி (தி), ஆலத்தூர் சகோதரர்கள் (ம), எஸ். ராஜம் (தி), முதலியவர்களின் கச்சேரிகளைக் குறிப்பிடலாம். வி. ஸரஸ்வதிபாய் (ம),

கே. பி. சுந்தரம்பாள் (தி) முதலியவர்களின் கச்சேரிகள் ஏமாற்றமளித்தன. குமாரி ராஜம் (தி) என்ற குழந்தை தன் சக்திக்கு மீறி அழகாய்ப் பாடினுள். 'ஜகதானந்த' முதற்கொண்டு கூடியவரை நன்ருய்ப் பாடும் இக்குழந்தையை அடிக்கடி பாடச் செய்து, நன்கு பிரகாசிக்கச் சந்தர்ப்பமளிக்கவேண்டும்.

2. வாத்திய சங்கீதத்தில், பிடில் கச்சேரிகளுள் முதல்தரமாக அமைந்தது ராஜமாணிக்கம் பிள்ளை (தி), பாப்பா வெங்கடராமய்யர் (ம), கேசவமூர்த்தி (ம), சேதுராமய்யா (ம), முதலியவர்களுடையவைதான். ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மியின் கச்சேரியை அடுத்தபடியாகக் குறிப்பிடலாம். வீணைக் கச்சேரிகளில் இரண்டை முக்கியமாய் குறிப்பிடலாம். மைசூர் வி. துரைசாமி அய்யங்கார், (தி), நீலம்மா கடம்பி (ம) இருவரும் மிகவும் ரஸமாக வாசித்தார்கள். இஞ்சிக்குடி சகோதரர்களின் நாகஸ்வரக் கச்சேரியும், பல்லடம் நாகராஜனின் புல்லாங்குழல் கச்சேரியும் எப்போதும்போல நன்ருயிருந்தன.

3. சிதம்பரம் ஸ்ரீரங்காசாரியாரின் (ம) ருக்மிணிகல்யாண காலக்ஷேபத்தைப்பற்றி ஒரே ஒரு குறைதான். அது சிற்றலையில் மாத்திரம் ஒலிபரப்பப்பட்டது.

4. கிராமவாசிகளுக்கான நிகழ்ச்சிகளுள் (தி) ஐந்தைப்பற்றி விசேஷமாகச் சொல்லலாம். 'சுப்பன் ஆஸ்பத்திரிக்குப் போகிறுன்' என்ற சிறு நாடகம் ஹாஸ்யரஸம் ததும்ப நன்கு நடிக்கப்பட்டது. கிராமவாசகசாலையில் 'திருவள்ளுவர் திருநாள்' விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 'காமன் பண்டிகை' என்ற விசேஷ நிகழ்ச்சி சுமாராயிருந்தது. அவ்வளவு வளர்த்தாது, இன்னும் சீக்கிரம் முடித்திருந்தால் நன்ருயிருந்திருக்கும். குழந்தைகள் வாரக்கொண்டாட்டம் நாட்டாண்மைக்காரனுல் நன்கு ஆரம்பிக்கப்பட்டது. "நண்பனே பகைவனுன்" என்ற சிறு நாடகம் மிகவும் இயற்கையாயிருந்தது.

5. நான் கேட்டவரையில் விசேஷமாக ஒரு நாடகமும் அமையவில்லை.

6. சென்னை அனௌன்ஸரைப்பற்றி முன்பொருதரம் (ஜனவரி இதழ்) குறிப்பிட்டபடியேதான் இன்னும் நிலைமை இருக்கிறது. பிரசங்கம் செய்தவரின் பெயரையே தன்னிஷ்டப்படி மாற்றிவிட்டார். சௌரிராஜன் என்பதற்கு கோவிந்தராஜன் என்றுர்! அவர் இட்டது சட்டம்போலும்!

### இரண்டாவது வாரம்

1. வாய்ப்பாட்டுக் கச்சேரிகளுள் மிகச் சிறந்து விளங்கியது (ம) அரியக்குடியின் 'ஏ ஒன்' கச்சேரிதான். அடுத்தபடியாக சுமார் ஒரு 'டஜன்' கச்சேரிகளைக் குறிப்பிடலாம். என். ஜி. சீதாராமன் (ம) முசிரியின் பாணியைப் பின்பற்றுகிறுர். சாரீரமும் நன்ருயிருக்கிறது. ஆலத்தூர் சகோதரர்கள் (தி) திறமையாகப் பாடினுர்கள். டி. என். மாணிக்கம் (ம), லலிதா வெங்கடராமன், (தி) மீனுக்ஷி ராமகிருஷ்ணன் (ம) கே. பி. சுந்தராம்பாள் (ம) முதலியோர் எப்போதும்போல கூடியவரை திருப்திகரமாகப் பாடினுர்கள். விஜயலக்ஷ்மி நடராஜன் (ம) நன்ருகப் பாடினுர். ஆனுல் அக்ஷர சுத்தமில்லை. உதாரணமாக 'நின்னே பஜனஜேஜேவா ரிகி' என்ருல் எப்படியிருக்கிறது? சேலம் தேசிகன் (தி) என்பவரது பாட்டு ஆர்பாட்டமும், குறைகளுமின்றி நன்கு ரஸிக்கத்தக்கதாயிருந்தது. துரையூர் சர்மா (ம) எம். டி. பார்த்தசாரதி (தி) முதலியவர்களின் சங்கீதத்தில் தினமும் அபிவிருத்தி காணப்படுகிறது. பிரபல வித்வான்கள் டைகர் (ம), சித்தூர் (தி), முடிகொண்டான் (ம), முத்தைய்யா பாகவதர் (ம) முதலி

யோரும், சினிமா நடிகர் தியாகராஜ பாகவதரும் (ம) இம்முறை எதிர் பார்த்தபடி பாடவில்லை.

2. வீருசாமிபிள்ளை, திருவீழிமிழலை சகோதரர்கள், ராஜண்ணு பிள்ளை முதலியவர்களின் நாகஸ்வரக் கச்சேரி இம்முறை முதல்தரமாக அமையா விடினும் கூடியவரை நன்ருயிருந்தன.

3. சங்கீத ரகளை (தி), சுப்பனின் தீரச்செயல்கள் (தி) முதலிய சிறு நாடகங்கள் ஹாஸ்ய ரஸம் ததும்ப, இயற்கையாயிருந்தன. திருவள்ளுவர் (ம) நாடகம் அவ்வளவு திருப்திகரமாயில்லை. குறள் என்பதற்கு குரல் என்ருல் எப்படி இருக்கும்? மன்மத தகனத்தைப்பற்றிய ஸங்கீத ஸம்வாதம் (தி) அளவுக்கு மீறியிருந்ததால், கொஞ்ச நேரத்திற்குமேல் ரஸிக்கமுடியவில்லை.

4. 'வாழ்க்கை சர்க்கஸ்', 'புதிய வசனம்—நடை' என்ற இரு பிரசங்கங்களும் (தி) நன்ருயிருந்தன.

மூன்றுவது வாரம்

1. வாய்ப்பாட்டுக் கச்சேரிகளுள் சிறந்து விளங்கியவை ஐந்து. ராமாபாகவதரின் கச்சேரி (ம) மிகவும் நன்ருயிருந்தது. வாணியின் அருள் பெற்றுள்ள இவருக்கு அதிர்ஷ்ட தேவதையின் கிருபாகடாக்ஷம் பரிபூர்ணமாயில்லாதிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. முசிரி (ம) எம். எஸ். சுப்புலக்ஷ்மி (தி) முதலியவர்களின் கச்சேரிகள் எப்போதும்போல நன்கு அமைந்தன. டைகர், (தி) தேவேந்திரப்பா (ம) முதலியோரின் கச்சேரிகளில் சாரீர சுகம் குறைவெனினும், வித்வத் ததும்பி, எப்போதும் ரஸமாக விருப்பது தான் விசேஷ அம்சம். முறையே, அவர்கள் பாடிய ஆபோகி, மறிவேறே திக்கு முதலிய உருப்படிகளைக் குறிப்பிடலாம். பாளையூர் வெங்கடராமய்யர் (ம), துறையூர் சர்மா, (தி) எம். எஸ். மோஹனம்பாள் (தி) முதலியவர்கள் கச்சிதமாகப் பாடினுர்கள். ஏ. ஜி. சுப்ரமண்யம் (தி) கூடியவரையில் நன்ருகப் பாடினுர்.

2. வாத்திய சங்கீதத்தில் பல்லடம் சஞ்சீவிராவின் புல்லாங்குழல்(ம), ராஜமாணிக்கம்பிள்ளை (ம), சௌடய்யா (தி) முதலியோரின் பிடில் கச்சேரிகள் விசேஷமாய் அமைந்தன. அடுத்தபடியாக கோட்டுவாத்தியம் பூதலூர் சாஸ்திரிகளின் கச்சேரியும் (தி), செம்பனுர்கோயில் சகோதரர்களின் நாகஸ்வரமும் (தி), ஸ்ரீகண்டய்யர் (ம), ராமமூர்த்தி அய்யர் (தி) முதலியவர்களின் வீணை கச்சேரியும் கூடியவரை சுமாராயிருந்தன.

3. 'பால்கார பாஸாதி' (தி) என்ற விசேஷ நிகழ்ச்சி முழுதும் ரஸிக்கத் தக்கதாயிருந்தது. அதன் வெற்றிக்குக் காரணம் இயற்கையான நடிப்பும், சம்பாஷணையுந்தான். சேவல் சண்டை விஷயமாக கிராமப்பஞ்சாயத்துகூடி தீர்ப்பளித்தது (தி) மிகவும் ருசிகரமாக இருந்தது. அடுத்தபடியாக குறிப்பிடக்கூடிய நாடகங்கள் தர்மபுத்திரரும் யக்ஷனும், (தி) காஷுவல் லீவ் (தி), சிங்கப்பூர் மச்சான் (தி) முதலியவைதான். பங்கயச்செல்வி (தி) என்ற நாடகத்தை சிறிதுதான் கேட்டேன். கேட்டவரையில் நன்ருயிருந்தது. தெனுலிராமன் (ம) நாடகம் ஹாஸ்யரஸத்திற்கு பேர்போனதெனினும், சிரிப்பே வராதபடி சாமர்த்தியமாக நடித்தார்கள்!

4. காதலில்லாக் கதைகள் முடியுமா? என்பதைப்பற்றி ஸ்ரீ சாவித்திரி அம்மாள் பேசினுர் (தி). ஆங்கிலக் கதைகள் சிலவற்றைப்பற்றி குறிப்பிட்டார். தமிழில் ஸ்ரீநடேச சாஸ்திரியார் கதைக்குப்பின் வெளியான பல 'காதலில்லாக் கதைகளை'ப்பற்றி குறிப்பிடவில்லை. பல்லாயிரக்கணக்கானவர்கள்

படித்து இன்புற்ற வானக்குயில், உளுந்த இதயம், மகிழ்ச்சி உதயம், கானல் நீர் போன்ற பல கதைகளை அவர் படிக்கவில்லையா? அல்லது படித்துத் தான், ஒரு வேளை விளம்பரமாகி விடப்போகிறதே என்ற எண்ணத்தினல் சௌகரியமாகக் குறிப்பிடாது விட்டுவிட்டாரா?

நான்காவது வாரம்

1. நான்கு சிறந்த வாய்ப்பாட்டுக் கச்சேரிகளை முக்கியமாக குறிப்பிடலாம். மஹாராஜபுரம் (தி), மன்னர்குடி ராஜகோபாலப்பிள்ளை (ம), ஜி. என். பாலசுப்ரமணியம் (தி) என். ஜி. சீதாராமன் (ம) முதலியவர்களின் கச்சேரிகள் மிக திருப்திகரமாயிருந்தன. அடுத்தபடியாக சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, (ம) ஜி. என். பஞ்சநாதன் (ம) முதலியவர்களின் கச்சேரிகளை குறிப்பிடலாம். உடுமலைப்பேட்டை வெங்கடகிருஷ்ணய்யர் (ம), எம். எஸ். மோஹனம்மாள் (ம), முதலியவர்களின் பாட்டு கூடியவரை திருப்திகரமாகவிருந்தது. கல்பகம் சகோதரிகள் (ம), சுமாராய் பாடினர்கள். நீலம்மாகடம்பி (தி), லலிதா வெங்கடராமன் (ம), இருவரும் தங்கள் முழுத் திறமையும் வெளிப்படுத்தி வீணை வாசித்துப் பாடினர்கள். பல முறை கேட்டு அலுத்துப்போன பாட்டுகள்கூட இனிமையாய் இருந்தன.

2. வாத்திய கச்சேரிகளுள் வெங்கடசாமி நாயுடு (ம), மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் (தி), மதராஸ் பாலகிருஷ்ணய்யர் (தி), சேத்தூர் சுந்தரேச பட்டர் (தி), முதலியவர்களின் பிடில் கச்சேரிகளையும், கல்யாண கிருஷ்ணபாகவதர் (ம), ஸ்ரீகண்டய்யர் (தி), முதலியவர்களின் வீணை கச்சேரியையும், திருச்சி நிலைய வாத்தியக் கதம்பத்தையும் குறிப்பிடலாம். தாலிபர்த்தி சகோதரர்கள் (தி), சிவசுப்பிரஹ்மண்யபிள்ளை (தி), முதலியவர்களின் நாகஸ்வரக் கச்சேரி சுமாராய் இருந்தது.

3. வானையளப்போம் (தி), என்ற நிகழ்ச்சி மிகவும் ரஸமாக விருந்தது. வேலை கிடைத்துவிட்டது (தி) தெனலிராமன் (ம), என்ற இரு நாடகங்களும் சுமாராய் இருந்தன. அமராவதி யென்ற நாடகம் (தி), நான் கேட்டவரையில் நன்றாய்தானிருந்தது.

4. முசிரி "செப்பிடு வித்தையில்லாத சங்கீதம் முடியுமா?" என்பதுபற்றி பேசுவார் என்று வானெலியில் அறிவித்திருந்தார்கள். மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனல் பெரிய ஏமாற்றம்! அவர் "சங்கீதமும் கணிதமும்" என்பதைப்பற்றி நல்ல நடையில் உபமான உபமேயங்களுடன் வெகு ஸ்வாரஸ்யமாக சொற்பொழிவாற்றினர்.

ஐந்தாவது வாரம் (27—3—40 வரை.)

1. பெங்களூர் நாகரத்தினம் (ம), ராமபாகவதர் (தி), செம்பை (ம), அரியக்குடி (தி), பாருபள்ளி (ம) முதலியோர் தம்தம் வழியில் சிறந்த கச்சேரிகளைச் செய்து ரஸிகர்களை மகிழ்வித்தார்கள். விஜயலக்ஷ்மி (தி), கே. ஏ. ராதாகிருஷ்ணபிள்ளை (ம), முதலியவர்களின் பாட்டு கூடியவரை நன்றாயிருந்தது. கீவளூர் மீனக்ஷி சுந்தரம்பிள்ளை (தி), எம். ஆர். கோபாலரத்னம் (ம), என். பாலசுப்பிரமணிய அய்யர் (தி), கே. எஸ். நாகராஜன் (ம); முதலியவர்களின் பாட்டும் தேவலை; கேட்கக்கூடியதாய்த்தான் இருந்தது.

2. வாத்திய ஸங்கீதத்தில் பல்லடம் சஞ்சீவிராவின் புல்லாங்குழலும் (தி), கே. எஸ். நாராயணய்யங்காரின் கோட்டுவாத்தியமும் (தி), அங்கப்பன்

(தி), சென்னை எ. பார்த்தசாரதி (ம), முதலியோரின் நாகஸ்வரமும், பாப்பா வெங்கடராமய்யர் (தி), திருகோடிக்காவல் கிருஷ்ணமூர்த்தி அய்யர் (தி), முதலியோரின் பிடிலுந்தான் சிறந்து விளங்கின கச்சேரிகள். திருச்சி நிலைய கோஷ்டி வாத்திய சங்கீதம் (தி), கீரனூர் ஜெயலக்ஷ்மியின் புல்லாங் குழல் (ம), முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

3. "கவிச்சக்கரவர்த்தி கம்பர் தினம்" நிகழ்ச்சியில் (தி), நாட்டரசன் கோட்டையில் நடந்த கொண்டாட்டத்தில் ஒலிப்பதிவு செய்த சில பாகங் களை விமர்சனத்துடன் ஒலி பரப்பினர்கள். பி. ஸ்ரீ. ஆசார்யா, சிதம்பர நாத முதலியார் உள்பட பலர் பேசியதில் சில பாகங்களும், சிறுமிகளின் கும்மி, கோலாட்டமும், ஊர்வலத்தில் கோஷ்டி வாத்தியமும் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருந்தன. இம்மாதிரியான விசேஷ நிகழ்ச்சிகளை ஒலிப்பரப்பு வதில் திருச்சி நிலையம் தனிப்புகழடைந்திருக்கின்றது.

4. வேதாள உலகம் என்ற நாடகம் (ம), எதிர்பார்த்தபடி அமையவில்லை. பேயடைந்த இல்லம் (தி), எமப்பட்டணத்தில் ஒருநாள் (தி), என்ற சிறு நாடகங்கள் சுமாராயிருந்தன. அல்லி கர்வபங்கம் (தி), கிராம நாடகசபை யினரால் நன்கு நடிக்கப்பட்டது.

லா :—நீர் சொல்வதைப் பார்த்தால் திருச்சி நிலைய நிகழ்ச்சிகள்தான் பெரும்பாலும் நன்றாயிருக்கின்றனவென்று ஏற்படுகிறது.

நீ :—எந்த நிலையமாயிருந்தால் நமக்கென்ன? நல்ல இசைவிருந்தும், பொழுதுபோக்குந்தானே நாம் வேண்டுவது? பொதுவாக அ. இ. ரே. வை ஒரு முக்கிய காரணத்திற்காக நாம் கொண்டாடவேண்டும். அதாவது, வித்வான்களுக்கு ஒருவரேடொருவர் போட்டியிட்டு அவரவர் தம்தம் முழு சாமர்த்தியத்தை வெளியிட சந்தர்ப்பமளிப்பதால் கேட்பதே அரிதாகி விட்டப் பல ராகங்களுக்குப் புத்துயிரளிக்கப்படுகிறது. வித்வான்கள் எந்த ராகத்தை ஆலாபனை செய்யலாம் என்ற ஆராய்ச்சியிலிறங்குகிறார்கள். அதன் பயனாக நாம் ஹம்ஸப்ரமரி, வகுளாபரணம், அக்னிகோபம், தர்மவதி, ஹேமவதி, ரிஷபப்பிரியா, வித்தஸேனு, மேகரஞ்சனி, ரஞ்சனி முதலிய ராகங்களை நன்கு ஆலாபனை செய்யக் கேட்கிறோம். ஷை ஆராய்ச்சி விஷ யத்தில் நாகஸ்வர வித்வான்கள்—அதுவும் திருச்சி நிலையத்தில் வாசிக்கும் போதே—முக்கிய சிரத்தை காட்டுகிறார்கள்.

லா :—நீர் ஏன் குழந்தைகளின் நிகழ்ச்சிகளைப்பற்றியும், மாதர்களுக் கான நிகழ்ச்சிகளைப்பற்றியும் ஒன்றுமே சொல்லவில்லை ?

நீ :—சொல்வதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை. நான் கேட்டவரையில் சென்னை நிலையத்தில் ஷை இரண்டு நிகழ்ச்சிகளும் ஒருநாளாவது திருப்தி கரமாக இல்லை. திருச்சி நிலையத்தில் பெண்களுக்கான நிகழ்ச்சிகளைவிட, குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் தேவலை. சென்ற 5 வாரங்களில் விசேஷ மாக ஒன்றுமில்லை. ஷை இரு நிகழ்ச்சிகள் விஷயமாக இரு நிலையத்தாரும் பன்மடங்கு சிரத்தை எடுத்துக்கொள்வது நலம். ஷை நிகழ்ச்சிகள் குழந் தைகளுக்கும், ஸ்திரீகளுக்கும் பிரயோஜனப்படும்படி அமைக்கவேண்டும்.

லா :—வாஸ்தவந்தான். அவர்களுக்கென உள்ள பிரத்தியேக நிகழ்ச்சி களால் அவர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படவேண்டியது நியாயந்தானே.

---

## பிரிவாற்றுமையும் பெரும் போர்த்துவக்கமும்

என்ன செய்வாள் பாவம்! அவளைப் பிரியவேண்டுமே என்கிற ஏக்கமும் வருத்தமும் பங்கஜத்தின் மனத்தை வாட்டின. தாயைப் பிரியும் குழந்தையைப்போல் பங்கஜம் விக்கிவிக்கி அழ வாரம்பித்தாள். குழந்தையும் மதுரம் ஊருக்குச் செல்வதற்காக அழுவதுபோல் அன்று ஓயாது அழுதுகொண்டே இருந்தது.

கிருஷ்ணனுக்கும் சிவராமனுக்குங்கூட மனவருத்தம் அதிகமாகவே இருந்தது. தங்களை விட்டுத் தங்கள் பெண் புக்ககம் போகும்போது ஓர் தகப்பனுர் அடையும் வருத்தத்தையே அன்று சிவராமன் அடைந்தார். மதுரத்தின் நிலைமையைக் கூறவேண்டுமா? கண்கள் சிவந்து முகமும் வீங்கிவிட்டது.

சிவ :—அம்மா, மதுரம்! இந்த மகாபாவியின் வீட்டில் நீ வாழ்க்கைப்பட்டு வாரிக்கொண்ட பலன், இந்தச் சின்னவயதில் இத்தகைய கோலம் வந்ததுதான் கண்டது. உனக்குக் கொடுக்க வேண்டிய ஆயிரம் ரூபாயை நீ எப்படிச் சொல்கிருயோ அதே போல் செய்கிறேன். நிலமாக வாங்கி உன் பேரில் ரிஜிஸ்டர் செய்யட்டுமா? ஒரு பொறுப்புவாய்ந்த மனிதரிடம் வட்டிக்குக் கொடுத்து, பத்திரத்தை உன்பேரில் எழுதட்டுமா? அன்றி, உன் தந்தையிடம் கொடுக்கட்டுமா? உன் விருப்பத்தைச் சொல்லம்மா!

மதுரம் இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கண்ணீர் உதிர்த்தாள். "உங்கள் இஷ்டம் எப்படியோ, அப்படிச் செய்யுங்கள். உங்கள் எல்லோருடைய அன்பும் பரிபூரணமாக என்மீதிருந்தால் போதும்" என்று கூறும்போது, அவள் குரலில் துக்கம் தேங்கி அடைத்துக்கொண்டது. சப்தம்கம்மித் தழுதழுத்தது.

இந்தக் கன்றுவியைக் கண்டு சகிக்கமுடியாத கிருஷ்ணன், "அப்பா! மன்னியைக் கேட்டால் அவர்களுக்கென்ன தெரியும்? அவர்களுக்கு உலகம் இன்னதென்று தெரியாது. பணமென்றுல், அந்தச் சப்தமே மனிதர் மனத்தில் நன்மையையும் உண்டாக்கும்; தீமையையும் உண்டாக்கும். ஆகையால், அதை அவர் தகப்பனுரிடம் கொடுப்பதில் உபயோகமே இல்லை. ஒரு பொறுப்புவாய்ந்த மனிதரிடத்தில் கொடுத்துவைத்தால், மாதாமாதம் தவருது வட்டியாவது வரும். ஆகையால், நீங்கள் செய்வதைச் சாச்வதமாகச் செய்துவையுங்கள்" என்றுன்.

பங்கஜம் :—அதைவிட நிலமாக வாங்கி அவர்கள்மீது பட்டா செய்தால் வெகு நல்லதாயிற்றே! பயமில்லாதிருக்குமே—என்றுள். சிறியவளாயினும் அவளுடைய யோசனையை எல்லோரும் ஏற்றுக்

கொண்டார்கள். அன்றே தக்க நிலத்தை அவள் பேரில் எழுதி ரிஜிஸ்டரும் செய்துவிட்டார்கள்.

நடராஜன் குறிப்பிட்ட தினத்தில் வந்துவிட்டார். மனத்தில் சிறிது உத்ஸாகத்துடன், பங்கஜத்தின் அன்பினுலும் குழந்தையின் ஆசையாலும் சந்தோஷமாகக் காலத்தைக் கடத்தியதால், மதுரத்தின் உலர்ந்துபோயிருந்த தேகம் சற்றுத் தெளிந்திருப்பதைக்கண்டு நடராஜனே வியப்புற்ருர்.

நிலம் வாங்கி மதுரத்தின்மீது எழுதிவிட்ட பத்திரத்தைப் பார்த்ததும் நடராஜன் பெரிதும் சந்தோஷப்பட்டார். பங்கஜத்தின் குழந்தைக்கு அவர் ஒரு ஸில்கு சொக்காய் வாங்கி வந்திருந்தார். அதை மதுரத்தினிடம் கொடுத்துக் கொடுக்கச் செய்தார். பிறகு பிரயாணத்திற்குத் தயாராகிவிட்டார். மதுரம், பங்கஜத்தையும் குழந்தையையும் பிரிய மனமின்றிக் கண்ணீர் பெருக்கினுள்.

பங்கஜமே முந்திக்கொண்டு நடராஜனை நோக்கி, "அடிக்கடி மன்னியை அனுப்புங்கள். நாங்கள் வேறு அன்னியர் என்று நினைக்கவேண்டாம். மன்னியில்லாது குழந்தைகூட எங்கிப்போய் விடும்போலிருக்கிறது. ஆத்தில் மாமி பிரஸவித்தவுடனே இங்கு மன்னியை அனுப்புங்கள்" என்று கேட்டாள்.

நடராஜன் பங்கஜத்தின் அன்பைக் கண்டு வியந்து, "அம்மா! அப்படியே ஆகட்டும். உன் இஷ்டப்படியே அனுப்புகிறேன். பகவான் அவளைப் பலவிதத்திலும் கெடுத்துவிட்டபோதிலும், ஆத்மார்த்தகமான அன்புடன் நேசிக்க உத்தமியாகிய உன்னையாவது அவர் காட்டியதே பெரிய பாக்கியம். நான் வருகிறேன். கிருஷ்ணு! குழந்தையின் க்ஷேமத்தைப்பற்றி அடிக்கடி எழுது. வாம்மா மதுரம்!" என்ருர்.

மதுரம் குழந்தைக்குப் பல முத்தங்களை இட்டுப் பின்னர் தொண்டையை அடைக்கும் துக்கத்துடன், "நான் வருகிறேன். பங்கஜம்! கடிதம்மட்டும் மறக்காது போடு...நான் வருகிறேன்" என்று மாமனுரிடமும் மைத்துனரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பினுள். மதுரத்தின் இதய வேதனையும் கண்ணீர் மழையும் வண்டி செல்லச் செல்ல அதிகமாகிவிட்டன.

யாரோ ஒரு 'விடோ' வந்திருந்தாள், சென்ருள் என்கிற உணர்ச்சி இல்லாது, பங்கஜம் முதலிய எல்லோருக்கும் மதுரத்தைப் பிரிந்த துக்கம் தாங்கவே முடியாது பாதித்தது. கூழே குடித்தவர்களுக்கு அதைவிட உயர்வான சோறு கிடைத்தபிறகல்லவா அதன் அருமையும் ருசியும் தெரியும். அதேபோல் துன்பமே அனுபவித்துக் கொண்டிருந்த மதுரத்திற்கு 'இன்பமென்ருல் என்ன; அன்பு என்ருல் என்ன; சந்தோஷமென்பது எப்படி இருக்கும்?' என்ற

வித்தியாசங்களைக் கண்டறிந்த பிறகு அவள் மனம், தன் தகப்ப ஞரின் வீட்டை நரகமாக எண்ணியது வியப்பா!

ரயிலில் அவளுடைய சரீரம் உட்கார்ந்திருக்கிறதேயன்றி, மனம் என்னவோ குழந்தை ஸரஸ்வதியின்மீது சென்று லயித்து அந்த ஆனந்தத்திலேயே மெய்ம்மறந்துவிட்டாள். அதை இன்னும் கொஞ்சம் கிளறுவதுபோல் ஒரு பிச்சைக்காரன், கட்டை தாளத் தைத் தட்டிக்கொண்டு,

சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா! செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே—உலகில் ஏற்றம் புரியவந்தாய்!

ஓடி வருகையிலே—கண்ணம்மா! உள்ளங் குளிருதடீ;
ஆடித்திரிதல் கண்டால்—உன்னைப்போய் ஆவி தழுவு தடீ.

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடீ;
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா! உன்மத்த மாகு தடீ.

சொல்லு மழலையிலே—கண்ணம்மா! துன்பங்கள் தீர்த்திடுவாய்;
முல்லைச் சிரிப்பாலே—எனது மூர்க்கந் தவிர்த்திடுவாய்.

என்கிற "பாரதி"யாரின் பாடலை அதி மனோகரமாய்ப் பாடியதைக் கேட்ட மதுரத்திற்குக் குழந்தையின் அன்புவெறி நெஞ்சில் அலை மோதியது. தனக்கு அக் குழந்தையின்பாலுள்ள அத்தனை அனுப வத்தையும் எந்த மகாநுபாவன் அறிந்து பாட்டாக எழுதிவிட் டானோ என்றும் அவள் உள்ளம் வியந்தது. இதே பாட்டையே பின்னும் சற்று நேரம் பாடமாட்டானா என்று ஏங்கினாள்.

ஆனால், அந்தத் தௌர்ப்பாக்கியவதியின் சந்தோஷத்தைக் குலைக்க நரகவாஸத்தின் அழைப்பு ஏற்பட்டதேபோல், அந்தப் பிச்சைக்காரன் அந்தப் பாட்டை நிறுத்திவிட்டு,

மன்மதபாணம் துளைக்குதே உள்ளம்
மண்டி எரிந்து துடிக்குதே!

என்று கர்ணகடூரமாய் ஒரு ஆபாஸப் பாடலை ஆரம்பித்துவிட்டதும் மதுரம் காதைப் பொத்திக்கொண்டு ஜன்னலுக்கு வெளியே தலை நீட்டிக்கொண்டு வெளியைக் கண்டு பொழுதைப் போக்கலானாள்.

பிரயாணம் முடிந்து வீடு வந்து சேர்ந்தாள். வீட்டுக்குள் நுழையும்போதே கண்ணம்மாளும் மற்ற குழந்தைகளும், "அக்கா வந்துட்டா! அக்கா வந்துட்டா!" என்று குதித்தார்கள். கிழவிக்கு வேலை செய்வதற்கு வேண்டுமானால் கண் மங்கிவிட்டது. மனிதர் களைப் பார்ப்பதற்கும் மற்ற விஷயங்களைக் கவனிப்பதற்கும் கண் எத்தனை கூர்மையாய்த் தெரிகிறது தெரியுமா! கிழவி மதுரத்தைப் பார்த்ததும்..."யாரு மதுரமா? ஐயையோ! இதென்னக்கொள்ளேடி யம்மா! வெள்ள வெளுக்க வெளுத்து உருளைக்கிழங்குபோல்

பெருத்து மதோன்மத்தாய் வந்திருக்கிறளே! ஆம்படையான் செத்த பிறகுகூட புக்ககத்துச் சந்தோஷம் உப்பிப்போய்விட்டதோ" என்று ஜபமாலையை உருட்டிக்கொண்டே வெடுக்கென்று கூறினள்.

அதே சமயம் சின்னம்மாள் வயிற்றைச் சாய்த்துக்கொண்டு, "ஏண்டியம்மா! உப்பாமல் வற்றிப்போய்விடும் என்று எண்ணினயா என்ன? புருஷனில்லாத புக்ககத்தின் சுகம் உனக்கு என்ன தெரியும்? அக்கா வந்தாளாம், அக்கா. சாக்ஷாத் மூதேவி அக்காதான் வந்திருக்கிருள். போங்கள் வெளியே!" என்று குழந்தைகளை ஒரு அதட்டு போட்டாள். அம்மட்டுடன் நிற்காமல் மதுரத்தை நோக்கி, "ஏண்டியம்மா இந்த வீட்டின் நினைவுகூட மறந்துபோய்விட்டதா? ராணியம்மாளுக்குக் கடிதம் போட்டுத்தான் மரியாதையாய் அழைத்துக்கொண்டு வரவேண்டுமா? நல்ல மாமியாராம். நல்ல மோகம். இப்பவாவது வரவேணுமென்று பெரிய மனது செய்து வந்தயேம்மா!" என்று குத்தலாகக் கூறினள்.

நரகத்தில் காலை வைத்தபிறகு பாம்புக்கடிக்கும், தேள்கடிக்கும், துஷ்ட ஜந்துக்களின் பயத்திற்கும் அஞ்சுவதென்பது முடியுமா? பாவம்! மதுரம் வாயைத் திறக்கவே இல்லை. தலைவிதியை எண்ணி ஸ்நானத்தைச் செய்துவிட்டு உள்ளே வந்தாள்.

இவள் தலையைக் கண்டதும் சின்னம்மாள் அரிசியையும், பருப்பையும், இட்டிலிக்கு ஊறப்போட்டாள். முறுக்கு, சீடைக்கு அரிசியை ஊறவைத்தாள். இரண்டுபடி உளுத்தம் பருப்பை அப்பளாத்திற்கு ஊறவைத்தாள். இன்னும் ஒன்றும் பாக்கித் தோன்றவில்லை போலிருக்கு பாவம்!..."அடி மதுரம்! வீட்டில் ஒரு பண்டம் என்றால் ஒன்றும் இல்லை. குழந்தைகள் வாய் ஊறலுடன் பறக்கிறதுகள். இதை, முறுக்கு சீடைக்கு இடித்து வை. இது அப்பளாத்து பருப்பு. இது இட்டிலிக்கு...அதோ கூடையில் நூறு மாங்காயும், எலுமிச்சங்காயுமிருக்கு. ஊறுகாய் போடணும். மிளகா வத்தல், மாடியில் உலர்த்தி இருக்கு. அதைக் கொண்டு வந்து பொடி இடித்து வை" என்று திட்டம் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

ஐயோ பாவம்! மதுரத்தின் உள்ளம் எப்படித்தான் கொதிக்கும்? வயிற்றில் குபீர்குபீர் என்று பற்றி எரிகிறது. நெஞ்சை அள்ளித் தின்கிற துயரத்தை வெளியிட என்ன யோக்கியதை இருக்கிறது. யாரிடம் வெளியிட முடியும்? விதியை எண்ணி வேலையில் இறங்கினள். "நான் என்ன மனுஷியா? எந்திரமா? மிருகமா? பூதமா? பைசாசமா? ஐயோ பாவம் என்று அங்கலாய்ப்புடன் ஆதரித்துப் பேசுவதற்காகிலும் ஒரு ஆத்மா இருந்தால், இத்தனை சிறுமைகள் உண்டாகுமா! என் வாழ்வு என்று வீழ்ந்ததோ அன்றே தாழ்வு வந்து என்னை ஸ்வீகரித்துவிட்டதல்லவா! இப் பாழும் கட்டைக்கு மறைவும் இல்லையே!" என்று கண்ணீரை ஆறாய்ப் பெருக்கினள்.

நடராஜன் தலையைக் கண்டதும் சின்னம்மாள் கடுத்த முகத்துடனேயே, "என்ன! சம்பந்திஸ்வாமி சொல்லியபடி வாக்கை நிறைவேற்றினரா? கடுக்காய்க் கொடுத்துவிட்டாரா? பணம் வந்ததா! மாப்பிள்ளையுடன் பணத்திற்கும் தர்ப்பணந்தானு?" என்று வெடுக்கென்று கேட்டாள்.

நட:—சீச்சீ! உளருதே! அந்த மனுஷ்யன் மகா நல்லவர். பரம சாது. அவரை நான் மடத்தனமாகத் துவேஷித்துக்கொண்டு இத்தனை நாள் விரோதியாகவே இருந்துவிட்டேன். அவர் மதுரத்தினிடம் எவ்வளவு அன்பும், பச்சாத்தாபமுங்கொண்டு ஆதரிக்கிறுர் தெரியுமா! அந்தச் சின்ன நாட்டுப்பெண்ணும் வெகு உத்தமமான குணமுடையவள். மதுரத்தைத் தன் உயிர்போல் நேசிக்கிருள். பிரிய மனமின்றிக் கண்ணீரைக் கொட்டினுள் பாவம்!

சின்ன:—ஆமாம். இங்கு அவளை நாங்கள் நசுக்கிப் பிழிந்து கடித்துத் தின்று விடுகிருேமோ இல்லையோ! அவாதான் அன்பு காட்டி ஆதரிக்கிறவர்கள். எத்தனை செய்தாலும் என் தலையெழுத்து இப்படியெல்லாம் வார்த்தை கேட்க விதி அமைகிறது. ஏன்? அங்கேயே விட்டுவிட்டு வரதுதானே! இங்கு ஏன் இந்த ராக்ஷஸியிடம் அழைத்துக்கொண்டு வரவேண்டும்?

நட:—சேச்சே வீணுக்காவது ஒளருதே. அவளிடம் பிரியமாயிருக்கிறுர்கள் என்றதைக் கேட்பதற்குக்கூட உனக்குப் பிடிக்கவில்லையா! பேசாமலிரு. சொன்னது சொன்னபடியே ஆயிரம் ரூபாய்க்கு நிலமாக வாங்கி, அவள் காலத்திற்கும் வயிற்றுக்குக் கஞ்சி கிடைக்கும்படிச் செய்துதான் அனுப்பினர். அவர்கள் மிகவும் தயாள குணமுடையவர்கள்.

சின்னம்மாளின் தாயார்:—ஐயையோ! சின்னு! லாபத்தை வாரிக் கட்டிக்கொண்டாச்சு. அந்த முளையிலறுத்த முண்டச்சி பேரில் எழுதுவதாம். நெலம் வாங்குவதாம். போருண்டியம்மா! போரும். பெத்த அப்பனைக்கூட நம்பக்கூடாதென்கிற கெட்ட எண்ணத்தை உள்ளே மறைத்து அவள்மீது அன்பாயிருப்பது போல் காட்டி நடித்து வாங்கியிருக்கிறுர்கள். இதில் ஒரு தம்பிடி கூட உதவாது பாரு. அவளையே தலையைத் தடவி மறுபடியும் பிடுங்கிக் கொள்வதற்குத் தாண்டியம்மா இந்த வேஷம். இதிலிருந்தே அவாளுடைய துரெண்ணம் தெரியவில்லையா?—என்று பெரியதோர் பிரசங்கத்தின் மூலம், நடராஜனின் மூளையைக் குழப்பி மாற்றுவதற்குத் தொடங்கிவிட்டாள்.

அந்தப் புனிதமான காரியத்தை ஊர்ஜிதப்படுத்துவதுபோல் சின்னம்மாளும் சேர்ந்துகொண்டு "எனக்கு அப்பவே தெரியும். இந்தப் பைத்தியத்தை அவர்கள் ஏமாற்றிவிடுவார்கள் என்று நான் சொல்லவில்லையா! உங்களிடம் நேரில் பணத்தைத் தாராமல் எழுத்தென்ன?

ரிஜிஸ்தரென்ன? இதிலிருந்தே அவர்களுடைய சூதும் வாதும் தெரிய வில்லையா! இத்தனையும் அந்தச் சித்திராங்கிமுண்டையே சொல்லிக் கொடுத்துச் செய்துகொண்டிருப்பாள். அப்பனுக்கு எங்கே அந்தப் பணம் உதவி விடுமோ! என்று சூழ்ச்சி செய்த வேலைதான் இது. ஆயுட்காலம்வரையில் வைத்துக்கொண்டு சோறு போட்டுக் காக்கும் அப்பனை நம்பாத மனிதர்கள்தான் நல்லவர்கள், உத்தமர்கள், தயாள குணமுள்ளவர்கள். அடடா! தெரியவில்லையா பவிஷு?

கடன் தலைக்குமேலேறி தமுக்குத் தட்டும் நிலையில் இருக்கும் போது அந்தப் பணத்தால் அப்பனை மீட்க மனமில்லாத மொட்டச் சிக்கு இந்த மட்டுமா பரியவேண்டும். இன்னுங்கூட நீங்கள் சொல்லவேண்டுவதுதான்—என்று தன்போக்காகச் சரமாரியாய்ப் பொழிந்து ஆட்டமும் ஆடவாரம்பித்தாள்.

முன்பே ஒருதரம் சொல்லியதுபோல், நடராஜனது மனம் எந்தப் பக்கம் கனமோ, அந்தப் பக்கம் சாய்வது வழக்கமல்லவா! சுய புத்தியில்லாத எந்த மனிதர்களின் கதியும் இம்மாதிரிதான். மாமி யாரும் மனைவியும் போட்ட தூபத்தின் பரிமணம் தலைக்கேறி அரை விநாடியில் மனம் மாறிவிட்டது. ஆத்திரம் ஒருபுறம் பொங்கிக் கூத்தாடுகிறது. பல்லை நெறநெறவென்று கடித்தார். "சின்னு! நீ என்னவானுலும் புத்திசாலிதான். பெத்த தகப்பனுகிய என்னை நம்பி என்னிடம் கொடுக்காமல் என்னை ஏமாற்றி இம்மாதிரி செய்து விட்டதை நீ எடுத்துச் சொல்லிய பிறகுதானே தெரிகிறது. இருக் கும்; இருக்கும். நீ சொல்கிறபடி அந்தக் கழுதையே தன் பேரில் வாங்கிவிடும்படி சொல்லியிருந்தாலும் இருக்கும். இப்பத்தான் தெரிகிறது சின்னு! ஆகட்டும். ஒரு கை பார்த்துக்கொள்கிறேன். 'தனக்கென்றல் ஒன்று; பிறருக்கென்றல் ஒன்று' என்ற நியாயம் எப்படியிருக்கிறது என்பதைக் காட்டிவிடுகிறேன்" என்றார்.

## 21

### பக்ஷத்திற்குப் பஞ்சந்தான் பணத்திற்குப் போட்டிதான்

"ஆகட்டும். ஒரு கை பார்த்துக்கொள்கிறேன். 'தனக்கென்றல் ஒன்று; பிறருக்கென்றல் ஒன்று' என்ற நியாயம் எப்படியிருக்கிறது என்பதைக் காட்டிவிடுகிறேன்" என்று பல்லைக் கடித்துக்கொண்டே சாம்பமூர்த்தி நர்த்தனம் செய்தான். அவனது மனைவியாகிய சீதம்மாள், 'நான் அப்பவே சொல்லவில்லையா! என் அண்ணனிடம் பணத்தைப் பிடுங்கி அந்த நாசமாய்ப்போன தொந்தி சாஸ்திரிகள் அவாளுக்குத் தொலைத்துவிட்டது. அதை யடித்

துக்கொண்டுபோக சமயத்தை யறிந்து உங்கப்பா இத்தனை நாளு மில்லாத உறவு வைத்துக்கொண்டு பெண்ணுடன் சென்று பணத் தையும் அடித்துக்கொண்டு போய்விட்டார். நீங்கள் அதை அடை யப் பார்த்தால், அவர் உங்களுக்கு அப்பாவல்லவா! அதை விடு வாரா! அந்தச் சின்னம்மாளாகிய சித்திராங்கிதான் விடுவாளா! இனி மேல் ஒரு கை பார்ப்பதாவது. இரு கை பார்ப்பதாவது. வீணுகத் துள்ளினல் லாபமென்ன ?'' என்று அதற்குமேல் துள்ளினுள்.

சாம்ப :—ஆமாம்! நீ சொல்லியதுபோல் அப்போதே அங் கிருந்து நானே போய் அழைத்துக்கொண்டு வந்திருந்தால், இந்த இறுமாப்புப் பிடித்தவர்கள் கொட்டம் அடங்கியிருக்கும். கடிதம் எழுதியிருக்கும் கொழுப்பைப்பாரேன்.'உனக்கு ஏராளமான பணம் இருப்பதால், வேலைக்காரியை வைத்துக்கொண்டு காரியத்தை நடத்த லாம். எனக்குத்தான் மதுரத்தின் சகாயம் இப்போது அவச்யம். ஆதலால், அவளை அனுப்ப முடியாது' என்று எவ்வளவு திமிருடன் எழுதியிருக்கிறார் தெரியுமா!

சீதா :—ஆமாம். சதாகாலமும் செக்குமாடுபோல உழைக்க ஒரு மனுஷியும், வெள்ளிசாப் பணமும் கிடைத்தால் ஏன் விடு வார்கள்? நெருப்பென்றால் வாய்சுட்டு விடாது. வார்த்தைக்குச் சொல்லுகிறேன். இந்தக் காலத்தை நம்பவே முடியாது. இந்தப் பணத்தையும் குசாலாய் இளைய மனைவியுடன் சேர்ந்து ஸ்வாஹா செய்துவிட்டுத் தானும் வாயைப் பிளந்துவிடுவாரேயானால், பிறகு அந்த இளையாளான பத்திரகாளி ஒரு நிமிஷங்கூட அந்த மொட்டச் சியை வைத்து ஆதரிக்கப்போவதில்லை. இது நிச்சயமாகத் தெரியும். பிறகு உங்கள் காலில்தானே வந்து விழவேண்டும். நீங்கள்தானே அவளை ஆயுள்வரைக்கும் சோற்றைக் கொட்டிக் காப்பாற்றிக் கரு மாதி செய்யவேண்டும். இன்று இத்தனைத் திமிருடனிருக்கும் மனுஷி நாளை எப்படி உங்களைப் பார்ப்பாள்? இதெல்லாம் யோசனை செய்யவேண்டாமா? புத்திகெட்டவளா யிருக்கிறுளே! கூடப்பிறந்த அண்ணனைவிட இளையதாயார்மீது உருகி வழிகிறுளே பாவம்!

சாம்ப :—சீதா! ஒவ்வொன்றும் பிரிவு பிரிவாக நீ எடுத்துச் சொல்லும்போதுதான் எனக்குத் தெரிகிறது. நான் இன்று அந்த மனிதனுக்குக் கடிதமே எழுதாமல் மதுரத்திற்கே எழுதுகிறேன். அந்தக் கழுதை என்ன பதில் போடுகிறதோ பார்க்கலாம்?—என்று கூறி, உடனே ஒரு கடிதம் எழுதித் தபாலில் அனுப்பிவிட்டான்.

சுதந்தரமாக விருப்பதாய் நினைக்கும் மனிதர்களுக்கே உண் மையில் சுதந்தரம் கிடையாது. ஏகசக்ராதிபதியாய் அரசாளும் மன்னனுயினும் அவனுக்கும்மேல் கடவுளிடம் பயபக்தியும் அடக்க மும் காட்டியே தீரவேண்டும். அமைச்சரின் புத்திமதிக்குக் கட்டு பட்டுத்தான் நடக்கவேண்டும். குடிஜனங்களின் சௌகரியத்தை அனுசரித்துத்தான் செங்கோல் செலுத்தவேண்டும்.

அப்படிக்கிருக்க, அடிமை நாட்டில் அடிமையாகவே உள்ள மதுரத்திற்கு வாய்திறந்து பேசுவதற்குத்தான் சுதந்தரம் உண்டா? அல்லது தன் ஸ்வாஸத்தையாவது தான் பெரிதாக விடுவதற்குத் தான் சுதந்தரமுண்டா! ஒன்றுமில்லை. எந்திரம்போல் வேலை செய்வதும், துக்கம் பொங்கிக் கண்ணீராக வழிவதுந்தான் அவள் கண்ட உலக இன்பமாக ஏற்பட்டது.

தன் பணத்தைப் பற்றி இருவரும் சண்டை செய்வதை அவள் அறியாமலில்லை. அதற்கும் வாயைத் திறக்கவில்லை. மதுரத்தையே நடராஜன் இது விஷயமாக எத்தனையோ மருட்டி வெருட்டித் திட்டினர். ஊமைபோலிருப்பதைத் தவிர, அவள் வேறென்ன செய்ய முடியும்?

நடரா:—எத்தனையோ தரம் சொல்லியாயிற்று. இப்போது கடைசிதரமாகச் சொல்கிறேன். நீ பங்கஜத்திற்குக் கடிதமெழுதி, அந்த நிலத்தை முதலில் விற்க ஏற்பாடு செய்யப் போகிறாயா இல்லையா? இப்போது மென்னியைப் பிடிக்கும் கடனில் நான் மூழ்குவதுதான் உனக்குத் திருப்தியோ?...என்ன சாதனை இது? ஊமைபோல் நின்றுவிட்டால், கேள்வியே இல்லை என்று தைரியமா?

மதுர:—அப்பா! உங்களுடைய க்ஷேமத்தைச் சதா நான் கோருகிறேனேயன்றி, க்ஷாமத்தைக் கனவிலும் நினைக்கமாட்டேன். இப்போதுதான் வாங்கிய அந்த நிலத்தை இதற்குள் விற்கப்போனால், விலை எழும்பாது. 'வாங்கியதை உடனே என் விற்கிறார்கள்? அதில் என்ன குற்றமோ!' என்றெல்லாம் ஜனங்கள் யோசிக்கமாட்டார்களா? மேலும் வருஷா வருஷம் கிடைத்தவரையில் தானியமாக வந்தால், குடும்பத்திற்கு மிகவும் உபகாரமாயிருக்கு மல்லவா?

சின்ன:—உங்களுக்கு வெட்கமில்லையா! மூலையில் அடைத்துக் கிடக்கும் மொட்டச்சிக்கு உலக விவகாரங்களெல்லாம் அபாரமாய்த் தெரியுமோன்னோ! ஏதோ கதை அளக்கிறாள், வேலையற்று உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே! காரியம் ஆகாதிருப்பதற்குத்தான் இந்த வழி.

நடரா:—மதுரம்! நீ உடனே அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டு எழுதாவிடில், நான் நேரில் சென்று இரண்டில் ஒன்று தீர்மானித்துக்கொண்டு வந்துவிடுவேன். தெரிந்ததா! உடனே இன்றே எழுது—என்று அதிகாரத்துடன் ஒரு உத்தரவு போட்டுவிட்டுப் போய்விட்டார்.

அன்று தான் பங்கஜத்தினிடமிருந்து அன்பு மயமான கடிதம் வந்திருந்தது. அதைக் கண்டு ஆனந்திப்பதற்குள், தகப்பனாரின் கடின உத்தரவுக்கு எப்படிப் பதில் எழுதுவது என்று துடித்தாள். சாம்பமூர்த்தியின் கடிதம் ஒன்று பாணம்போல் சீறிக்கொண்டு வந்தது. என்ன செய்வாள் பாவம்! அண்ணனும் தகப்பனும்

சேர்ந்து போட்டியிடுவதெல்லாம் தன்னுடைய கால்வயிற்றுக் கஞ்சியில் மண்ணைப்போடுவதற்காகத்தான் என்பது அவள் புண்ணுன இதயம் அறியாதா என்ன ?

பணமில்லாதிருக்கையிலேயே வேலை செய்வதற்காகத் தன்னைப் பற்றிப் போட்டியிட்டுச் சண்டை போடும்போது, பணமும் கொஞ்சம் இருப்பதால் கேட்கவேண்டுமா! இதற்குமுன் எத்தனையோவிதம் அனுபவப்பட்டுத் தவித்ததுபோதாமல், இந்தப்பணத்தினுல் இன்னும் என்னென்ன சிறுமைகள் இருக்கின்றனவோ அவற்றையும் அனுபவித்தல்லவோ ஆகவேண்டும்? என்னுடைய நிழல் என்னை விட்டுப் போகுமா! எந்தவிதமாக நான் இந்த விஷயத்தைப்பற்றிக் கடிதம் எழுதுவேன்—என்று குழம்பிப்போய் மதுரம் தத்தளிக்கையில்,

ஸிந்து பைரவி

கண்ணன் பதத்தை மறவாதே பவக்
கடலினைத் தாண்டிடும் மரக்கலமதுவே. (க)
எண்ணெயில் விழுந்த ஈ என நெஞ்சே!
இன்னும் துடித்திடில் எமனுனை விடுவனோ? (க)
அன்னையுமாகி அத்தனுமாகி
பின்னும் பலவுமாகிப் பேணி வளர்த்திடும் (க)
தீரவைராக்கியமும் தெய்வபக்தியும் கொண்டால்,
கோர பயமொழியும் கொடிய நரகழியும். (க)

என்ற அருமையான பாடலை ஒரு பஜனை கோஷ்டி பாடிக்கொண்டு செல்லும் சப்தம் கேட்டு, அப்படியே அவள் மெய் சிலிர்த்தது. மார்பு துடித்தது. புறக்கடைப் பக்கமுள்ள சுவர் பக்கத்தில் துணி துவைக்கும் கல்லிருந்தது. அதன்மீது ஏறிப் பார்த்தால், அந்தப் பஜனை கோஷ்டி செல்வது நன்ருகத் தெரியுமாதலால், அதன்மீது ஏறிப் பார்த்தாள். ஆனந்தக் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது. பஜனையில் ஒருவர்—இளங்காளை எனக் கூறலாம்—தலை மொட்டையடித்துவிட்டு, காஷாயதாரியாய்ப் பரிபூர்ண விரக்தியுடன் உலகத்தை ஒரு துரும்பாக மதித்து மாயையைக் காலால் உதறித் தள்ளிவிட்டுச் செல்லும் தீர வைராக்கியமுடையவராய்ச் செல்லும் காக்ஷியை அங்குக் கூடியுள்ள யாவரும் கண்டு வியப்புற்ருர்கள்.

'இம்மாதிரி பெண் ஜன்மம் எடுத்து ஆடல் படுவதைவிட நாமும் ஓர் ஆண் கட்டையாகப் பிறந்திருந்தால், இஷ்டம்போல் சுத்துவதற்காவதுச் சுதந்தரமிருக்குமல்லவா! இப்பாழும் ஜென்மத்தில் ஒரு பலனும் இன்றி, அடிமையினும் அடிமையாய் அடைப்பட்டுச் சாவதுதான் இக் கட்டையின் விமோசனமா?' என்று மதுரம் தனக்குள் மனமுருகியவாறு பார்த்துக்கொண்டிருந்தாள்.

பஜனை கோஷ்டியிலிருந்த சாமியார் மத்தியில் மத்தியில், பாடுவதை நிறுத்திவிட்டு, "மகா ஜனங்களே! பகவானைப் பக்திசெய்து

முக்தியடைவதற்கு இச் சரீரத்தின் உள்ளம் எத்தனை தூய்மையாக இருக்கவேண்டுமோ, அதேபோல் இச் சரீரம் நன்ருகவும் திடமாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு, நம்மைச் சுற்றியுள்ள சகலமும் தூய்மையாயும் சுத்தமாயுமிருந்தால்தான் அது ஆரோக்கியமாயிருக்கும். சரீரத்தின் பரமவைரிகளான வியாதிகள் அணுகா. வியாதியை வென்று சரீரம் சுத்தமான ஆரோக்கியமுறையில் இருந்தால்தான் பகவானைப் பரிசுத்தமான சித்தத்துடன் பஜித்து முக்தியடைய முடியும்.

ஆகையால், மகா ஜனங்களே! திரும்பத் திரும்பச் சொல்வதெல்லாம் முழுமுதற் கடவுளாகிய அக் காருண்ய சாகரனின் பாதத்தில்போய்ச் சேர்வதற்குத்தான் மார்க்கமாக விருக்கின்றன. நம் மனத்தைச் சுற்றி அறியாமையால் உண்டாகிற பலவிதமான ஆபாஸங்கள் இருப்பதால்தான் ஆத்ம சுத்தியும் ஆத்ம சக்தியும் அடைய முடியாது ஆத்மா நசித்து, நரகத்திற்குப்போய்ச் சேர்ந்து விடுகிருேம்.

அதேபோல் நம்மைச் சுற்றி அசுத்தம் நிறைந்திருக்குமாயின், அந்த அசுத்தத்தின் கொடுமையால் மனித சரீரம் பல விதத்தில் நாசத்தை யடைகிறது என்கிற தத்துவத்தை ஒவ்வொரு மானிடனும் உணரவேண்டும். அதை உணர்ந்து விடுவானேயானுல், மனிதன் சரீரத்தையும் நோயணுகாது காத்து ரக்ஷிக்க முடியும். ஆத்மாவையும் மாயை அண்டாமல் பாதுகாத்து ரக்ஷகனின் திருவடியை அடைய முடியும். ஒன்றையொன்று ஒட்டியே நமது வாழ்க்கையைப் பகவான் வகுத்திருக்கிருர்.

இதோ பாருங்கள். வீதியில் குப்பையைக் கொட்டி இருக்கிறீர்கள்; இதிலிருந்து உண்டாகும் துர்நாற்றம், விஷக்கிருமிகள் முதலியன மீண்டும் உங்களையேதான் தேடி வந்து பலவிதமான வியாதிகளை உங்களுக்குப் பரிசாகக் கொடுத்துச் செல்கின்றன.

அதை முதலில் கவனியாது, வியாதி வந்த பிறகு அவஸ்தைப் படுவது, மருந்து குடிப்பது, பத்தியம் இருப்பது, படுக்கையோடு படுக்கையாய் உழல்வது, கண்டோர் வெறுக்கும் தன்மை அடைவது இவையெல்லாம் எப்படியிருக்கின்றன தெரியுமா! பகவானை வழிபடும் மார்க்கம் தெரிந்தும் நன்மார்க்கத்தில் செல்லாது தீய வழியில் குசாலாகச்சென்று உழன்றபிறகு, பாவத்தைப் பரிகரிக்கக் கடவுளை வேண்டுவது, தவம் செய்வது, தானதருமம் செய்வது, கண்கெட்டபிறகு சூர்ய நமஸ்காரம் செய்வதுபோல் வேருடன் பகவானைப் பிடுங்குவதற்கொப்ப அழுவது. இதில் லாபமென்ன?

வீதியிலுள்ள இந்தச் சாக்கடையைப் பதப்படுத்தாவிட்டால், ரோகம் வருவது எப்படி நிச்சயமோ அப்படியேதான் குப்பைகளைக்

குவிப்பதனுலும், குழந்தைகளை மலஜலங்கழிக்க வீதியில் உட்கார வைப்பதனுலுமாகும். இனிமேல் அம்மாதிரி செய்யாதீர்கள் என்று மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்!" என்று ஒரு உபந்நியாசத்தைச் செய்துவிட்டு, வீதியிலுள்ள குப்பைகளைத் தாமே கைகளால் பெருக்கிக் கூடையில் வாரி, குப்பைத்தொட்டியில் கொண்டு கொட்டினுர்.

இந்த அற்புதமான சம்பவத்தைக் கண்டு யார்தான் வியக்க மாட்டார்கள்? "அடடா! இவர் பால சந்நியாசியாய் இருப்பதுடன் காந்தியின் சிஷ்யனுகவும் இருக்கிருர். அதான் இம்மாதிரி கிராமத்து வேலைகளைச் செய்ய வந்திருக்கிருர்" என்று அபாரமாகப் புகழ்ந்து பேசினுர்கள்.

அவருடன்கூட வந்திருக்கும் சிஷ்யர்களும் அவரைப்போலவே தெருவிலுள்ள அசுத்தங்களையெல்லாம் நீக்கிச் சுத்தம் செய்தவாறு, "தாய்மார்களே! குப்பைகளை ஓரே இடத்தில் சேர்த்தாற்போல் கொட்டி வைத்தால், உங்களுடைய நிலங்களுக்கே எருவாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். வீதியில் சுத்தமும், உங்களுக்கு உபயோகமுமாயுள்ள இக் காரியத்தைக் கட்டாயம் செய்யுங்கள்.

வீதியில் சாக்கடையோரமாக வைத்துக்கொண்டு விற்கும் எந்தப் பண்டத்தையும் வாங்கி உபயோகித்து வியாதியை விலை கொடுத்து வாங்குவதுபோல் வாங்காதீர்கள். நீங்களெல்லோரும் வாங்கித் தின்பதனுல்தான் அவர்களும் தைரியமாகக் கடை வைக்கிருர்கள். நீங்கள் கட்டுப்பாடாக வாங்காமல் மறுப்பதோடு சுத்தமான இடத்தில் வைத்தால்தான் வாங்குவோம் என்றும் கண்டிப்பாய்க் கூறிவிடுங்கள். பிறகு ஏன் வியாபாரத்திற்கு வருகிருர்கள் பாருங்கள்" என்று வீட்டுக்கு வீடு உள்ள மனிதர்களிடம் சொல்லிக்கொண்டே சென்றுர்கள்.

தௌர்ப்பாக்கியம் நிறைந்த பிம்பமாயினும் இம்மாதிரியான ஓர் சத் விஷயத்தைப் பார்த்ததும் அவளை மீறிய மன எழுச்சியும், ஆனந்தமும் உண்டாகியதால், அப்படியே பார்த்துக்கொண்டு அங்கேயே நின்றுவிட்டாள்.

அதே நிமிஷம், "ஐயையோ! அந்த வேஷக்கார மாய மொட்டை சந்நியாசி, ஊரையெல்லாங்கெடுத்துக் குட்டிச்சுவராக்க வந்திருக்கும் கடன்காரனை இந்த மொட்டச்சி, பார்க்கும் பார்வையைப் பார்த்தாயா? கால்மீது பாம்பு பிடுங்கினுலும் தெரியாது போலிருக்கே! அடீ சின்னு! இங்கு வாடீ! அந்த மொட்டையுடன் இந்த மொட்டையும் ஓடிப்போய் விடும்போலிருக்கிறதே! எகிரிகூடக் குதித்துவிடுவாள்" என்று கிழவி, கையில் ஜபமாலையை உருட்டியவாறு பெரிய இடி இடித்ததுபோல் கூறியதைக் கேட்ட

வுடனே அங்கு நிற்கும் மதுரத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. பிறகு, நடுநடுங்கியவாறு தடாரென்று கீழே குதித்தாள்.

தோடி ராகம்—ஆதி தாளம்

"கர்வங் கொள்ளாதே நெஞ்சே! உனக்கந்த
கர்வமே கொடிய நஞ்சே.

சர்வமும் நாமென்றும் சகலமும் நமதென்றும்
துர்மதியே உன்னைத் துலைத்திடும் நமனுகும். (க)

கோபுரத்தைப் பொம்மை தாங்குதல் கூடுமோ!
பாபக்குன்றைக் கோலால் பெயர்த்திடல் கூடுமோ? (க)

இந்தப் பாடல் கிழவியின் காதில் விழுந்தவுடனே முகத்தைச் சுளித்தவாறு, இரு கைகளையும் சேர்த்துச்சுடுக்கியபடியே "வேஷக் காரப் பாவி! மொட்டெ சந்நியாசி போறபோக்கில் பாட்டைப் பாரு, பாட்டு! துத்தூ! தடிக் கம்மனுட்டி! கருவமாம், பருவமாம், ஔறுகிறுன்" என்று திட்டிக்கொண்டே உள்ளே ஓடிவிட்டாள்.

மதுரத்தின் காதுக்கு அந்தப் பாடல் மதுரம்போலவே இருந்தது. "கடவுளே அந்தச் சந்நியாசியின் மூலம் இந்த அகம் பாவம் பிடித்தக் கிழவிக்கு ஒரு சூடு போடுவதுபோல் செய்து வைத்தார்" என்று தனக்குள் எண்ணியபடியே கிழவிக்கு முன்னுல் அவளும் உள்ளே வந்து சேர்ந்தாள். புசலுக்கும் பேரிடிக்கும் மத்தியில் எப்படியோ சில காலம் கழிந்தது.

சின்னம்மாளது மகள் கண்ணம்மாளுக்கு விவாகம் செய்விக்க வேண்டிய சமயம் வந்தது. மதுரத்தின் நிலத்தைக் கபளீகரம் செய்வ தற்காக வீட்டில் அவளைப் படுத்திய பாடு கொஞ்சநஞ்சம் இல்லை. இந்த இம்சையைச் சகிக்கமாட்டாமல், கையெழுத்துப் போட்டு, பட்டாவைத் தகப்பனுர்மீது மாற்றிக் கொடுத்துவிட்டாள்.

பிறகு கேட்கவேண்டுமா? உடனே விற்றுப் பணத்தைப் பச்சடி பங்கு போட்டுக் கரைத்துத் தலை முழுகிவிட்டார்கள். தனக் கென்று கிடைத்த கால் வயிற்றுக்கஞ்சியும் போய்விட்டது. இனி, நிரந்தரமான அடிமை என்பதற்குக் கேட்கவேண்டுமா!

கண்ணம்மாளுக்குக் கல்யாண ஏற்பாடுகள் தடபுடலாக நடத்துவதற்கு மட்டும் சின்னம்மாள் பின்னடையவில்லை. ஆனுல், மதுரத்திற்கு மட்டும் கல்யாணகாலம் நெருங்க நெருங்க மனத்தில் வேதனையும், சங்கடமும் அதிகரித்தன. "என் தமயன் கல்யாணத் தைக் கண்ணுல் பார்ப்பதற்குக்கூட வரக்கூடாதென்று சொல்லிய மகாதேவி, தன் பெண் கல்யாணத்தில் என்னென்ன கொடுமை களும், சிறுமை பாணப் பிரயோகமும் செய்வாளோ! மாட்டுத் தொழுவத்தில் விழுந்து கிடக்கும்படி உத்தரவிடுவாளோ! "எதிரில்

வந்தாள். அது கெட்டுவிட்டது; இது கெட்டுவிட்டது" என்று எங்கே ஆட்டம் ஆடப்போகிறுளோ! ஈசா! என்னென்ன சோதனையும், வேதனையும் மிச்சம் வைத்திருக்கிறுயோ! என் உயிரையாவது அதற்குள் கொண்டுபோய் எனக்கு நிம்மதி அளிக்க மாட்டாயா?" என்று தனக்குள் இரவு பகலாக எண்ணிப் புழு வாகத் துடிக்கிருள்.

எந்தக் காரியத்தையும் தைரியமாயும் தாராளமாயும் செய்ய முடியாது ஒரு நடுக்கல் உண்டாகிவிட்டது. 'மூதேவி முண்டை! கல்யாணத்திற்கு மஞ்சள் இடிக்க ஆரம்பிக்கையில் குறுக்கும் நெடுக்கும் திரிவதைப் பாரு!' என்ற சுக்லாம்பரதரம் ஆரம்பமாகி விட்டது. இதற்குமேல் கேட்கவேண்டுமா!

அளிந்த புண்ணுகி நெஞ்சம் துடிக்கும் சமயம் அவளுக்கோர் ஆறுதல் சொல்ல அன்புடன் ஒரு மனிதராவது இல்லையெனினும் சின்னம்மாளும் அவள் தாயாரும் "கல்யாணகாலத்தில் இந்த மொட்டச்சி வேலே செய்வதற்கு உதவுமே என்று பார்த்தால், இந்தக் கொள்ளி மிளகாய், சம்பந்தியாத்துக்காரர்களிடம் இல்லாத பொல்லாததைச் சொல்லிக் கலகம் செய்துவிடும். ஆகையால், இதற்கு என்ன செய்வது? ஏதாவதொரு சாக்கை வைத்து நம்ம கிராமத்துக்குத் தொலேத்துவிடலாம்" என்று குசமசவென்று பேசிக் கொள்வதையும் அந்தத் தௌர்ப்பாக்கியப் பதுமை அறியாமலில்லே.

அச்சமயம் புழுவாய்த் துடிக்கும் அவளுக்கோர் ஆறுதலே அளிக்க பகவானே உதவிபுரிய முன்வந்ததுபோல் பங்கஜத்தினிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. முன்பு மதுரத்தின் நிலத்தின் தகராறு சமயம், பங்கஜத்திற்கு மற்றொரு பிரஸவத்திற்கு உதவி புரிய வரும் படியாக எழுதியும் அவளே அனுப்பாமல் தடை செய்துவிட்டார்கள்.

அதுவும் ஒரு பெண் குழந்தையாகவே பிறந்தது. இப்போது தனக்கு உடம்பு சரியில்லையென்றும் குழந்தைகளுக்கும் தனக்கும் திக்கில்லாதிருப்பதால், இச்சமயம் பெரிய மனது செய்து உதவிக்கு வரவேண்டுமென்றும் உருக்கமாக எழுதியிருந்தாள். இதைப் படித்த மதுரத்தின் உலர்ந்து வரண்டுபோய்விட்ட இதயத்திலும் சிறிது பசை உண்டாகியது. முன்புபோலவே பெருமகிழ்ச்சியும் புத்துயிரும் அவளது இதயத்தை முற்றுகையிட்டன. இருண்ட வானத்திலும் பளிச்சென்ற வெளிச்சம் தெரிவதுபோல் தோன்றியது. பெரிய புதையலேக் கண்டதுபோன்ற சந்தோஷம் உண்டாகியது.

பொன்விழா நாவல் **ஆத்மசக்தி** விலே ரூ. 1/4.
முன்பண மனுப்பி, தபாற்செலவின்றிப் பெற்றுக்கொள்ளவும்.
வி. பி. கிடையாது.

## ஆபத்தின் அந்தகாரம் அபவாதத்தின் பயங்கரம்

பெரிய புதையலைக் கண்டதுபோன்ற சந்தோஷம் உண்டாகியது. இருண்ட வானத்திலும் பளிச்சென்ற வெளிச்சம் தெரிவதுபோல் தோன்றியது. முன்புபோலவே பெரு மகிழ்ச்சியும் புத்துயிரும் அவளது இதயத்தை முற்றுக்கையிட்டன. "வாருங்கள்! வாருங்கள். மன்னீ!" என்று பங்கஜம், அவளைப் பெற்ற தாயைப் போல் எண்ணிச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

'ஐயையோ! உடம்பென்ன இப்படி இளைத்துவிட்டதே! அடையாளமே தெரியவில்லையே! என்ன மன்னீ! இப்படி பராமுகமாயிருந்துவிட்டீர்கள்? ஸரஸ்வதியின் தங்கை பார்வதியைப் பாருங்கள். அவள் பிறப்பதற்காகவாவது வருவீர்கள் என்று எண்ணினேன். பிறகு மாமனார் காரியத்திற்காவது வருவீர்களென்று நினைத்தேன். இரண்டிற்கும் வராமையினால், இனிமேல் வரவேமாட்டீர்களென்று தீர்மானித்துவிட்டேன். இருந்தாலும் சந்தேகத்துடன்தான் இந்தக் கடிதத்தை எழுதினேன். இப்போதாவது அனுப்பினார்களே! அதுவே என் பாக்கியம்" என்று கிராமபோன் மெஷின்போல் தன்போக்காக அன்பின் ஆவேசத்துடன் கூறினாள்.

மதுரம் இரு குழந்தைகளையும் மாறிமாறிக்கட்டி அணைத்து முத்தமிட்டாள். 'பங்கஜம்! நான் ஒரு பெரிய அடிமை என்பது உனக்குத் தெரியாதா? என் சரீரங்கூட எனக்கு ஸ்வாதீனமில்லை பங்கஜம்! இப்போது கண்ணம்மாவின் கல்யாணந்தான் என்னை அனுப்பும்படி அவர்களைத் தூண்டியது. ஏதாவதொரு சாக்குக் கிடைத்தால் போதுமென்று வந்துவிட்டேன். உனக்கென்ன உடம்பு? இத்தனை மெலிந்துவிட்டாயே! என்னை அடையாளந் தெரியவில்லை என்று கேட்கும் நீ யல்லவா உருமாறி இருக்கிறாய்! மைத்துனர் உடம்பு ஒன்றுமில்லாதிருக்கிறாரா?' என்று அன்பு ததும்பக் கேட்டாள்.

பங் :—என் மன்னீ! உங்களுக்குக் கடிதம் எழுதிய பிறகுதான் உங்கள் தங்கைக்குக் கல்யாணமென்று கேள்விப்பட்டேன். சரி! நீங்கள் இனி வரப்போவதே இல்லை என்றல்லவா நினைத்தேன்? கல்யாண சமயத்தில் உங்களை எப்படி அனுப்பினார்கள்... அது கிடக்கட்டும். உங்கள் பணம் எப்படியாயிற்று?

மது :—பங்கஜம்! அதைப்பற்றிக் கேட்கவேண்டுமா! பணம் தர்ப்பணந்தானாயிற்று. துர்திருஷ்ட நிழல் எளிதில் என்னை விட்டுப் போகுமா...கல்யாணத்திற்குப் பந்தலில் போய் நிற்க யோக்கியதை இல்லாதவர்களை ஏன் அனுப்பக்கூடாது? கல்யாண வீட்டி

லேயே இருந்தால் அபசகுனமாம். பிள்ளை வீட்டாரிடம் ஏதாவது கலகம் செய்துவிடுவேனும். அவர்களுக்கு நான் அங்கிருப்பது இளைப்பமாம். அதனால் ஏதாவது சாக்கு வைத்துக் கிராமத்திற் காவது தொலைத்துவிடலாமா என்று யோசனை செய்தார்கள். அச் சமயம் கடவுளே இந்தப் பாவிக்குக்கூட இரக்கங் காட்டுவதுபோல் உன் கடிதத்தைக் காட்டினர். உடனே தடை சொல்லாது அனுப்பிவிட்டார்கள். எனக்குக் குழந்தையையும் உன்னையும் பார்க்கவேண்டும்போலிருந்தது ; வந்துவிட்டேன்.

பங் :—ஐயையோ ! இப்படிகூடவா ஒரு ராக்ஷஸி சொல்லு வாள் ? அவர்கள் வீட்டில் உங்களைப் போன்றவர்களே இருக்க மாட்டார்களா அல்லது சம்பந்தி வீட்டில்தான் இருக்கமாட் டார்களா ! அந்த மனுஷியின் இதயம் என்ன கல்லா ! இரும்பா ! கடவுள் ஒருவர் உண்டு என்பதையே மறந்துவிட்டாளா ! இந்தக் கதி தனக்கே வந்துவிட்டால், அப்போது என்ன செய்வாள் ? தன் மக்கள் கல்யாணத்திற்குக்கூடத் தான் இல்லாது எங்கேனும் ஓடி விடுவாளோ ! மகாபாவியாய் இருக்கிறுளே ! உங்கப்பாவுக்கு ஏக கடனாகிவிட்டதால் நிலத்தை விற்க வேண்டுமென்று நீங்கள் எழுதி யிருந்தீர்களே ! கடனுக்கு என்ன பெருத்த செலவும் கல்யாணமும் வந்துவிட்டது ?

மது :—பங்கஜம் ! எல்லோரையும் உன்னைப்போல் பர்த்தாவுக்கு ஏற்ற பத்தினி என்று பார்த்தாயா ? அந்தம்மாளுடைய படாடோ பத்தை நாவலில் வர்ணிக்கலாம். போதாக்குறைக்கு முன்பு ஒரு உத்தியோகஸ்தர் வந்திருப்பதாகச் சொன்னேனே, அவர் அட்டை போல் உறிஞ்சிவிட்டதனால் கடனாகிவிட்டதாம். சின்னம்மாள் தன் சொந்தக்காரரான தாசில்தார் வீட்டுக்கல்யாணத்திற்கு ஜம்பமாகச் செல்லவேண்டுமென்று கடனாக ஜவுளியும், இரவலாக நகையும் வாங்கிக்கொண்டு சென்றாள்.

கல்யாணத்தில் ஏதோ தகராறு ஏற்பட்டு, முகூர்த்தம் நடக்கும் சமயம் கல்யாணமும் நின்றுவிட்டது. "அந்தத் தடபுடல் குழப் பத்தில் இந்த மகாராஜி இரவல் வாங்கிக்கொண்டு போன நகை களவு போய்விட்டது. இந்தத் தண்ட இழவும் வந்து சேர்ந்தது. அப்பாவுக்குக்கடன்வாரண்டு வந்துவிடும் ஆபத்தும் நேர்ந்துவிட்டது. பிறகு, நான் என்ன செய்வேன் சொல்லு. மனம் கேட்கவில்லை. எப்படியும் அதைத் தொலைத்துத் தலைமுழுகி என்னைச் சந்தியில் விட்டுவிடுவார்கள் என்று தெரிந்துவிட்டது. சமயத்திற்காவது உதவட்டுமே என்று கொடுத்துவிட்டேன்.

18340

பங் :—மன்னி ! நான் சொல்வதைக் கேளுங்கள். இனிமேல் நீங்கள் என்னை விட்டுப் போகவே போகாதீர்கள். நான் குடிக்கும்

கூழை நீங்களும் சந்தோஷமாகக் குடித்துக்கொண்டு உயிர் வாழ லாம். அந்த நரகப் படுகுழிக்குப் போகாதீர்கள்—என்றாள்.

இத்தனை நேரம் ஆவேசத்துடன் பேசியதே அவளுக்குத் தாங்க மாட்டாது மூச்சு வாங்க ஆரம்பித்தது. குழந்தைகள் மதுரத்தி னிடம் ஒட்டிக்கொண்டு அப்போதே குலாவ ஆரம்பித்துவிட் டார்கள். மதுரம் ஒருவிதமான தெம்புடனும் உத்ஸாகத்துடனும் வேலை செய்யத் தொடங்கினாள்.

பள்ளிக்கூடத்திலிருந்து கிருஷ்ணன் வந்தபிறகு, மதுரத்தின் வரவு தெரிந்து சந்தோஷப்பட்டான். பங்கஜத்தின் காசநோய் அவளை இலேசில் விட்டுச்செல்வதாக இல்லை. படுத்து, எற்கெனவே இரண்டுமாத காலமாகிவிட்டது. எத்தனையோ ஜாக்கிரதையாக வைத்தியஞ்செய்தும் நோய் குணப்படாது முற்றிவிட்டதானது மதுரத்திற்கும் கிருஷ்ணனுக்கும் நாடியே விழுந்துபோய்விட்டது போலாயிற்று. ஏழைக் குடும்பமும் ராஜ வைத்தியமும் மும்முரமாக நடந்தும் பலன் கடவுள் கையிலல்லவா இருக்கிறது?

ஈசனின் சோதனையை அறியவோ, வெல்லவோ யாரால் முடியும்? மதுரத்தின் உள்ளம் துடிக்கிறது. தன்னுடைய துர திருஷ்ட நிழல்தான் இங்கும் வந்துவிட்டதென்று தவிக்கிறாள். “மன்னி! மன்னி! குழந்தைகள்...குழந்தைகள்...குழந்தைகளைக் கைவிடாதீர்கள். குழந்தைகளைக் காப்பாற்றுங்கள். பரதேசிகளைக் காப்பாற்றுங்கள். நீங்கள்தான் அவைகளுக்குத் திக்கு...நாதா!.... குழந்தைகளையும், மன்னியையும் கைவிடாதீர்கள். காப்பாற்றுங்கள். மன்னியைப் பரதேசியாய் விடாதீர்கள்.........சத்தியஞ் செய்து தாருங்கள்” என்று திக்கித் திக்கிக் கூறினாள்.

தௌர்ப்பாக்கியப் பதுமையாகிய மதுரத்தின் வயிறு எப்படித் தான் கொதிக்காது! தன் இதயம் வெடித்துத்தான் போகக்கூடாதா! அந்தப் புண்ணியவதி பிழைக்கக்கூடாதா என்ற எண்ணத்தைத் தவிர வேறு ஒன்றுமே தோன்றவில்லை. அவள் இதயத்தின் வேகத் தைக் கடவுள்தான் அறிவார். கண்ணீர் பெருகியவாறு கைமட்டும் பிரமாணம் செய்ததேயன்றி வாய் அடைத்துவிட்டது......

உம்...வீண் வளர்த்தலில் பயனென்ன? நடுக்கடலில் விடப் பட்ட மரக்கலம்போல் குழந்தைகளை வைத்துக்கொண்டு மதுரமும் கிருஷ்ணனும் தத்தளிக்கிறார்கள். இதயத்தில் காரிருள் சூழ்ந்துவிட் டதுபோல், உலகமே அந்தகாரத்தின் மத்தியில் சூன்யமாகத் தோன் றியது. தன்னுடைய துரதிருஷ்டந்தான் இம்மாதிரியாயிற்று என்று மதுரம் முட்டிக்கொண்டதால், மண்டையில் ரணங் கண்டதேயன்றி ஆவி என்னவோ நீங்கவில்லை.

கிருஷ்ணனுடைய நிலைமையைக் கேட்கவேண்டுமா? அவன், உயிர் இருந்தும் சவம்போலவே காணப்பட்டான். அவனது வாழ்க்

கையின் பரிதாபத்தை ஈசனையன்றி யார் அறியமுடியும்? மதுரம் கிருஷ்ணனிடம் பேசியதே கிடையாது. கிருஷ்ணனும் மதுரம் நின்ற இடத்திலும் நின்றதில்லை. இருவரது தலையிலும் பேரிடி விழுந்ததுபோலாகிவிட்டபிறகு அவர்களது ஜீவியத்தின் தத்தளிப்பைப்பற்றிக் கூறவா வேண்டும்?

கண்ணம்மாளுடைய கல்யாணத்தின் வைபவத்திலும் பிறகு மாப்பிள்ளை தம் வீட்டிலேயே இருக்கும் புது மோக ஜோரிலும் மதுரத்தின் நினைவு அவர்களுக்கு ஏன் வரும்? தன் மகளும் மருமகனும் புதிய இன்பஉலகில் சஞ்சரிக்கையில் மதுரம் இங்கிருந்து பார்த்துவிட்டால் மிகவும் வயிற்றெரிச்சல்பட்டு சபிப்பாள்; ஆகையால், அவள் இல்லாதிருப்பதே மேல், என்று சின்னம்மாள் தீர்மானித்தாள்.

இந்தச் சாக்கிலாவது மதுரம் அங்கு சௌக்கியமாயிருந்தால் போதுமென்றே நடராஜன் நினைத்ததால் அவரும் அதைப்பற்றி வாயே எடுக்கவில்லை. கண்ணம்மாளும் அவள் கணவனும் சதா கொஞ்சிக் குலாவி ஆனந்தமாகவிருப்பதற்காகவே சின்னம்மாள் மாப்பிள்ளையை வீட்டுடன் வைத்துக்கொண்டாள். அடிக்கடி ஏதாவதொரு சாக்கை வைத்துக்கொண்டு பெண்ணைத் தானே மருமகப்பிள்ளையிடம் அனுப்புவாள். இக்காலத்திய பெண்களைப்போல் தைரியமும் துணிச்சலும் இல்லாத கண்ணம்மாள் தாராளமாகப் போவதற்கும் பேசுவதற்கும் லஜ்ஜைப்பட்டு அஞ்சி மறுத்தாள்.

அதைக் கண்ட தாயார் அடித்து மருட்டிக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குற்றமாகத் தள்ளிக் கண்ணீருடன் மருமகப்பிள்ளையுடன் குலாவ அனுப்புவாள். காப்பி, பலகாரம், வெத்திலைபாக்கு, தீர்த்தம் முதலியவைகளைக் கொடுத்து அந்தச் சாக்கில் துரத்துவாள். ஸினிமாவுக்கு அடிக்கடி இருவரையும் சேர்த்து அனுப்புவாள். இம்மாதிரி செய்து கண்ணம்மாளின் நாணத்தைப்பாணம்போட்டு விரட்டினாள்.

மகளும் மருமகனும் ஆனந்தமாகப் பேசுவதைக் கண்டு சின்னம்மாளும் அவள் தாயாரும் அடையும் பேரானந்தத்தைக் கண்ட நடராஜனுக்கு மட்டும் மனம் துடித்தது. "ஒரு குடல் வித்தியாசமாயிருப்பதனல்தானே மதுரத்தை விஷமாக எண்ணிப் பேசுகிருள். அவளும் இருக்கவேண்டிய நிலைமையில் இருந்தால், அவளும் இப்படித்தானே ஆனந்தமாயிருப்பாள். சில குழந்தைகளுக்கும் தாயாகியுமிருக்கலாமே! உம். எல்லாம் விதி" என்று தனக்குள் வருந்திக் கண்ணீர் விடுவார். சின்னம்மாளின் கும்மாளத்தைக் காணக்காண அவர் இதயத்தில் மதுரத்தின் துன்பம் நிறைந்த பரிதாபகரமான வாழ்வின் பயங்கரம் அதிகமாகத் தெரியவாரம்பித்தது.

கல்யாணமாகிய பிறகு வேலைவெட்டியொன்றும் இல்லாது சாப்பாட்டு ராமன்போல் மருமகன் வீட்டிலேயே இருப்பதென்றல் செலவுக்குப் பஞ்சமா! நடராஜனின் கடனுக்குத்தான் பஞ்சமா!

இரண்டும் போட்டியிட்டுத்தான் யுத்தம் செய்யத் தொடங்கின. மதுரத்தின் பணமும் கரைந்துபோயிற்று. வருகிற தீபாவளியன்று மாப்பிள்ளையை அழைக்கவேண்டுமே அந்தப் பெரிய செலவுக்கு என்ன செய்வது என்கிற ஏக்கம் அவரைப் பிடித்துக்கொண்டது.

தீபாவளிக்குச் சங்கிலியுடன் கைக் கடியாரம், ஆறுமாதத்திற்கு வைரமோதிரம், இரண்டுக்கும் இரண்டு ஜதை பட்டு வேஷ்டி அல்லது சரிகை வேஷ்டி அல்லது புல் ஸூட்டு, இவைகள் கட்டாயம் செய்து தீரவேண்டும் என்பது சம்பந்தியாத்துவர்களின் கண்டிப்பான உத்தரவு. மாப்பிள்ளையுடன் யார் வந்தாலும் அவரவர்களுக்குத் தக்கபடி வேஷ்டிகள், புடவைகள் வாங்கி மரியாதை செய்யவேண்டும். மாப்பிள்ளை திரும்பிச் செல்கையில் உயர்ந்த ரக பக்ஷணங்கள்செய்து பருப்புத்தேங்காய் திரட்டுப்பாலுடன் அனுப்ப வேண்டும். மேற்குறித்தவைகளில் எதுவும் குறையக்கூடாது. இவைகளைச் செய்வதற்கு என்ன தரித்திர பக்ஷமாகப் பார்த்தாலும் 600, 700 ரூபாய்க்குக் குறையாது. சின்னம்மாள் கூசாமல் அவைகளுக்கு லிஸ்டு போட்டுவிட்டாள். நடராஜனுக்கோ கபீரென்று பஸ்மமாகி விடும்போல் சங்கடம் உண்டாகிவிட்டது.

மாப்பிள்ளை லேசுபட்ட பேர்வழியில்லை. 'மோதிரம் கட்டுவது ஒத்தைக்கல்லாகத்தான் இருக்கவேண்டும். மூன்று கல்லும் நான்கு கல்லும் வேண்டாம் என்று உங்கம்மாவிடம் சொல்லு' என்று மனைவியிடம் சொல்லவாரம்பித்தான். கிளிப்பிள்ளையைப்போல் பெண் அப்படியே வந்து பாடத்தை ஒப்பித்தாள். பள்ளிக்கூடத்து வாத்தியார் உத்தியோகத்தில் எதைத்தான் புரட்டிவிடமுடியும்?

தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் விவரமாக எடுத்து எழுதிச் சம்பந்திஸ்வாமியை வேண்டிக்கொண்டு ஒரு கடிதம் அனுப்பினர். இந்தக்கடிதத்திற்குக் கட்டாயம் அனுகூலமானபதிலே வருமென்று எதிர்பார்த்த நடராஜன் தலையில் நெருப்பு மலையைப் புரட்டியது போன்ற ஒரு கடிதம் வந்தது கண்டு நடுநடுங்கினர்.

கடிதத்தை வாங்கிப் படித்த சின்னம்மாள் தலையிலும் வயிற்றிலும் லபோதிபோ என்று அடித்துக்கொண்டு, "ஐயையோ! என் குடியைக் கெடுத்துக் கொள்ளிவைக்கத்தானே அந்த மொட்டச்சி அவதாரம் எடுத்திருக்கிருள். என் குடும்பம் சந்தி சிரித்துப் போச்சே! அடீ அம்மா! சம்பந்தியாத்துக் கடிதத்தைப் பார்த்தாயா? ஐயோ! அனர்த்தவெள்ளம் அபரிமிதமாய் வந்துவிட்டது. கண்ணம்மாள் தலையில் கல்லு விழுந்துவிட்டது...

என்று முடிப்பதற்குள் கிழவி ஜபமாலையை உருட்டுவதை நிறுத்திவிட்டு, "ஐயையோ! என்னடீ வந்துவிட்டது? சொல்லித் தொலையேன். மாப்பிள்ளை நேத்துத்தானேடீ ஊருக்குப் போனுன்? அவனுக்கென்னடீ ஆபத்து வந்துவிட்டது?" என்று பலாக்கணமே பாடவாரம்பித்துவிட்டாள்.

சின்ன :—வருவதற்கு என்ன இருக்கிறது. மூடிவிட்டதே! அந்த மொட்டச்சிதான் என் குடிக்குக் கோடரிக்காம்பாய் இருக்கிறளே! அவளைப்பற்றித்தாண்டியம்மா அவளைப் பத்தித்தான். பொண்டாட்டி செத்த மச்சினனுடன் இந்த மொட்டச்சி தனியாக இத்தனை மாதமாக இருப்பதை நாம் விபரீதமாக நினைக்காமலிருந்தது அநர்த்தமாகிவிட்டது. "இந்தமாதிரி ஒரு மூத்தப் பெண் கெட்டுப் போய் மைத்துனனிடமே இருக்கிறள் என்ற ஊழல் எங்களுக்குத் தெரியாது. அவள் பவிஷு சந்தி சிரிக்கிறது. இப்போது மூன்று மாத கர்ப்பமென்றும் கேள்விப்படுகிறேம். நாங்கள் இருந்து இருந்து இம்மாதிரியான படுமோசமான இடத்திலா சம்பந்தம் செய்தோம் என்று எங்கள் மனம் துடிக்கிறது. அதை எங்கள் சொந்தக்காரர்கள் எடுத்துக் காட்டி ஏசிப் பேசிப் பரிகஸித்து ஜாதிப் பிரஷ்டமும் போட்டுவிடுவதாகக் கூறுகிறர்கள். இந்தமாதிரி மோசத்தையும் அநியாயத்தையும் யார் சகிப்பார்கள்? உங்கள் பெண்ணை வைத்துக்கொண்டு இனி வாழமுடியாது. உங்களையும் உங்கள் மூத்தப் பெண்ணையும் நாங்கள் பிரஷ்டம் செய்யத் தீர்மானித்து விட்டோம். ஆகையால், இனிமேல் இந்தப் பேச்சே வேண்டாம்' என்று கண்டிப்பாய் எழுதிவிட்டார்களே! ஐயையோ! எங் குழந்தையின் தலையில் இப்படியா இடி விழவேண்டும்?" என்று பெரிதாகப் பிரலாபிக்கலானுள்.

கிழவிக்கு இனிமேல் கேட்கவேண்டுமா! "முன்பு போய் வரும் போதே நான் சந்தேகித்தேன். ஊரில் எத்தனையோ பேர் சாகிறர்களே, இந்த மொட்டச்சிக்குச் சாவு வராதா? அந்தப் பாவி முண்டையால் குடும்பமே பாழாகிவிட்டதே! வரவர அவளைப் பார்த்தாலே சந்தேகமாகத்தான் இருக்கிறது. அவள் பார்வையும் நடத்தையும் சகிக்கவேமுடியவில்லை. பெண்டாட்டி செத்த மச்சினனிடம் இருப்பதற்கு எத்தனை நெஞ்சழுத்தமும் துணிச்சலும் குண்டு தைரியமும் வேணும்?" என்று ஆரம்பித்தாள்.

## 23

## துன்பக் கேணியில் துரதிருஷ்டத் தோணி

"அவள் பார்வையும் நடத்தையும் சகிக்கவே முடியவில்லை. பெண்டாட்டி செத்த மச்சினனிடம் இருப்பதற்கு எத்தனை நெஞ்சழுத்தமும் துணிச்சலும் குண்டு தைரியமும் வேணும்? பெத்த அப்பனும், கூடப்பிறந்த அண்ணனும் இருக்கையில் இப்படி ஒரு சின்ன கம்மண்டாட்டியைப் பெண்டாட்டி செத்தவனிடம் விட்டுவிட்டுப் பேசாமலிருக்கிறர்களே! இதென்ன ஆச்சரியம்!

இந்த மொட்டச்சி இருப்பதனால்தான் அந்தத் தடியன் கல்யாணமே வேண்டாமென்று வேதாந்தம் படிக்கிறான். உள் ஊழல் யாருக்குத் தெரியாது. இந்த அழகுக்குக் கம்மண்டாட்டி வேஷம் எதற்கு? சிவனே என்று மயிர் வளர்த்துக்கொண்டு முன்குசவனும் கட்டிக் கொள்ளலாமே'' என்ற அபாண்டமான வசைச் சொற்களை அம்பாள்புரத்திலுள்ள சில வம்பிகள் ஆற்றங்கரை சம்பாஷணையில் ஆரம்பித்து குசமசவென்று பேசலானார்கள்.

அதற்குத் தாளம் போடும் மற்றொரு புண்ணியவதி "அம்மா வந்தாலும் வந்தாள், தங்கம்போலிருந்த பங்கஜத்தைத் துடைகாலிப் பிணம் துடைத்துவிட்டாள். அவளுடையதே சகலமுமாகி விட்டது. ராவும் பகலும் என்னதான் ரகசியமிருக்குமோ அப்படி இழைந்து பேசுகிறார்களே!.........எனக்கென்னவோ மடியில் கனங்கூட வந்துவிட்டதுபோலத்தான் தோன்றுகிறது'' என்று பெரிய பாணத்தைப் பிரயோகித்தாள்.

ஐயோ, பாவம்! "பழியோரிடம் பண்டமோரிடம்'' என்ற பழமொழி பொய்யாகுமா? ஏற்கெனவே வெந்து சாம்பராகும் மதுரத்தின் நெஞ்சு பங்கஜத்தின் பிரிவுக்குப் பிறகு மிகவும் மோசமாகி விட்டது. குழந்தைகளின் பரிதாபமும், அவைகளிடம் கொண்ட அன்பும் அவள் ஆவியைப் பிரிக்காது பிணைத்துவைத்து இம்மாதிரி பழி கேட்கச் செய்தனவேயன்றி, உண்மையில் அவளுடைய துக்கக் கடல் போன்ற வாழ்க்கையின் தத்தளிப்பை யார் அறிவார்கள்?

எப்போதும்போலவே இருட்டு பிரிவதற்குமுன்பு ஜலங் கொண்டுவந்துவிட்டால், பிறகு அவள் சூரியனைக் கண்ணால் நேரில் பார்ப்பதுகூடக் கிடையாது. அடைபட்டுக் கிடந்தாள். தீராப் பொறியாய்க் கிருஷ்ணனுடன் பேசும்படியாக அமைந்துவிட்டதால், மறைவாக நின்று அவசியமான விஷயங்களைப்பற்றிப் பேசுவதைத் தவிர, அவனை நேரில் கண்டவளே யல்ல.

கிருஷ்ணனை மறுவிவாகம் செய்துகொள்ளும்படியாக மட்டும் பலதரம் மறைவிலிருந்தபடியே வற்புறுத்திக் கூறியும் கிருஷ்ணன் ஒரே வார்த்தையாய், "மன்னீ! உங்கள் பிதாவின் மறு விவாக வாழ்க்கையின் நாடகத்தைப் பார்த்தும் நீங்கள் என்னை வற்புறுத்துவது சரியா? என் இரு பெண்களும் என் இரு கண்களாகும். மறு விவாகம் என்கிற ஊசியால் என் கண்ணைக் குத்திக் கொள்ள மாட்டேன். என்மீது கருணைகூர்ந்து இனி இம்மாதிரி விவாகப் பேச்சையே எடுக்கவேண்டாம். அந்த வார்த்தை என் இதயத்தில் கூரிய வேல்போல் பாய்கிறது. என் பங்கஜத்தின் முடிவும் என் வாழ்வின் முடிவும் ஒன்றல்லவா! இனிமேல் விவாகமா! என் பிணத்திற்குக்கூட அது நடக்காதென்றே நினைக்கிறேன்'' என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

உண்மையில், மதுரத்திற்குத் தன் தகப்பனுரின் வாழ்க்கைச் சித்திரம் கண்முன்பு தெரியும்போது அவள் என்ன சொல்லமுடியும்? அதிலும் உலகானுபவமற்ற பேதைப் பரதேசி. இதற்குமேல் எப்படி வற்புறுத்தமுடியும்? அதிகம் சொல்வதற்கும் கூசினுள். துக்கம் தொண்டையை அடைத்தது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் தாமே, அழையா வீட்டிற்கு நுழைகிற சம்பந்தியைப்போல் நுழைந்து உறவு கொண்டாடிப் பேச முன்வரும் வகுப்பார் ஒரு சிலருண்டு. அவர்கள்தான் கல்யாணத் தரகர்கள்; அவர்கள் மட்டும் கோபாலகிருஷ்ணனை விட்டு விடுவார்களா?

"புஸ்தகம் ஹஸ்த பூஷணம், உத்தியோகம் புருஷ லக்ஷணம்" என்கிற வாக்கியங்கள் வெகு காலத்துப் பழமொழிகள். அவ்விரண்டையும் ஒரே சமயத்தில் அனுஷ்டித்துச் சாதிப்பவர்கள் இவர்கள் தான். உத்தியோகமோ கல்யாணத் தரகு; உத்தியோகம் புருஷ லக்ஷணமாகிவிட்டது. ஜாதகங்களோ! கத்தை கத்தையாய் புஸ்தகத்திற்குமேல் கனமாகவிருப்பதால், புஸ்தகம் ஹஸ்த பூஷணமாயிற்று.

அத்தகைய பரோபகாரிகள் கிருஷ்ணனுக்கு வேண்டியமட்டும் தூபம் போட்டுப் பார்த்தார்கள். அவனது மனம் கல்லினும் கடினமாகிவிட்டதால் அசையவில்லை. முன்பு பங்கஜத்தைக் கல்யாணம் செய்து வைத்தவரே, இச் செய்தியைக் கேள்வியுற்றுக் கிருஷ்ணனிடம் வந்தார். அப்போது அவன் தன் துயரத்தை எண்ணிக் கண்ணீர்விட்டபடியே ஆற்றங்கரையில் படுத்திருந்தான். கெட்டிக்காரப் பேர்வழியாகிய அந்தத் தரகர் கிருஷ்ணனை அங்குத் தேடிக் கொண்டுவந்து முதலில் துக்க விசாரிப்பும், உடனே கல்யாண உபதேசமும் ஆரம்பித்தார்.

"ஏண்டாப்பா, கிருஷ்ணு! இந்த வைராக்கியமெல்லாம் எத்தனை நாளைக்கு நிலைநிற்கும் என்று நினைக்கிருய்? நீயோ சின்ன பையன். போகிற பாவி, அந்த ரெண்டு பொட்டைகளையுங்கூட வாழைப்பழம்போல் உரித்து வாயில் போட்டுக்கொண்டு போயிருக்கக்கூடாதா?...என்ற வார்த்தை கிருஷ்ணனது இதயத்தில் ஈட்டிக் குத்துவதுபோலிருந்தது.

அவனது பொறுமையைச் சோதிப்பதுபோன்று பெருத்த ஆத்திரம் உண்டாகிவிட்டது. கண்கள் சிவக்க, "ஓய்! நீர் வயதில் பெரியவராயிருக்கிறீரே என்று உம்மை அடிக்காதுவிட்டேன். இந்த வார்த்தையை வேறு யாராவது சொல்லியிருந்தால் அவர்கள் தோலை வாழைப்பழம் உரிப்பதுபோல் உரித்தே இருப்பேன். மரியாதையாய் எழுந்து போய்விடும். என் கோபத்திற்கு ஆளாகாதேயும்" என்று கர்ஜித்தான்.

கிருஷ்ணனின் புத்திர வாஞ்சையை அறியாத தரகர் அசட்டுச் சிரிப்புச் சிரித்துப் பல்லைப் பிளந்துகொண்டு நொண்டிச் சமாதானம் கூறத் தொடங்கி, "கிருஷ்ணு! ஏன் இத்தனை கோபம் வருகிறது? உன்னைவிட நான் எத்தனை வயது பெரிய கிழவன்? எனக்கு உலகாநுபவம் உன்னைவிட எவ்வளவு தெரியும் தெரியுமா! தாய் இறந்த குழந்தைகளை முதலில் அம்மாதிரி கூறுவது உலக வழக்கம். அப்படிக் கூறினால்தான் அவைகளுக்கு க்ஷேமம்; ஆயிசு வளரும். உன்னுடைய ஆசை எனக்குத் தெரியாதா! குழந்தைகளின் க்ஷேமத்திற்காகக் கூறினேன். நல்ல இடமாகப் பார்த்து அவைகளைக் கட்டிக் கொடுத்துவிட்டால், கவலையற்று வாழ்கின்றன. நீ இதற்காக ஒண்டிக்கட்டையாய் இப்படி வாழ்க்கை நடத்துவது சரியா! எத்தனையோ பெண்கள் உனக்குத் தயாராயிருக்கிறார்கள். நீ ஊங் கூட்டினால் போதும். விவாகம் நடந்துவிடும்.

ஆமாம். வீட்டிலே உங்க அண்ணன் மனைவி...அஸமஞ்சம் போல் இருக்கிறதாமே! அதனாலே உனக்குப் பேர் கெட்டுவிடுகிற தப்பா! கெட்டுவிடுகிறது. அவளுக்கும் உனக்கும் பிரியம் இருப்பதனால்தான் நீ கல்யாணம் செய்துகொள்ளமாட்டேனென்கிறாய் என்ற துர்வதந்திகூட என் காதில் எட்டிவிட்டதே...

இதற்குமேல் கிருஷ்ணனால் தாங்கமுடியவில்லை. காளகோடி சர்ப்பத்தைப்போல் சீறி எழுந்தான். "ராம ராமா!...இதுவும் ஒரு தலைவிதியா! இப்படியுமா உலகம் இருக்கிறது? ஐயோ! அந்தப் புண்ணியவதி என் தாயாரைப்போலாயிற்றே! அவளே என் குருவும் என்று நினைத்துக் கடவுள்மீது ஆணையாக விருக்கிறேனே! ஈசா! நீ அசையாப் பொருளாய் கல்லாயும், செம்பாயும், வீற்றிருப்பதன் மர்மம் இப்போதுதான் தெரிகிறது. தீனரக்ஷகனும்! ஆபத்சகாயனும்! குற்றமற்ற நிரபராதிகளின்மீது அபாண்டமான குற்றம் சுமத்தித் தூற்றுவதைப் பார்த்தும் அசையாமலிருப்பதுதான் உனது ரக்ஷணையின் அழகா!

ஓய் சாஸ்திரிகளே! இனிமேல் நீர் இந்த இடத்தில் தலை நீட்டினால் உம்மைக் கொன்றே போட்டுவிடுவேன். ஒரு பாவத்தையும் கனவிலும் செய்தறியாதிருக்கையிலேயே பெரும் அபவாதத்தைச் சுமக்கும்போது உம்மை என் மனமறியக் கொலைசெய்துவிட்டே பெரும்பாவியாகி இக் கபட உலகத்தின் வஞ்சனையும் துரோகமும் நிறைந்த மனிதர்களிடமிருந்து விடைபெற்றுத் தூக்கில் மாட்டித் தொங்கவும் நான் தயாராயிருக்கிறேன். பாபாத்மாவே! என்னெதிரில் நில்லாதேயும்" என்று சரமாரியாகக் கூறிவிட்டுச் சடக்கென்று எழுந்து வீட்டிற்கு வந்தான்.

குழந்தைகள் இரண்டும் சலனமற்றுத் தூங்கிக்கொண்டிருந்தன. கிருஷ்ணனின் உள்ளம் எப்படி இருண்டு கிடந்ததோ அதேபோல்

வீடுமுற்றும் இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. அந்த அந்தகாரக் குகையில் மினுக்குமினுக்கென்று ஒரு விளக்கு எங்கோ தெரிந்தது. விக்கிவிக்கி அழுங்குரல் மட்டும் உள்ளேயிருந்து வரும் சப்தத்தைக் கேட்டு கிருஷ்ணனின் நெஞ்சம் பகீரென்றது. அவனது இதயத்தில் செய்யும் சங்கடத்தைத்தான் கூறத் திறமே இல்லை. இந்தச் சப்தம் அவன் துக்கத் தீயில் எண்ணெயை விடுவதுபோலிருந்தது.

மெல்ல சமாளித்துக்கொண்டு, "ஸரஸ்வதி! பார்வதி!" என்று வழக்கம்போல் கூப்பிட்டான். குழந்தைகள் தூங்குவது அவனுக்குத் தெரியாதா? தெரிந்தும் மன்னியை நேரில் கூப்பிட்டுப் பேசுவது வழக்கமே இல்லை. சாப்பிடும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களைப் பள்ளிக்கூடத்திலும், ஆற்றங்கரையிலும் கழித்துவிட்டு, வீதித் திண்ணையில்தான் படுப்பது வழக்கம்.

இரவு முற்றும் புலம்பிப் புலம்பித் தவிப்பான். வெகு நாட்கள் நித்திரா தேவியும் அவனை வெறுத்துப் புறக்கணித்து விடுவாள். தன் பிறப்பும் வாழ்வும் சிதறிய கண்றாவியை அவனால் சகிக்க முடியவில்லை. அக் குழந்தைகள் பெரும் மலையளவு பாவத்தைச் செய்திருப்பினும் ஏதோ ஒரு அணுப்ரமாணம் புண்ணியம் செய்திருப்பதனால்தான் இந்தப் புனிதவதியின் ஆதரவாவது கிடைத்தது என்று பேரானந்தமுற்று எண்ணியிருக்கையில் கல்லைத் தூக்கித் தலையில் போட்டதுபோல் இம்மாதிரி அப் பாவிமனிதன் சொல்லியதும், இங்கு மதுரத்தின் விசும்பலும் அவனைச் சித்திரவதை செய்துவிட்டன. இடிந்துபோய் அப்படியே நடைக்கதவின் பக்கமே நின்றான்.

குழந்தைகளைக் கூப்பிட்டதிலிருந்து மதுரம் இவன் வருகையை அறிந்து பிரம்மப்பிரயத்தனஞ்செய்து தன்னைச் சமாளித்துக்கொண்டு உள்ளே சென்று இலை போட்டாள். கிருஷ்ணனின் மனோவேதனையில் பசிதானா மிஞ்சிவிட்டது? தலைவிதியே என்று இலையில் உட்கார்ந்தான்.

மதுரம் எத்தனை கஷ்டப்பட்டு மனத்துடன் போராடி சமாதானம் செய்தும் அவள் கண்களின் நீரை அவளால் அடக்கவே முடியாது காட்டுவெள்ளம்போல் பொங்கி பரிமாறும்போது கிருஷ்ணனின் இலையில் அவளையறியாது சொட்டுக்கள் உதிர்ந்துவிட்டன. ஏற்கெனவே தவிக்கும் கிருஷ்ணன் இந்தக் கண்றாவியைக் கண்டதும் பதறிப்போய் அப்படியே பிரமித்துத் துக்கப் பதுமைபோலாகி தலை நிமிர்ந்து பார்த்தான். "மன்னீ! மன்னீ!" என்றான்.

அதற்குமேல் அவன் நாக்கு தழுதழுத்துவிட்டது. தொண்டையை அடைத்துக்கொண்டு விம்மும் துயரம் பீறிக்கொண்டுவந்துவிட்டது. சில விநாடிகள் இதயம் ஆயிரமைல் வேகத்தில் அடித்தது. கண்ணீர் ஒரு கால்வாய்போல் பெருக்கெடுத்தோடியது.

இதற்குமேல் நெஞ்சையடைக்கும் நிர்ப்பாக்கிய மதுரம் சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுதுவிட்டாள். கிருஷ்ணன் சற்றுச் சமாளித்துக்கொண்டு 'மன்னீ ! இதென்ன பரிதாபம் ? ஏன் இப்படிக் கதறுகிறீர்கள் ? விஷயம் என்ன ?' என்று கேட்டான்.

மதுரம் அனுவசியமாகப் பேசியதில்லையாகையால் தேகமே நடுங்கியது. "குப்பைத் தொட்டியில் கொட்டும் குப்பைக்கும் கேடானவளா ஒரு விதவை ! அவளுக்கு நீதி நிர்ணயம் கிடையாதா ? தெய்வம் தேவாதி, சத்தியம், உண்மை, கற்பு முதலியன இல்லையா ! அவளுக்குப் பரிசுத்தமான இதயம் இருக்க முடியாதா ? அவள் இதயம் கேவலமான சாக்கடைக்குச் சமமா !...

கிருஷ் :—(அலறியவாறு) மன்னீ ! இதென்ன விடுகதையைப் போல் ஏதோ பேசுகிறீர்களே ! ஒன்றும் புலப்படவில்லையே ! விதவையின் இதயம் ஊழல் என்று எந்தப் பாதகர்கள் சொன்னார்கள் ? விஷயத்தைச் சொல்லுங்கள்—என்று கெஞ்சிக் கேட்டான்.

மதுரம் :—(புலம்பியபடியே) இந்த உலகம் இத்தனை சீர்கேடானது என்றும் இதிலுள்ள மனிதர்கள் இவ்வளவு கேவலமான புத்தியுடையவர்கள் என்றும் நான் நினைக்கவே இல்லை. அக்கம் பக்கம் உள்ளவர்கள் புறக்கடைப் பக்கமாயும் வாசற்பக்கமாயும் எட்டி எட்டிப் பார்ப்பதும் குசமசவென்று பேசுவதும் என்னைப் பார்த்து ஏதோ ஏளனமாகப் பேசிச் சிரிப்பதும் சமிக்ஞை செய்வதும் சில தினங்களாகவே மும்முரமாக விருக்கிறதை நான் பொருட்படுத்தவில்லை. இன்று பக்கத்து வீட்டில் குழந்தைக்குத் தொட்டில் போடுவதாக வந்து ஸரஸ்வதியையும் பார்வதியையும் அழைத்துச் சென்றார்கள்.

முற்றத்துப் பக்கத்திலுள்ள குட்டிச் சுவருக்கருகில் வேண்டுமென்றே சில பெண்டுகள் சேர்ந்து பார்வதியைக் காட்டி, "உம். ஐயோ பாவம். அதிர்ஷ்டஹீனியாய்ப் பிறந்தது" என்றாள் ஒருத்தி. மற்றொருத்தி "அப்பாவுக்குக் கல்யாணமாயிற்றோ !" என்றாள். இன்னொருத்தி வெடுக்கென்று கையை முறித்துவிட்டு, "கல்யாணமா ! தங்கம்போல் என் பெண்ணைக் கட்டிக்கொடுத்துவிட்டுச் சிவனே என்று குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு நான் ஊரோடு கிடப்பேன். அவனுக்கு என் பெண் என்றால் எத்தனையோ இஷ்டந்தான். ஆனால், அந்த மொட்டச்சிதான் அவனை மயக்கி வலையில் போட்டுக்கொண்டு, அவனைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டாளே ! இனிமேல் கல்யாணம் ஒரு கேடா ! அந்த மொட்டச்சிக்கு ஏதோ விசேஷங் கூட வந்துவிட்டதாகத் தோன்றுகிறது...

இந்தப் பாகத்தைக் கூறும்போது மதுரம் துவண்டு ஆடிப் போய் அப்படியே விழுந்துவிட்டாள். பேச முடியவில்லை. ஏற்கெனவே புகையும் கிருஷ்ணனின் உள்ளத் துடிப்பைக் கேட்க

வேண்டுமா ? இலையில் உட்கார்ந்த கடன்தான் ; சாப்பாட்டைத் தொடவே இல்லை. கையை உதறிவிட்டு எழுந்தான். அவன் இதயம் வெடித்துவிடும்போலாயிற்று. "மன்னீ !...மன்னீ!...எழுந்திருங்கள்; எழுந்திருங்கள்" என்று கத்துவதைத் தவிர வேறு என்ன சொல்லமுடியும் ? 'இப்படியா நடந்தது ?' என்று பொருமிவிட்டான்.

மதுரம் சற்றுச் சமாளித்துக்கொண்டு எழுந்தாள். "என் இதயம் பரிசுத்தமாய் நெருப்பைப் போலிருப்பதை அந்தப் பகவானுமா அறியமாட்டான் ? அவன்மீதாணையாய் நான் ஒரு குற்றமும் மனத்திலுல் கூட நினைக்காமல், என் செல்வப் பங்கஜத்தின் மரணத் தறுவாயில் கொடுத்த வாக்குப்பிரமாணத்திற்காகவும், குழந்தைகளின் மீதுள்ள கடும் பிரேமையாலும் நான் என் ஜீவியத்தை நடத்துவதை அந்தக் கடவுளும் அறியவில்லையென்றால் பிறகு கடவுளேது ? சத்தியமேது ? என் மனப்பூர்வமான இதயத்துடன் செய்த பிரமாணத்தை நிறைவேற்றுவதுகூடவா குற்றம் ? விதவை என்கிற பட்டம் வந்துவிட்டாலே அவள் உதவாக்கரைப் பிண்டமாகவா ஆகிவிடுகிருள் ? என்னல்தான் நீங்கள் விவாகஞ்செய்துகொள்ளவில்லையாமே ! இந்த அக்கிரமத்தை எந்தத் தெய்வம் பொறுக்கும் ? இந்த அபாண்டத்தைக் கேட்டுக்கொண்டும் இப்பொழும் உயிர் போகாது ஊசலாடுகிறதே" என்று துக்கம் தாங்கமாட்டாமல் புலம்பினுள்.

கிருஷ்ணன் இந்தப் பரிதாபத்திற்கு என்னதான் செய்வான் ? 'என்னிடம் வந்த தரகன் கூட இந்தக் கூட்டத்தில் முதன் முதல் கலந்துகொண்டுதான் நம்மிடம் வந்திருக்கவேண்டுமென்று இப்போதல்லவா தெரிகிறது. நமக்கு உபகாரத்திற்காக உழைக்க வந்து விபரீதமான படாப்பழியைக் கேட்கும் விதியமைந்ததே !' என்று அவனுக்கும் துக்கம் பொங்கி வந்துவிட்டது.

"மன்னீ ! அழாதேயுங்கள். கண்ணீர் விட்டால் என்மனம் புண்ணுகிறது. பகவான் இல்லாது செத்துப்போகவில்லை. அவன் எல்லோரையும் சமமாகத்தான் பார்த்துக்கொண்டிருக்கிருன். ஆகையால், அவன் எல்லோருக்கும் கூலி கொடுப்பான். தைரியத்தை இழக்காமல் இருங்கள். இதற்குமேல் நான் என்ன சொல்வேன் ? மரத்திலிருந்து உதிரும் சருகுகள் மரத்தடியில்தானே விழும். அது போல் அவர்களின் வாயிலிருந்து உதிரும் வசவுகளின் பலன் அவர்களையேதான் தாக்கும் என்பதுதான் எனது நம்பிக்கை. மன்னீ ! தேறுங்கள். மனந்தேறுங்கள்" என்று கூறினுன்.

இவர்களின் பரிதாபத்தைக் கண்டு வானமும் கண்ணீர்விட்டுக் கதறுவதுபோல் பெரும் மழை பேரிடியுடன் வந்துவிட்டது. "மன்னீ ! கதவைப் போட்டுக்கொள்ளுங்கள். மழை வருகிறது" என்று கூறியபடியே அங்கு நிற்காமல் மழையில் நனைந்துகொண்டே வெளியில் போய்விட்டான். மதுரம் கதவைத் தாளிட்டுக்கொண்டு

வந்து படுத்தாள். என் நித்திரை வருகிறது? அவள் காதில் பக்கத்து வீட்டுச் சம்பாஷணை நாராசம்போல் கேட்டுக்கொண்டே இருந்தது. புலம்பிப் புலம்பி முகமே வீங்கிவிட்டது. அன்பற்ற இதயத்திற்கு அன்பின் ருசி தெரியுமா! எருதின் நோய் காக்கைக்குத் தெரியாததுபோலத்தான் அன்பில்லாதவர்களின் தன்மையும். வரண்ட பாலைவனத்திற்கும் அன்பற்றவர்களின் இதயத்திற்கும் வித்தியாஸம் உண்டா?

## 24

### பகிஷ்காரமா? கொடிய பயங்கரமா?

வரண்ட பாலைவனத்திற்கும் அன்பற்றவர்களின் இதயத்திற்கும் வித்தியாசம் உண்டா! எருதின் நோய் காக்கைக்குத் தெரியாததுபோலத்தான் அன்பில்லாதவர்களின் தன்மையும். சின்னம்மாளுக்கும் ஜபமாலையை உருட்டும் ருத்திராக்ஷப் பூனையாகிய ராக்ஷஸிக்கும் பரிசுத்தவதியான மதுரத்தினிடம் எப்படி அன்பு உண்டாகும்? குடி முழுகிவிட்டதாகப் பெரிய அனர்த்தம் செய்து, வீட்டை இரண்டாகச் செய்துவிட்டார்கள்.

நடராஜனுக்கும் மனம் குழம்பி ஆத்திரம் மிஞ்சிவிட்டது. "பிராயச்சித்தம் செய்தால்தான் இனி மாப்பிள்ளையை அனுப்புவார்களாமே! என்ன செய்வேன்?" என்று தனக்குள் குமுறிப் போய்விட்டார். "இந்தப் பாழும் பெண்ணால் எனக்குத் தீராத அவமானமும் துன்பமும் விளைவிக்கவா இந்தச் சனியனை என்பெண்ணைக் கொடுத்துச் சோதிக்கிறான். நாம் ஒன்று நினைத்தால் நடப்பதொன்றாகிவிட்டதே! உம்.. உடனே இரவோடிரவாகச் சென்று அவளையழைத்துக்கொண்டு வந்து, சிறையில் வைப்பதுபோல் காவலில் வைத்துவிடவேண்டும். இல்லையேல் அவளைக் கிராமத்திலேயே வைத்து வாட்டவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டார்.

"சின்னா! நான் அம்பாள்புரம்போய் அந்தக் கழுதையை இழுத்துக்கொண்டு வருகிறேன். என் மானம் சந்தி சிரிக்கிறது" என்று ஆரம்பித்தார். பத்திரகாளியின் உக்கிரகத்தாண்டவத்தைக் கேட்கவேண்டுமா? போதுமே என் சவரணை. இன்னும் ஊசப் பிண்டத்தை என் காலில் வேறு கட்டிக் குடலையறுக்கப்போகிறீர்களா? நான் பட்டதெல்லாம் போதும். இங்குக் கொண்டுவரவும் வேண்டாம். உங்களுக்குப் பேரனைப் பெற்றுக்கொடுக்கும் கைங்கரியத்தில் நான் பங்கெடுக்கவும் வேண்டாம். இனிமேல் அவள் இந்தப் பக்கமே

வரக்கூடாது. என் குழந்தையின் வாழ்வில் மண்ணைப்போட்டப் பாவியை இனி நான் கண்ணாலும் பார்க்கமாட்டேன். அவளை எங் கேனும் தொலைத்துத் தலைமுழுகிவிடுங்கள். மக்கள் மனிதர்களின் எதிரில் வரவே வேண்டாம்" என்று வெடுக்கென்று கூறினாள்.

நடராஜனுக்குப் பதில் என்ன கூறுவதென்றே தெரியவில்லை. பல்லைக்கடித்துக் கையை முறித்துக் கூத்தாடினார். அப்போதே கிளம்பிவிட்டார். இரவு 11 மணி சுமாருக்கு நன்றாய் ஜோவென்று கொட்டும் மழையில் அம்பாள்புரம் வந்து சேர்ந்தார்.

வீதித் திண்ணை மிகவும் அகலக்குறைவானது. மழையின் வேகம் அந்தத் திண்ணை முற்றும் ஆறாக ஓடுகிறது. அங்கு ஒரு மூலையில் கிருஷ்ணன் ஒண்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். நடராஜனுக்கு இவன் கிருஷ்ணனென்று தெரியாது. ஆத்திரத்துடன், "யாரடா அது?" என்று அவனைத் திருடனென்ற அச்சத்துடன் கேட்டார்.

இருட்டிலும் மழையின் இரைச்சலிலும் முதலில் ஆள் தெரிய வில்லையெனினும் பிறகு குரலால் இன்னாரென்று தெரிந்துகொண் டதும் அவனைத் தூக்கிவாரிப்போட்டது. "யாரு! நடராஜமாமாவா? ஏது, இந்த அர்த்த ராத்திரியில் வந்தீர்கள்? எல்லோரும் சௌக் கியந்தானே?" என்று உள்ளுக்குள் நடுங்கியபடியே விசாரித்தான்.

நடராஜன் உண்மையில் நடராஜனைப்போலவே நெற்றிக் கண் ணைத் திறந்துவிட்டார். "யாரடா அது? அயோக்கியப்பயல் கிருஷ் ணனா?...உம். மாமாவா! மாமா! என்ன மாமாடா வேண்டி யிருக்கு! துரோகி! எங்கே அந்தக் கள்ளி?" என்று கூறியபடியே கதவை இடித்தார். ஏற்கனவே நடுக்கலுற்றுத் தவிக்கும் கிருஷ் ணனின் பாடு பின்னும் வெலவெலத்துவிட்டது. ஏதோ பெரும் பாறையைத் தலையில் புரட்டத்தான் இவர் வந்திருக்கிறார் என்று அவனுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது.

உள்ளே தூக்கமின்றித் தவித்துப் புலம்பிக்கொண்டிருக்கும் மதுரத்திற்கு, வீதியில் தன் தகப்பனாரின் குரல் அந்தப் பெரும் மழை இரைச்சலிலும் கேட்டு அவள் தேகமே தீயிலிட்டுப் பொசுக்குவது போன்ற வேதனை உண்டாகிவிட்டது. 'இவர் இந்த அர்த்தராத் திரியில் திடீரென்றுவருவதற்கு என்னகாரணமோ தெரியவில்லையே!' என்று துடித்தவாறு வந்து கதவைத் திறந்தாள்.

நடராஜனுடைய ஆத்திரத்தில், "பிரஷ்டே! மூதேவி! உன்னால் என் குடும்பத்தைப் பகிஷ்காரஞ்செய்து கட்டுப்போடும் நிலைமை ஏற் பட்டுவிட்டதே" என்ற தீயினுங் கொடிய வார்த்தையைக் கேட்ட மதுரம் இடி முழக்கத்தைக் கேட்ட நாகம்போல் நடுங்கிப்போய், "அப்பா! பகிஷ்காரமா! பகிஷ்காரமா! என்னால் பகிஷ்காரமா? ஐயையோ! இதென்ன வார்த்தை! தங்கள் வாயிலிருந்தா இந்த

வார்த்தை வருவது? இம்மாதிரி வார்த்தையாகிய நெருப்பால் என்னை எரிப்பதைவிட நேரில் தீயைவைத்துக் கொன்றுவிடலாமே!" என்று சதறினாள்.

கல்லினும் கொடிய சித்தமுடைய நடராஜன், "சீச்சீ! வேஷக் கள்ளீ! உன்னை நெருப்பிலிட்டுப் பொசுக்கினால், என்ன தோஷம்? உன்னை எரியிட்டு நான் கண்டிருப்பினும் மிகுந்த சந்தோஷமே அடைந்திருப்பேன். உன்னால் இத்தகைய பெரும் அபவாதமும் பழியும் பகிஷ்காரமும் பிராயச்சித்தமும் உண்டாகி, என் பிராணனை வதைப்பதுதான் என்னால் சகிக்க முடியவில்லை. உம். கிளம்பு......" என்று கர்ஜித்தார்.

நடுநடுங்கிப் போய்விட்ட கிருஷ்ணன், "மாமா!" என்றான். அவன் வாயெடுக்கவிடாது மண்டையில் ஓங்கி ஒரு அடி விழுந்தது தான் அவனுக்குத் தெரியும். 'உம். புறப்படு. நீலி! ராக்ஷஸி!' என்று கூவியவாறு மதுரத்தின் கழுத்தைப் பிடித்து வெளியில் இழுத்தார்.

மதுரத்தின் நிலைமை எப்படித்தான் இருக்கும். 'அப்படியே ஒரு பிரளயம் உண்டாகித் தன்னை விழுங்கிவிடக் கூடாதா! தான் நிற்கும் பூமி வெடித்துத் தன்னை இழுத்துக்கொள்ளக் கூடாதா!' என்று தத்தளித்தாள். மழையோ 'ஜோ'வென்று கொட்டுகிறது. நெருப்பின் மத்தியிலிருப்பது போலிருக்கையிலும் மதுரத்தின் மனம் பரதேசிக் குழந்தைகளைத் தாவியது.

வெறிபிடித்தவள்போல் உள்ளே ஓடினாள். தூங்கும் இரண்டு குழந்தைகளையும் கட்டியணைத்துப் பல முத்தங்களையிட்டுக் கண்ணீரால் நீராட்டினாள். விம்மி விம்மி அழுதபடியே வருவதற்குள் நடராஜன் உள்ளே பிரவேசித்து மதுரத்தைக் காலால் உதைத்துக் கழுத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு அந்தக் கொட்டும் மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடியே இருளில் தடதடவென்று நடந்துவிட்டார். என்னே பரிதாபம்! என்னே கபட உலகம்!

கிருஷ்ணனுடைய நிலைமையை விவரிப்பதற்குச் சாத்தியமா? ஆகாயமும் பூமியும் ஒன்றாகச் சுழன்று அவனைச் சித்திரவதை செய்தன. ஐயோ பாவம்! அந்த நிலைமையைச் சற்று மனத்தினால் எண்ணிப் பார்த்தாலும் சரீரம் நடுங்குகிறதல்லவா? தலைசுற்றி மயக்கம் போட்டுவிடும்போல் இருக்கிறது. உண்மையில் அனுபவிக்கும் நிர்ப்பாக்ய மனிதனுக்கு எப்படித்தான் இருக்கும்?

நடராஜன் ஆத்திரத்தில் தலைமீது அடித்த அடியில் மூளை கலங்கிவிட்டதென்றே நினைத்தான். மூளை கலங்கியிருந்தாலும் இப்பாழும் கொடிய சமூகத்தின் அக்கிரமச் செய்கைகளை அறியாது தனி உலக சஞ்சாரியாகவாவது திரிந்திருக்கலாமே! அதுவுமின்றி, நிலைமை தெரிந்து அனுபவிக்கும்போது அயோமயமாய் விட்டது. கொட்டும்

மழையில் இருள் கொடியவர்களின் இதயம் போலும், கொடுங் கோல் மன்னனின் ஆட்சிபோலும் பயங்கரமாயிருக்கையில், இவன் அந்த மூர்க்க மனிதனை எவ்விதந்தான் தடுக்கமுடியும்?

ஆகாயம் இடிந்து தலைமீது விழுந்துவிடக் கூடாதா என்றும் நினைத்தான். மழையில் தேகம்முற்றும் தொப்பமாக நனைந்ததால் ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பதால் குளிரினால் விறைத்து விட்டது. உள்ளே குழந்தைகள் ஒண்டியாகப் படுத்திருக்கின்றனவே என்கிற பாசம் ஒருபுறம் ஊசலாடியது. விதியை எண்ணிய படியே உட்கார்ந்திருக்கையில், குழந்தை அழும் சப்தங் கேட்டதும் அந்தப் புத்திர வாஞ்சையே அவனை உள்ளே தள்ளிச்சென்றது.

குழந்தைகளின் பரிதாபமும், இனி தான் அக் குழந்தைகளை எப் படிக்காப்பாற்றுவதென்ற பெருங்கவலையும் 'மன்னியம்மா எங்கே?' என்றால் தான் என்ன பதில் சொல்வதென்கிற ஏக்கமும் பெரிய பாறையைப்போல் அவன் நெஞ்சை அழுத்தின. கண்ணைக் கட்டிப் புதிய காட்டில் விடப்பட்டவன்போல் அவன் உள்ளம் துடித்தது. ஈரத் துணியை விலக்கவும் வெகு நேரம் அவன் புத்தியில் தோன்ற வில்லை. பிறகு வேறு உடையணிந்து குழந்தைகளின் பக்கலில் வந்து உட்கார்ந்தான். "பகிஷ்காரம்!...பகிஷ்காரம்!"...என்று நட ராஜன் கடூரமான தொனியில் கூறிய வார்த்தைகளே அவன் காதில் ஒலித்து மண்டையைக் கலக்கின. "பகிஷ்காரமா! யாருக்குப் பகிஷ் காரம்? எந்த அக்கிரமச் செய்கைக்காக பகிஷ்காரம்? ஐயோ! பூமாதேவியின் பொறுமையை விட அதிக பொறுமையாய், தரும தேவதையாய், கற்பரசியாய், மாசிலாமாணிக்கமாய் அப்பழுக்கற்ற புனிதவதியாய் இருந்ததற்காகவா பகிஷ்காரம்?

ஐயோ! மோச உலகமே! கபட மனிதர்களே! பாம்பு கடித் துள்ள மனிதனுக்கல்லவா மந்திரம் ஜபித்து மாலை போடவேண்டும்? வியாதி உள்ளவனுக்கல்லவா மருந்தும் கடின பத்தியமும் வைத்து அஸ்திர சஸ்திர சிகிச்சைகளும் செய்யவேண்டும்? சாதாரண மனிதனுக்கு இது தகுமா? பேய் பிடித்தவருக்கல்லவா பேய் ஓட்ட லும், ரக்ஷாமந்திரம் ஜெபித்துக் கட்டுவதும் அவசியம். அநியாயம்! அநியாயம்! தெய்வத்திற்கு அஞ்சாது செய்யும் அநியாயம் இது.

கண்ணில்லாத தெய்வத்தை ஏன் தொழுதுக் கட்டி அழ வேண்டும்? சத்தியத்திற்கும் உண்மைக்கும் மதிப்புக் கொடுக்காத தெய்வத்தை ஏன் கும்பிட்டுச் சாகவேண்டும்? கடவுளும் இல்லை. மண்ணுமில்லை. எல்லாம் வெறும் பொய், புரட்டல், மோசம், படு மோசம். கேள்விமுறையற்றச் சமூகத்தை ஆதரித்து அக்கிரமத் திற்குப் பலத்தையும் ஜயத்தையுங் கொடுக்கும் கடவுளுக்கு மதிப்பு எதற்கு? சத்தியரூபன் என்கிற அட்டகாஸமான பட்டப் பெயர்தான் எதற்கு? மோசக்காரன் வஞ்சகன் என்று ஏன் சொல்

ல்க்கூடாது. உண்மையாக நம்பியுள்ள பக்தர்களின் இதயத்தின் தூய்மை யறியாது, உடைத்துத் தகர்த்துப் படுசூர்ணமாக்கும் கடவுள் ஒரு கடவுளா? இல்லை! இல்லை!! இவ்வுலகத்தில் கடவுளே இல்லை. சூன்யமான உலகம் இது. கபடக்குழி இது" என்று தன் போக்காக மனம் உடைந்துபோய், நாஸ்திக புத்தி அதிகரித்த மனத்துடன் இரவு முற்றும் வாதம் செய்தவாறு தலையில் கையை வைத்துக் கொண்டு கம்பத்தோடு கம்பமாகச் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

எது எப்படியானால்தான் என்ன? இயற்கையின் நியதியைமாற்ற முடியுமா? பொழுது விடியும் சமயமாகிவிட்டது. பக்ஷி யினங்கள் நிச்சலமான சந்தோஷத்துடன் பாடிப் பறக்க வாரம்பித்தன.

தேச முத்துமாரி.

எப்பொழுதுங் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி;
ஒப்பி யுன தேவல் செய்வேன் உன தருளால் வாழ்வேன்.

ஆதாரம் சக்தி யென்றே அருமறைகள் கூறும்;
யாதானுந் தொழில் புரிவோம்; யாது மவள் தொழிலாம்.

நம்பினோர் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு;
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்.

மகாசக்தி வெண்பா.

தன்னை மறந்து ஸகல உலகினையும்
மன்ன நிதங்காக்கு மஹாசக்தி—அன்னை
அவளே துணையென் றனவரதம் நெஞ்சந்
துவளா திருத்தல் சுகம்.

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி யுயிர்வாழ்த லறியாமை;—தஞ்சமென்றே
வையமெலாங் காக்கு மஹாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்ற லறிவு.

வையகத்துக் கில்லை, மனமே! நினக்கு நலஞ்
செய்யக்கருதி யிவை செப்புவேன்—பொய்யில்லை
எல்லாம் புரக்கும் இறை நமையுங் காக்குமென்ற
சொல்லால் அழியுந் துயர்.

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம்—பண்ணியதோர்
சக்தியே நம்மைச் சமைத்ததுகாண், நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு.

என்கிற பாரதியார் பாடல்களை அவ்வூர் அம்பாள் தரிசனத்திற்காக வந்திருக்கும் ஓர் பக்த யாத்ரீகர் காலைப் பிரதக்ஷணம் செய்தவாறு பாடிக்கொண்டே சென்றார்.

தன்னை மறந்து நாஸ்திகவாதத்தில் ஆழ்ந்துபோய் ஸ்வப்பன உலகில் சஞ்சரித்திருப்பவன்போல் உட்கார்ந்திருந்த கிருஷ்ணனது கொந்தளிக்கும் மனத்தில் இப் பாடல்களின் அர்த்தம் தேனைப் போல் பாய்ந்ததும், சவம்போல் உணர்ச்சியற்றிருந்த அவன் உள்ளத்திலும் ஒரு புதிய சக்தி அவனை யறியாது எழுந்தது...

"என்ன! 'அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம்பெறலாம்' அம்பிகைதான் என்னைக் கைவிட்டுவிட்டாளே! அவளைச் சரண் புகாமலா இருந்தேன்?...சரண்புகுந்தும் சோதனையல்லவோ செய்கிருள்?...என்ன அருமையான கானம்!...என்ன அழகான அர்த்த பாவம்....நெஞ்சில் கவலையைப் பயிரிடுகிறேனு?...இவ்வளவு அருமையாகப் பாடும் மனிதர்தான் யாரோ பார்ப்போம். என் கலங்கிய உள்ளத்தைத் தெளிவுபடுத்த உபதேசம் செய்யவந்த ஞான குரு யாரோ பார்க்கலாம்" என்று எண்ணியவாறு வீதிக் கதவைத் திறக்க வந்தான்.

கதவருகில் ஏதோ குசமசவென்று பேசுங்குரல் கேட்டு கருநாகத்தை மிதித்தவன்போல் அப்படியே திகைத்து நின்றுன். அவன் காதில் கேட்ட வார்த்தைகள் என்ன தெரியுமா?...

'நான் அப்பவே சொல்லவில்லையா! வெளியாருக்கு வீதியில் படுப்பதுபோல் வேஷம் போட்டுவிட்டு, நடு இரவில் உள்ளே போய் விடுகிறுன். மீண்டும் விடியற்காலை ஸ்நானம் செய்பவன்போல் ஆற்றுக்குப் போய்விடுகிறுன். வீதித் திண்ணை காலியாயிருக்கு பாரு? இதைக் கேட்பார் மேய்ப்பார் கிடையாதா என்ன? அகிலாண்டம்! ஒங்க ஆத்துக்காரரிடஞ்சொல்லி இவாளே ஜாதிக்கட்டுப் போட்டு, பகிஷ்காரம் செய்து தெவசம் திங்கள் எல்லாவற்றிற்கும் கட்டுப்பாடாக ஒருவரும் போகாதபடி செய்துவிடு. எங்காத்தில் நானும் சொல்கிறேன். இந்த மொட்டச்சியினுலும், இந்தக் கம்மனுட்டியினுலும் ஊரே கெட்டுப்போகிறதே.

அச்சமயம் "யாரது? அகிலாண்டமா!" என்றது ஒரு குரல்.

"உஸ்...கத்தாதே! மெள்ளப் பேசு. வலைக்குள் மீன்கள் அகப்பட்டுக் கொண்டன. சந்தடி செய்யாமல் வா."

மற்ருேர் குரல் :—ஓகோ! அதான் தெருத் திண்ணை காலியாய் இருக்கிறதா? எங்கே சற்று விலகி நில்லு. உள்ளே ஏதோ வார்த்தைக் குரல் கேட்பதுபோல் இருக்கிறதே! என்ன பேசுகிருர்கள் புரிகிறதா?

அகி :—இரையாமல் பேசித் தொலையேன். அக்கினி சாக்ஷியாய் மணந்தவர்களா பயப்படாமல் பேசுவதற்கு? மொட்டச்சியும் கட்டைத் தடியனும் பேசுவது காதுக்குக் கேட்குமா?

மற்றொருத்தி :—இந்தக் கதவில் ஒரு பூட்டை மாட்டிவிட்டால் என்ன ? இந்த அம்பாள்புரம் முற்றும் கைக்கொட்டிச் சிரிக்கும் படிச் செய்துவிடலாமே !

வேர் உளுத்த மரம் சிறு காற்றுக்கும் நிலைகொள்ளாது தத்தளித்து ஆடுவதுபோல் உள்ள நிலைமையில் இருக்கும் நிரபராதியான கிருஷ்ணனின் காதில் மேற்கண்ட வார்த்தைகள் கூரிய ஈட்டி பாய்வதுபோல் பாய்ந்து, அவனை முற்றிலும் கலக்கிவிட்டன. "என்ன ! கதவைப் பூட்டுவதா? அம்பாள்புரவாசிகளை அழைத்துக் காட்டுவதா? இது என்ன சோதனை ? இனி, வேதனை சகிக்க முடியாது.

'அம்பாளை நம்பினல் கவலை அனைத்தும் அழிந்திடும்' என்ற வாக்கியம் பொய்யாகிய பிறகுங்கூடவா நம்புவது ? முடியாது... முடியாது...ஒருகாலும் முடியாது. 'பேத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்பார்கள். பெற்ற மனமே கல்லாய், இரும்பாய் பெரும் பாறையாய் ஆகிவிட்டதென்ருல், பிள்ளை பாறையில் மோதிக்கொண்டு சாவதைவிட வேறில்லை' என்று தனக்குத்தானே ஆவேசத்துடன் எண்ணினன். வயிறு குமுறியது. "என்ன ! ஜாதிக் கட்டா ! பகிஷ்காரமா !....பகிஷ்காரமா!!...பயங்கரம்...பகிஷ்காரம்"...

---

# கானல் நீர்

கானல் நீரல்லவோ மானிட வாழ்க்கை !
கருத் திலறிவ தில்லையே
நாடுவ தொன்ரும் நடப்பது ஒன்ரும்
நாடகமாம் இதை நன்கறிவாய் நெஞ்சே !

என்ற தத்துவத்தைச் சித்திரித்து, இந்தக் கபட உலகத்தில் வெறி பிடித்த மோகம் என்னென்ன செய்யும் என்பதையும், 'தன்வினை தன்னைச்சுடும்' என்பதையும் நன்கு விவரிக்கும் நாவல் இது.

ரூ. 1-4. சந்தாநேயர்களுக்கு ரூ. 1.

## கைதி ! கைதி !! குற்றமற்ற கைதி

"பகிஷ்காரமா !...பயங்கரம்...பகிஷ்காரம்...பகிஷ்காரம்...என்னையா பகிஷ்காரம்?...சமூகத்தில் இத்தகையகொடிய பூகம் பமும் இருக்கின்றதா ! பகிஷ்காரம் !....எதற்காக ?...நான் என்ன குற்றம் செய்தேன் ? எதற்காக எனக்கு இந்தக் கொடிய தண்டனை ? மனிதப் பிறவியின் கடமையைச் செய்வதாகப் பிரமாணம் செய்து கொடுத்ததற்காகவா ! மரணத்தறுவாயில் நான் கொடுத்த வாக்கைக் காப்பது குற்றமா ! நெருப்பைவிட பரிசுத்தமாயிருக்கும் இதயத்தையுடையவளாயிருப்பதற்காகவா பகிஷ்காரம் ! இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா ? இந்த அக்கிரமத்தைக் கண்டிப்பார் இல்லையா ?" என்று மதுரம் துக்கக் கடலில் விழுந்து தத்தளிக்கிறாள்.

சின்னம்மாளின் ஆக்கினைப்படியே மதுரத்தை, சின்னம்மாளின் தாயாருடைய குக்கிராமத்தில் சிறையில் வைப்பதுபோல் வைத்தார்கள். ருத்திராக்ஷப் பூனையாகிய ராக்ஷஸி, மதுரத்தின்மீது கொண்ட சந்தேகத்தைச் சோதிப்பதற்காகவும், அவளைக் கையும் குழந்தையுமாய் ஊர் சிரிக்கச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தினுலும் தானும் ஏதோ ஒரு சாக்கை வைத்துக்கொண்டு கிராமத்திலேயே இருப்பதற்கு வந்துவிட்டாள்.

மாட்டுக்கொட்டகையைச் சேர்ந்த ஓர் குடிசைபோன்ற இடத்தில் மதுரத்தைத் தனியே வைத்தார்கள். மதுரத்தின்மீதுள்ள இந்த விபரீதமான சந்தேகத்தைத் தெரிவித்தால் தன் சம்மந்தி வீட்டார் பெண்ணையே தள்ளிவிடுவார்களோ என்கிற பயத்தினுலும் மற்ற கல்யாணம், திவசம் முதலியவைகளுக்கு ஒருவரும் வராது எங்கே கட்டுபோட்டுவிடுவார்களோ என்கிற கவலையினுலும் ஒரு புதிய கற்பனையை சிருஷ்டித்து, மதுரத்திற்கு திடீரென்று சித்தப்பிரமை பிடித்துவிட்டதாயும் அதனுல் அவளைத் தனியே வைத்திருப்பதாயும் ஒரு கயிறு திரித்துப் பரவவிட்டார்கள்.

திடீரென்று இரவோடிரவாக கிராமத்திற்கு வந்ததையறிந்த அவ்வூர் வாஸிகள் ருத்திராக்ஷப்பூனையை விசாரித்தார்கள். "ஐயோ ! திடீரென்று மதுரத்திற்கு சில தினங்களாகவே புத்தி சரியாயில்லாதிருந்தது. ஏதோ தன்போக்காகப் பேசுவது, பாடுவது, சிரிப்பது, அழுவது, சுவர்மீது ஏறி நிற்பது, இம்மாதிரி எல்லாம் செய்துகொண்டிருந்தாள். இதற்காக அவளுடைய மச்சினன்கூட கொண்டு வைத்துக்கொண்டு வைத்தியம் செய்தும் உபயோகமில்லாது முத்திப்போய்விட்டதால் குழந்தைகள் இருக்கும் இடத்திலிருந்தால் அவைகளை அடித்து உதைத்து எங்கே கொன்று கிணற்றில் போட்டுவிடுமோ என்று பயந்து இங்கு தனியே வைத்திருக்

கிறேன்'' என்று வாய்கூசாமல் கூறியதோடு, "நீங்களும் அருகில் போய் வாயைக் கிளறுதீர்கள். குழந்தைகளை அனுப்பாதீர்கள்'' என்று எச்சரித்தாள்.

பொதுஜனங்களுக்கு இந்த மகாபாவிகளின் வஞ்சனையும் சூதும் என்ன தெரியும்? உண்மையில் பயித்தியம் பிடித்துவிட்டதென்றே தீர்மானஞ் செய்துவிட்டார்கள். பாவ ஜென்மங்கொண்ட மதுரத்திற்கு இந்தக் கட்டுக்கதையின் விபரீதமும் சாகஸமும் தெரிய இடமேது? கொட்டுகிற மழையில் சற்றும் ஈவிரக்கமற்று தகப்பன் என்கிற பெயர் கொண்ட சத்ரு இரவோடிரவாக அவளை இழுத்துக் கொண்டு தன் மாமியார் வீட்டில் தள்ளினுன்.

இந்த அபாரமான துக்கத்தை அவளால் சகிக்கவேமுடியவில்லை. கதறியழுதும் காதுசெவிடர்களாயின் கேட்குமா! அதோடு மதம் பிடித்திருக்கையில் செவிடர்களைவிட அதிகமான மந்தமல்லவா இருக்கும்? மதுரத்தை அப்படியே கொளுத்திவிடலாமா என்றும் அவருக்குத் தோன்றியது.

மதுரத்தின் பொறுமைக்கும் எல்லை உண்டல்லவா! தகப்பனுரின் இரு கால்களையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு 'அப்பா! நீங்கள் என்னைப் பெத்த பிதாவல்லவா! உங்களுடைய இதயங் கூடவா இத்தகைய கடினமாகிவிட்டது. இளையாளின் விஷம் போன்ற நெஞ்சம். உங்களுக்குமா வந்துவிட்டது? என் பரதேசித் தனம், என் மாசிலாதத் தூய்மை இதயம் உங்களுக்குமா தெரியவில்லை? உங்கள்மீது ஆணையாய், உங்கள் குலதெய்வத்தின்மீது ஆணையாய் நான் ஒரு பாபமும் கனவிலும் மனத்திலும் செய்தறியாதவள். பெற்ற பிதாவாகிய நீங்களே என்மீது இரங்காவிடில் வேறு யார் இரங்குவார்கள்?

மரணத்தறுவாயில் நான் கொடுத்த வாக்குமூலத்தைக் காப்பதற்காகவும் அந்த திக்கற்றக் குழந்தைகளின் பரிதாபத்திற்காகவும் நான் அங்கிருந்தேனேயன்றி, வீண் பழியை என் தலையில் சுமத்தி என்னை வதைப்பது தருமமா! இது அடுக்குமா! இது எந்த தெய்வத்திற்குத்தான் பொறுக்கும்? உங்கள் மனமிரங்கவில்லையா!'' என்று கண்ணீர் ஆறுய்ப் பெருகக் கதறுவது அந்த மூர்க்கனின் ஆத்திரத்தைக் கிளறியதேயன்றி அணுவளவும் மனம் இளகவில்லை.

"வேஷக்கள்ளிக்குப் பிரமாணமும் தெய்வமும்கூட ஒன்று உண்டா! சீச்சீ! மூதேவி! என் புத்தியைச் செருப்பால் அடிக்க வேண்டும். உன்னை விட்டிருந்தேனே அதான் இந்த கதிக்குக் கொண்டுவந்தது. வீண் வம்புவேண்டாம். மானங்கெட்ட ராக்ஷஸி'' என்று கூறியவாறு நிர்த்தாக்ஷிண்யமாய்க் காலால் உதைத்துத் தள்ளி கதவைச் சாத்திப்பூட்டிக்கொண்டு சடக்கென்று போய்விட்டார்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! பெத்த தகப்பனின் நிராகரிப் பிற்குப் பிறகு அப் பேதைப்பெண் என்ன செய்வாள் பாவம். அவளுடைய தேகமும் உள்ளமும் கொதிக்கும் கொதிப்பிலேயே ஈரச்சேலை முற்றும் உலர்ந்துவிடுவது வியப்பா! இந்த இடத்திலேயே இப்படியே தன் பிராணன் போய்விடக்கூடாதா! என்று மனம் முறிந்து அவ்வறையிலேயே குமுறிப்போய்விட்டாள். இதைவிட வேதனையும் சங்கடமும் இனி வேறு இருக்கிறதா! நல்ல ஆத்மா வாயின் பிராணன் சடக்கென்று போயிருக்கும்! பாபாத்மாவின் பிராணனை எமனும் வெறுத்து விலக்குவது சகஜந்தானே. அந்தப் பாவிக்கு நாமும் இரக்கங் காட்டக்கூடாதென்று சூரியனும் கடுமை யாகக் கிளம்பிவிட்டான்.

மாட்டுக் கொட்டிலில் அடைப்பட்டுக் கிடக்கும் மதுரத் திற்கு பகல் பனிரெண்டு மணிக்கு ஒரு வேளை தண்ணியும் சோறும் உப்புகூடப் போடாமல் கிழவி கொண்டுவந்து வைத்துவிடுவாள். மனங்கொதித்துச் சாம்பராகும் வேகத்தில் மதுரத்திற்கு எவ்வித மாகத்தானிருக்கும்? அனேக தினங்கள் அந்த நீராகாரத்தை அப் படியே மாட்டுத் தொட்டியில் கொட்டிவிட்டு சிவனே என்று கண்ணீர் வழிய, தன் காலம் முடியாதா! என்று எண்ணி ஏங்கிய படியே படுத்துக்கிடப்பாள். வயிற்றில் சங்கடம் அவளை மீறிப் பாதித்து எரியும்போது அதைச் சகிக்காமல் ஒருவாய்த் தண்ணீரும் பருக்கையுமாய்க் குடிப்பாள்.

அவள் இதயம் வெந்து காக்கை கொத்திய புண்ணாகவிருப் பினும் பரதேசிக் குழந்தைகளாகிய ஸரஸ்வதியையும் பார்வதியை யும் மறக்கமுடியாமல் தவித்தாள். குழந்தைகளின் பரிதாபகர மான பிம்பங்கள் அவள் கண் முன்பு தெரிந்து அவளைப் பின்னும் கலக்கின. "மன்னி! எனக்கு மரணத்தறுவாயில் கொடுத்த ப்ரமாணத்தை மறந்து என் குழந்தைகளைக் கைவிட்டுவிட்டீர்களே! இது நியாயமா! தருமமா?"...என்று பங்கஜம் அடிக்கடி வந்து கேட்பதுபோன்ற பயங்கரத் தோற்றமுண்டாகி திடும்திடும் என்று தூக்கி வாரிப்போடும்போது உண்மையிலேயே அவளுக்குப் பயித் தியம் பிடித்துவிட்டதுபோன்ற குழப்பமும் இதயத்தில் சகிக்க முடியாத சங்கடமும் உண்டாகிவிடும்.

"மன்னியம்மா! அம்மாவுக்குப் பொய் வார்த்தைகள் கூறி எங்களை ஏமாத்திவிட்டாயே! இதுதான் மனிதத்தன்மையோ! இது ஜீவகாருண்யமோ! எங்கம்மாவை பூதமாக வந்து உன்னை விழுங்கி விடச் சொல்கிறேன் இரு" என்று குழந்தைகள் கூறுவதுபோல் தோன்றும் தோற்றத்தை அவளால் சகிக்கவே முடியாது நெருப் பின் மீது விழுந்த புழுகைப்போல் துடிப்பாள்.

குடல் ஒட்டிப்போய் தலையில் பேன்கள் பிடித்து சிறங்கு வந்து முகமே மாறுபட்டுப்போய் அழுக்கும் கந்தலுமான உடையுடன்

தன்னிரு கண்மணிகளைப்போன்ற குழந்தைகள் நிற்பதாக ஒரு உரு வெளித்தோற்றம் திடீரென்று தெரியும்போது அவள் தன்னையே மறந்து "ஹா!...ஸரஸ்வதி! பார்வதி! பங்கஜம்! நான் ஒருவருக்கும் ஒரு த்ரோகமும் செய்யவில்லையே! என் செல்வங்களே" என்று வாய்விட்டுக் கதறியவாறு அழுவாள்.

ஏற்கெனவே இவளைப் பயித்தியமென்று ஸ்தாபித்திருக்கும் ஜனங்கள் இவளுடைய இந்தத் தனி வார்த்தைகளைக் கேட்டதும் 'சரியான பயித்தியந்தான்' என்று தீர்மானித்துப் பரிகஸிப்பதும், கைதட்டிச் சிரிப்பதுமாகவாரம்பித்தார்கள். அக்கொட்டகையின் பக்கமாகச் செல்லும் குழந்தைகள் "டேய். இதுக்குள்ளே ஒரு பயித்திய மிருக்குதுடோய்!...எ ப்யித்தியம்! இதோ ப்ாரு. டுர் புர்...ஹிஹி!"....என்று கலாட்டா செய்வார்கள்.

தலைவிதியின் விளையாட்டுக்கு முன்பு இக் குழந்தைகளின் கேலிக்கூத்து விளையாட்டுகள்தானா ஒரு பெரிதாகத் தோன்றும்? அவைகளைச் சற்றும் பொருட்படுத்தாமல் 'கடவுளே!' என்று கிடந்தாள். இப்படியே சில தினங்கள் கடந்தன. மதுரத்தின் தேகத்தில் ஆத்மா எப்படித்தான் ஒட்டிக்கொண்டிருக்கிறதோ, ஆச்சரியமாயிருந்தது. சரீரம் குச்சியிலும் குச்சியாக உலர்ந்துபோய்விட்டது.

வயிறும் உடம்பும் அடியோடு ஒட்டிக்கிடப்பதைப் பார்த்தால் கிழவிக்கும் சற்று சந்தேகமே உதித்தது. 'கர்ப்பந்தரித்தவளாயிருந்தால் இம்மாதிரி வயிறு எலும்புகூட இல்லாது ஒட்டி இருக்குமா! என்ன எழவோ தெரியவில்லையே!' என்ற கலவரம் உண்டாகியது. அதைக்கூறவோ மதுரத்தினிடம் கேட்கவோமுடியாது தவித்தாள்.

இதற்கிடையில் தீபாவளிக்கு சம்பந்திகளும் மருமகப்பிள்ளையும் வருவதற்காக எத்தனையோ சமாதானங்களைச் செய்தும், கடன் வாங்கி அவர்களுக்குச் சீர்வரிசைகள் செய்தும் அந்த பேய்களுக்கு த்ருப்தி என்பதே இல்லாது பெருத்த சண்டை போட்டுக்கொண்டு பண்டிகைதினத்தன்றே பிள்ளையையும் இழுத்துக்கொண்டுபோய் விட்டார்கள். இந்த விசனம் வேறு சின்னம்மாளை வதைக்கிறது. கடன்வேறு நடராஜனைக் கொல்கிறது.

இத்தனை லக்ஷணத்தில் மதுரத்தை பயித்தியம் தெளிந்ததென்று கூறி அழைத்துச் செல்ல யாருக்கு அக்கரை அடித்துக்கொள்கிறது? மாதம் இரண்டாகிவிட்டது. மதுரத்திற்கு இனிமேல்தான் உண்மையில் பயித்தியம் பிடித்துவிடும்போன்ற பயமும், மனத்தாங்கலும் உண்டாயின. "மன்னிக்கமுடியாத கொலைக் குற்றத்தைச் செய்தவர்களையும், திருட்டு, புரட்டு, மோசம் முதலியன செய்தவர்களையுங்கூடச் சிறையிலிருந்து, சிலகாலவரை கடந்ததும் விடுதலை செய்துவிடுகிறார்கள். ஒரு பாபமும் அறியாது நிரபராதியாய்

தெய்வத்தின்மீது ஆணையாகவிருக்கும் எனக்கு விடுதலை என்பதே கிடையாதா! இந்த ஜென்மத்தில் நான் இப்படியேதான் இருக்க வேண்டுமா! பூத உடலுக்கு விடுதலை இல்லை எனினும் ஆத்மா வுக்காவது விடுதலை யளித்து இப்பாவ ஜென்மம் நீங்கியது என்கிற நிம்மதியை எனக்குங் கொடுத்து, ஒரு பூபாரம் கழிந்து மகா பாவி தொலைந்தாள் என்கிற சந்தோஷத்தை ஜனங்களுக்கும் கொடுக்கக் கூடாதா! அதுவுமின்றி என்னை ஏன் இப்படி இரண்டுங் கெட் டானாக வதைக்கிறாய்?

தற்கொலை புரிந்துகொண்டாலும், எங்கேனும் கண்மறைய ஓடி விட்டாலும் என்மீது ஏற்கெனவே சுமத்தியுள்ள அபாண்டமான அநியாயப்பழியை நானே ஊர்ஜிதம் செய்ததுபோலாகிவிடுமே என்கிற பயத்தினால் நான் சகல துன்பங்களையும் பொறுத்துப் பொறுத்துக் காலத்தைக் கடத்தியும் என்னால் இனி சகிக்கவேமுடிய வில்லையே! என்ன செய்வேன்?

ஆம்...என் மைத்துனர் அடிக்கடி சொல்லியதுபோல் நானும் அக்கிரமவழியில் பிரவேசித்திருந்தால் என்னை நீ இக்கதிக்குஆளாக்கி இருக்கமாட்டாயல்லவா! சத்தியம் செத்துவிட்டதென்றால் நீயும் செத்தமாதிரிதானே! "சத்தியமே நீ; நீயே சத்தியம்" என்கிற கீதா வாக்கும் செத்துவிட்டதல்லவா! சோதனைக்கோர் எல்லைகிடையாதா!

இவ்வுலகத்தையே ஓரடியாலளந்த உனக்கு இப் பாவியின் மனத்தை உன் திருவடியால் உதைத்து அளக்க மனமில்லையா! அல்லது மார்க்கமில்லையா! பக்த பராதீனன் என்கிற பெயர் உனக்குப் பொருந்துமா? ஒருகாலும் பொருந்தாது. தீனர்களின் அனுகூலன் என்றதை மாற்றி தீனர்களின் கொடுங்காலன் என்று ஏன் சொல்லக்கூடாது? ஆதியந்தமற்ற உனது தோற்றத்தைப் போல் உனது சோதனைக்கும் ஆதியந்தமில்லையா?" என்று மனம் புழுங்கித் தவித்துக்கொண்டிருக்கையில்,

பல்லவி

ஜயமுண்டு பயமில்லை மனமே! இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு (ஜய)

அநுபல்லவி

பயனுண்டு பக்தியினாலே—நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு பகையில்லை. (ஜய)

சரணம்

அலைபட்ட கடலுக்கு மேலே—சக்தி
அருளென்னுந் தோணியினாலே
தொலை யெட்டிக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு. (ஜய)

என்ற பாரதியாரின் பாடலைப் பாடிக்கொண்டு வீதியில் சில தேச பக்தர்கள், கிராம புனருத்தாரண வேலையாக காந்திபடத்துடன் ஊர் வலமாக சென்றுர்கள். விரக்தியினுலும் வேதனையினுலும், புகைந்து எரிந்துகொண்டிருக்கும் மதுரத்திற்கு இப்பாடலைக் கேட்டதும் அவளை யறியாது தூக்கிவாரிப் போட்டது. என்ன! என்ன இது!... ஜயமுண்டு பயமில்லை மனமே...இது என்ன தேவவாக்கியமா!... 'இந்த ஜென்மத்தில் விடுதலையுண்டு. நிலையுண்டு' என்ற வாக்கு. சத்தியவாக்கா அல்லது அசரீரிவாக்கா! அன்றி இதுவும் என்னை சோதிக்கச் செய்ய வேண்டுமென்று கூறும் மாயவாக்கா!... பொய்த் தோற்றமா?...

இல்லை,...இல்லை...உண்மையாகப் பலபேர் சேர்ந்து பாடும் நிஜ மான பாட்டாகவே இருக்கிறதே...இச்சமயம் என் மனப்புண்ணை யாற்றுவதற்கு மாற்றிலா மருந்து போன்ற இப்பாடலை எந்த மகாநுபாவர்கள் பாடுகிருர்களோ, அவர்களைக் கண்ணுரக் கண்டு காதாரக் கேட்பதற்கும் அருகதையற்று அடைபட்டுக் கிடக்கி றேனே எனக்கம்மாதிரி விடுதலை கிடைக்குமா?...என்று ஏங்கிய படியே அந்தப் பாடலின் இனிமையான ஸாரத்தில் லயித்துப்போய் அந்த ஒரு தனி இன்பத்தில் தன்னையும் உலகையும் மறந்தவள்போல் தூங்கிவிட்டாள்.

வெகுநேரஞ் சென்று கண்விழித்துப் பார்க்கையிலும் அதே பாடல் அவள் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. அவள் வாயும் "ஜயமுண்டு பயமில்லை மனமே!"...என்ற அடிகளையே உச்சரித் துக்கொண்டிருந்தது. அச்சமயம் அவள் இருக்கும் மாட்டுக் கொட்டகைக்குப் பக்கத்திலுள்ள மாடி வீட்டில் நடமாடும் சந் தடியும் மனிதர்கள் பேசும் குரலும் கேட்டன. யாருமே இல் லாது காலியாகக் கிடந்த வீட்டில் சந்தடி இருந்ததால் விவரம் புரியாது அதை உற்றுக் கவனித்தாள்.

அச்சமயம் ஒரு பெண்மணி "இந்த வீட்டில்தான் மாமி! எந்த உத்தியோகஸ்தர்கள் வந்தாலும் தங்குவது வழக்கம். இந்த வீட்டில்தான் பெரியமனிதர்களுக்கு வேண்டிய சவுகரியங்கள் யாவும் இருக்கின்றன. மற்ற இடங்களில் ஒன்றிருந்தால் ஒன் றில்லை. இது நல்ல வசதியான வீடு. ஆனுல் ஒன்று. பக்கத்து மாட் டுக்கொட்டகையில் ஒரு பயித்தியம் இருக்கிறது. அதனுல் யாதொரு பயமும் இல்லை. அந்த கொட்டகையுடன் கொட்டகையாய்க் கிடக்கும். தன்போக்காக பாடும், ஆடும், அழும், சிரிக்கும். அதற் காக நீங்கள் பயப்படவேண்டாம்" என்று கூறும் வார்த்தைகள் மதுரத்தின் தலையிலடித்ததுபோல் கேட்டதும் கலங்கித் தவித்தாள்.

இந்த சம்பாஷணையிலிருந்து அங்கு யாரோ ஒரு உத்யோகஸ்தர் குடும்பத்துடன் ஜமாபந்திக்கு வந்திருப்பதாக மதுரம் அறிந்து

கொண்டாள். பாழும் வீடாகக் கிடந்ததற்கு மாருக சற்று சந்தடியாவது இருப்பது அவள் பயத்திற்கு ஓர் ஆறுதல் அளித்ததுபோலிருந்தது. ஆனல் தன்னை அவர்கள் பயித்தியமென்று எண்ணியிருப்பதால் என்ன கேலி செய்து பரிகஸிப்பார்களோ ! ஆதலால் அவர்களின் கண்ணில் படாமலேயே இருக்கவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்தாள். அவளை இங்கு விட்டுச் சென்ற பிறகு அவள் தகப்பனும் திரும்பிக்கூடப் பார்க்கவே இல்லை. பெத்த மனம் பித்து ; பிள்ளை மனங்கல்லு. என்பார்கள். இந்த நிர்ப்பாக்யவதியின்பால் அந்த பழமொழியும் அடியோடு நேர்மாருகிவிட்டது.

பக்கத்து வீட்டில் வந்திருக்கும் உத்யோகஸ்தரின் குழந்தைகள் மொட்டைமாடிப் பக்கமாய் வந்து "பயித்தியத்தைக் காணமேடா ! ஏய் பயித்தியம் ! இங்கே வா ! இதோபாரு !" என்று சதா கூச்சலிட்டுப் பரிகஸிப்பதைப் பார்க்க அவளால் சகிக்கவே முடியவில்லை. பின்னும் புலம்பியபடியே வெளியே வாராதிருந்தாள்.

உத்தியோகஸ்தர் வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கு மட்டும் இந்த பயித்தியத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அடித்துக்கொண்டது. பயித்தியம் என்ருல் எல்லோருக்கும் இளைப்பமும் வேடிக்கையுமாகத் தோன்றுவது இயற்கையல்லவா ! ஆகையால் அவர்கள் அடிக்கடி மொட்டை மாடியில் நின்று இந்த பயித்தியத்தைப் பார்ப்பதற்காகக் காத்திருப்பார்கள்.

அஸ்தமன சமயமானதால் மதுரம் தேகபாதையின் நிமித்தம் வெளியில் சென்று திரும்பி வரும்போது பக்கத்துவீட்டுக் குழந்தைகள் "அதோ ! அதோ பயித்தியம் ! அம்மா ! அதோ பாரேன்" என்று கூறியவாறு சிறிய கற்களை மதுரத்தின்மீது வீசி எறிந்தார்கள். ஒரு கல்லு மதுரத்தின் மொட்டைத் தலையில் வந்து பட்டதும் வலி தாங்காமல் "ஐயோ !" என்று அலறியவாறு நிமிர்ந்து பார்த்தாள். குழந்தைகளெல்லாம் கொல்லென்று சிரித்தார்கள்.

அதே சமயம் அங்கு நின்றிருந்த அம்மாள் மதுரத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டவளாய், "ஐயையோ ! மதுரமன்ளு இவள் ! இவளுக்கு பயித்தியமும் பிடித்துவிட்டதா ! ஆள் அடையாளமே தெரியவில்லையே ! அட பாவமே ! உன் தலையெழுத்து ஆட்டிய ஆட்டமெல்லாம் போதாமல் இதுவும் ஒன்று பாக்கியிருந்ததாம்மா !" என்று உரக்கக் கூறும்போதே அவள் கண்ணில் நீர் மளமளவென்று வழிந்து வந்துவிட்டது. "மதுரம் ! மதுரம் ! இதோ பாரம்மா ! நான் தெரிகிறதா ?" என்று அன்பு ததும்பக் கேட்டாள்.

இந்தமாதிரியான வார்த்தையை மதுரம் ஜென்மத்திலும் கேட்டதில்லையாகையால், அவளையே ஒரு கலக்குக் கலக்கித் தூக்கிவாரிப் போட்டது. அவளால் கண்டுகொள்ளமுடியாதவிதமான ஒரு உணர்ச்சி வெள்ளம்போல் அவள் இதயத்தில் பொங்கி தேகம்

பூராவும் வியாபித்துக்கொண்டு பிரமிக்கச் செய்தது. சில விநாடிகள் தம்பித்து நின்ருள். அடுத்த நிமிடமே நன்ருக உயர நிமிர்ந்து பார்த்து "மாமீ! மாமீ! நீங்கள் நாகலக்ஷ்மி மாமியில்லையா! உங்களைத் தெரியாமல் எனக்கென்ன கேடு வந்திருக்கிறது? எனக்குப் பயித்தியமும் இல்லை. ஒன்றுமில்லை மாமீ!" என்று பெரிய குரல் பாய்ச்சி அழுதுவிட்டாள்.

நாகலக்ஷ்மியின் வியப்பு அதிகரித்தது. துக்கமும் ஆத்திரமும் பொங்கின. "என்ன! உனக்குப் பயித்தியமில்லையா! நிஜமாகவா! பின் ஏன் உனக்குப் பயித்தியமென்று கூறித் தனியாக அடைத்திருக்கிருர்கள்? அம்மா! மதுரம்! நீ புலம்பும் கண்ருவியைப் பார்த்தால் என் இதயம் கொதிக்கிறது. உனக்கேன் இந்த கதி வந்தது?" என்று அன்பும் ஆர்வமும் ததும்பக் கேட்டாள்.

மதுரம் தேம்பித் தேம்பி அழுதவாறே "மாமீ! இங்கிருந்து நான் எப்படிக் கத்திப் பேசுவேன்? உங்களிடம் முன்பு சொல்லியிருக்கும் அந்தக் கிழவி இங்கேயே இருக்கிருளே, நான் எப்படி உரத்துப் பேசுவது?" என்ருள்.

அந்த ராக்ஷஸியான ருத்திராக்ஷப் பூனையும், தான் பெத்த ஒரு ஜந்து என்கிற அனுதாபங்கூட இல்லாத வரண்ட கட்டையைப் போன்ற இதயத்தையுடைய நடராஜனும் மதுரத்தைப் பார்க்கும் பொருட்டுக் கொட்டகைக்கு வந்துகொண்டிருக்கும் பயங்கரம் உள்ளே நொந்து வெந்து சாம்பராகிக்கொண்டிருக்கும் மதுரத்திற்கு என்ன தெரியும்?

நாக்கு உலர்ந்து தொண்டைவரண்டு திக்குமுக்காடித் தவித்து ஒரு பொட்டுத் தண்ணீர் கிடைக்குமா! என்று ஒரு முடவன் கடுமையான பாலைவனத்தில் தத்தளிக்கும் சமயம் அவன் பரிதாபத்தைக் கண்டு அந்த நிர்ப்பாக்கியமுடவனுக்கு அருள் மாரியைப் பொழிவதுபோல் திடீரென்று மழை பெய்தால் அந்த முடவன் தன்னை மீறிய உணர்ச்சி வெள்ளத்துடன் சந்தோஷ சாகரத்தில் எப்படி மிதப்பானே, அதேபோல் அபாக்கியவதியான மதுரத்தின் நிலைமை இருந்ததால், கொட்டகை வாசலில் அவ்விருவருடைய குரல் கேட்பதைக்கூடக் கவனியாமல் ஆனந்தத்துடன் நின்ருள்.

நாகலக்ஷ்மியின் மனது உருகியது. "நான் உள்ளே வருகிறேன். கொட்டகைக் கதவு திறந்திருக்கிறதா?" என்ருள்.

மதுர:—மாமீ! கதவு திறந்திருக்கும் சுதந்திரமாவது எனக்கு இருக்குமாயின் என்னை இப்படி சிறையில் அடைத்திருப்பார்களா! நான் கடவுள்மீது ஆணையாக ஒரு குற்றமும் செய்தறியாத கைதி. திக்கற்றப் பரதேசிக் கைதி. விசாரணை இல்லாத கைதி. விடுதலையே இல்லாத கைதி. கடவுளும் கைவிட்ட கைதி.

## ADVERTISEMENT RATES

| | | | |
|---|---|---|---|
| Full Page | Rs. 15 | Quarter Page | Rs. 5 |
| Half „ | „ 8 | Inner Wrapper „ | 20 |

Special reduction for contract advertisements.

பல்லாயிரக்கணக்கானவர்
படித்து மகிழ்ந்த
நமது பொன்விழா நாவல்

**ஆத்மசக்தி**

முதல் பதிப்பு—ஜனவரி 1940.
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல் 1940.

**11 ஆப்டோன் படங்கள்**

பல வர்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன
தபாற் செலவு உள்பட
உள் நாடு — ரூ. 1-4
வெளி நாடு — 2 ஷில்லிங்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

நீங்கள் பல வருங்டகளாக
எதிர்பார்த்தபுதியபதிப்பு

**மாதவமணி**

முற்றிலும் புதிதாகமாற்றி
பெரிதாக எழுதப்பட்டுள்ளது
முதல் பதிப்பு 24 பக்கங்கள் 3 அணா
இரண்டாம் பதிப்பு 64 பக்கங்கள் 4 அணா
தபாற் செலவு உள்பட
உள்நாடு ரூ. 0—4—9 ஸ்டாம்பு
வெளி நாடு-2 போஸ்டல் கூப்பன்கள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

**குதூகல ஆரம்ப விழா**

சென்னை

## பிராட்வே டாக்கீஸில்

**மார்ச்சு மீ 30உ**

**சனிக்கிழமை முதல்**

# ஆனந்தாஸ்ரமம்

(தமிழ்)

**P. B. ரங்காச்சாரி, லக்ஷ்மிதேவி, N. S. கிருஷ்ணன்,**
**T. A. மதுரம், S. S. கொக்கோ**

முதலியோர் நடித்தது

**சேலம் ஸ்ரீ ரங்கர் பிலிம்ஸ், வெளியீடு.**

"JAGANMOHINI" Vol. XVII No. 4. Regd. No. M. 2210

# தலைவலிக்கு






ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும் விலக்குங்கள்

## அம்ருதாஞ்சனை

## உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது

## அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Ca iplicane, Madras.